விலை: 30.00
பக்கங்கள்: பதினாறு + பதினாறு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 27 ஞாயிற்றுக்கிழமை (10.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 173

## கூட்டு அரசாங்கத்தின் செயற்பாடு

# பசுவும் - எருமையும் சேர்ந்து பயணிப்பது போன்றதாகும்!

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த விமர்சனம்



(கொழும்பு) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஆட்சியமைப்பது என்பது பசு மாட்டையும் எருமை மாட்டையும் ஒன்றாக இழுத்துச் செல்வது போன்றதாகும். இதில் எவ்வித பொருத்தமும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடுமையாக விமர்சனம் செய்துள்ளார். (15-ம் பக்கம் பார்க்க...)

நாட்டில் 60 கிலோமீற்றர் வேகத்தில்

## கடுமையான காற்று வீசும் மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் கடும் காற்றுடன் கூடிய காலநிலை காணப்படுவதால் மணித்தியாலத்திற்கு 50 கிலோ மீற்றர் தொடக்கம் 60 கிலோ மீற்றர் வரையிலான வேகத்தில் காற்று வீசக்கூடுமென்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. அத்துடன் கடலில் பயணம் செய்வோரும், மீனவர்களும் மிக அவதானமாகச் செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காற்று டொனாடோ என்ற காற்றாக இருக்கலாமென தெரிவிக்கப்பட்டபோதிலும், அது தொடர்பாக இன்னும் உறுதி செய்யப் 16

கண்டியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில்

## பாதாள உலக கோஷ்டியை சேர்ந்த இருவர் உயிரிழப்பு

(கண்டி)

கண்டியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட இருவரும் பிரபல பாதாள உலக கோஷ்டியைச் சேர்ந்த மாகந்துர மதூஸ் என்பவரின் கையாட்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி, மடவளை என்ற இடத்தில் விசேட அதிரடிப்படைக்கும் பாதாள உலகக் கோஷ்டிக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் மரணமடைந்துள்ளனர்.

வத்தேகம பொலிஸ் பிரிவிலுள்ள மடவளை தெல்தெ 15

வவுனியாவில் 11 வயது பாடசாலை மாணவியை

## துஷ்பிரயோகம் செய்த தந்தை கைது

(வவுனியா)

வவுனியா நெளுக்குளம் பகுதியில் 11வயது பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்து நேற்று சிறுமியின் தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், 16

## சட்டவிரோத மீன்பிடிக்கு நடவடிக்கை எடுக்கக்கோரி

பகுதி நேர கடை அடைப்புக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கு கடற்கரை பகுதிகளை ஆக்கிரமித்து அங்கு சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கோரி நாளை திங்கட்கிழமை யாழ்.மாவட்டத்தில் பகுதி நேர கதவடைப்புக்கு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

மேலும் அன்றைய தினம் காலை 9 மணிக்கு சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்ட 15

கசிப்பு உற்பத்தி நிலையம்

## வவு.வில் முற்றுகை ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா ஓமந்தை பாலமோட்டைப் பகுதியில் நேற்று காலை 9 மணியளவில் வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையின் கீழ் செயற்படும் புலனாய்வுப் பிரிவினரால் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளதுடன் கசிப்பு உற்பத்திக்குப்பயன்படும் ஆயிர 15

## வயோதிப தம்பதியினரை வீடு புகுந்து தாக்கிவிட்டு

### பணம், தொலைபேசி கொள்ளை; உடுப்பிட்டி நாவலடியில் சம்பவம்

(கரணவாய்)

நள்ளிரவில் வயோதிப தம்பதியரின் வீடு ஒன்றிற்குள் புகுந்த கொள்ளையர்கள் அவர்களைத் தாக்கிவிட்டு பணம், தொலைபேசி என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்

நேற்று சனிக்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் உடுப்பிட்டி நாவலடி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வீட்டுக்குள் புகுந்த 15

கழகங்களுக்கிடையிலான

## கருத்து முரண்பாடு மோதலாக மாறியதில்

13பேர் வைத்தியசாலையில்

(கரணவாய்)

விளையாட்டு கழகங்களிற்கிடையே ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் 13 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை மதியம் 12 மணியளவில் வல்வெட் 15

## பாராளுமன்றத்தில் மீனவர் பிரச்சினை தொடர்பில் வாய் திறக்காத சுமந்திரன்

### போராடுகிறோம் என்று வீதியில் குந்துவது வேடிக்கை; கடற்றொழிலாளர் சங்கங்கள் கடும் விமர்சனம்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத்தில் மீனவர்கள் பிரச்சினை பற்றி பேசாமல் அரசோடு ஒட்டிக்கொண்டு இருந்துவிட்டு மக்களுக்காக போராடுகின்றோம் என்று வீதியில் குந்தி இருப்பது வேடிக்கையாக இருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறித்து கடற்றொழிலாளர் சங்கங்கள் விமர்சித்துள்ளன.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்தி 15

வவுனியாவிலுள்ள

## உணவகத்தில் தீ விபத்து

(வவுனியா)

வவுனியா குருமன்காட்டு சந்தியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் நேற்று மாலை 6 மணியளவில் திடீரென தீவிபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

குறித்த உணவத்தின் சமையல் அறையிலுள்ள சமை 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதில் ஐ.தே.க உறுதி

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதில் இன்னும் உறுதியாக இருப்பதாக ஐ.தே.க.யின் முன்னாள் பொதுச் செயலாளரும் தற்போதைய அமைச்சருமான கபீர் ஹாஷிம் தெரிவித்துள்ளார். கேகாலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஐ.தே.க.யானது கடந்த 2015ஆம் ஆண்டு சோபித தேரரின் முன்னிலையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வதாக வாக்குறுதியளித்தது. இதற்குத் தான் மக்கள் ஆணை கிடைத்தது. இந்த மக்கள் ஆணையை நிறைவேற்ற ஐ.தே.க தொடர்ந்தும் உறுதியாக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)


## "கண்ணீர் அஞ்சலி"



எமது கல்லூரியில் சித்திரபாட ஆசிரியராக கடமையாற்றும் திரு. நா.செந்தில்நாதன் அவர்களின் தாயார்

**திருமதி மனோன்மணி நாகையா**

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(4443)

## SB TRAVELS AND TOURS (Pvt) Ltd
(நேரடி முகவர்)

விசா விண்ணப்பப் படிவம் + போட்டோ 300/-

இந்தியா வீசா விண்ணப்பப்படிவம்-150/-
இந்திய வீசாவிற்கான போட்டோ-150/-
இந்தியாவிற்கான வீசாவினை நேரடியாக எமது நிறுவனத்தினூடாகவே பெற்றுக்கொள்ளலாம். இடைத்தரகர்கள் தேவையில்லை. நேரடியாக தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:0212229555/ 0212227666/0766911080, 81, 82, 83
இல.160, கோவில் வீதி, யாழ்ப்பாணம்
(C-2869)

## விற்பனைக்கு

சுன்னாகம் AGA Office வீதியில் ஒரு பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0761619517
(4444)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



08.06.2018 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 33ஆவது பட்டமளிப்பு விழாவில் **முதுகல்விமாணி** பட்டம் பெற்ற

**திரு.நீ.தவராசா**
(Dip.in.teach, BA, PGDE, MA.Med)

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் பல பட்டங்களை பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*வாழ்த்துவோர்:*
*கயிலாயபிள்ளை குடும்பம்*
*"கமலாம்பிகைபவனம்"*
*கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.*
(4452)

## உடனடி வேலைவாய்ப்பு

எமது உணவு நிலையத்திற்கு (Resturant) காலை மதிய உணவு ரொட்டி, சோட்டீஸ் வகைகள் மற்றும் உணவு வகைகள் சமையல் செய்வதற்கு அனுபவம் வாய்ந்த சமையல்காரர்கள் தேவை. ஆண், பெண் இரு பாலாரும்.

- உணவு பரிமாறுபவர் (Waiter) உடன் தேவை.

கைதடி வீதி, மருதனார்மடம்
(வலய கல்வி அலுவலகத்திற்கு முன்பாக)
0768524004, 0750341811
(4457)

## வேலைவாய்ப்பு

### விற்பனை பிரதிநிதி தேவை

இலங்கையின் முன்னனி நிறுவனம் ஒன்றிற்கு வடமாகாணத்திற்கான விற்பனை பிரதிநிதிகள் தேவை. மாதச்சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு
Mob: 0763591514
(ச-2870)

## சிறுநீரகம் தேவை

33 வயதுடைய நபர் ஒருவருக்கு B+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு:
0773472360,
0757658347
(4448)

## வேலையாட்கள் தேவை

சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ் வரும் வேலையாட்கள் தேவை

01. உணவு பரிமாறுபவர்கள்
02. சமையலறை உதவியாளர்
03. ரீ மேக்கர்
04. மரக்கறி வெட்டுபவர்
05. சுத்திகரிப்பாளர்
06. இடியப்பம் தயாரிப்பவர்

ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

50/6, வைமன் றோட், யாழ்ப்பாணம்
0777917753, 0755304521
(4461)

## பதவிவெற்றிடம்

பயிற்சி ஆசிரியர்

- # கேக் ஐசிங் (Cake Icing)
- # தையல் (Tailoring)
- # ஆரி எம்பிரொய்டரி (Aari Embroidery)
- # சமையல் (Cooking)

ஆகிய பயிற்சி நெறிகளுக்கான பகுதி நேர ஆசிரியர்கள் தேவை.
தகைமையுடையோர் தொடர்பு கொள்ளவும் T.P: 0772288243

YICSD College
இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(அண்ணாசிப்பு சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)
(ச-2872)

## பிரத்தியேக வகுப்பு

தரம் 6 முதல் O/L வரை கணிதம் பல வருடங்களாக அனுபவமிக்க ஆசிரியரால் தங்கள் வீடுகளுக்கு வந்து தனியாகவோ/ குழுவாகவோ கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0775893298
(4456)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### ஆனந்தராசா நற்குணராஜா
(தொழில்நுட்ப உத்தியோகத்தர், கருணாலயம், கரந்தன்)



தோற்றம் 06.09.1962 | மறைவு 08.06.2018

இல.52, குமாரவீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தராசா நற்குணராஜா அவர்கள் 08.06.2018 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்தராசா-மனோன்மணி தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்ற வில்வராஜா-பத்மாவதி தம்பதிகளின் மருமகனும், நந்தினி (நிர்வாக உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு கணவரும், பிரணவியின் (க.பொ.த (உ/த)-யா/இந்து மகளிர் கல்லூரி) அன்புத் தந்தையும், மகாதேவி (ஆசிரியர்-கண்டக்குளி முஸ்லிம் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புச் சகோதரனும், நடராசா, கதிரவேலு (தம்பு) அவர்களின் பெறாமகனும், கோவிந்தராசா, வரதராசா, கோபாலகிருஸ்ணன், ரவீந்திரன், ரஞ்சிதமலர், பிரபாகர், மனோகர் மற்றும் காலஞ்சென்ற சுதாகர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

52, குமார வீதி, நல்லூர் (4459) -குடும்பத்தினர்

## வீடு வாடகைக்கு

வைமன் றோட்டில் அமைந்துள்ள வீட்டின் மேல் மாடியில் அறைகள் வாடகைக்கு உண்டு.
(பெண்களுக்கு மட்டும்-பல்கலைக்கழக மாணவிகள், வைத்திய தாதியர் விரும்பத்தக்கது).
வீட்டின் கீழ்மாடி விசேட வைபவங்களுக்கு தங்குவதற்கு தனிப்பட்ட வீடாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
50/6, வைமன் றோட், நல்லூர்
0777917753, 0755304521
(4461)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes



08.06.2018 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் BA (Hons) பட்டம்பெற்ற

**சிற்றம்பலம் ரேவதி**

அவர்களுக்கு எமது அன்பான வாழ்த்துக்கள். மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.


**வாழ்த்துவோர்:-அக்கா, அத்தான்**
**கஜிஷனா**
புகையிரத வீதி, இணுவில் கிழக்கு, சுன்னாகம்
(4441)

A/L Student - We make you a Programmer in 6 Month!

சன்சக்தி ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட்

50,000/= இல் இருந்து

நியாயமான விலையில் உயர்தரத்துடன்
உங்கள் தேவைக்கமைய நேர்த்தியுடன்
பொருத்திக் கொடுக்கப்படும்



சூரியசக்தி மின்படல் கருவிகள்
பாவனையில் 50% சேமிப்பு!




HIKVISION's
GOLDEN PARTNER
விற்பனைக்கு மட்டும்!

4 Cameras + DVR + Harddisk + PowerSupply
10Amp + BNCs + DCs + 50m 3c2v + Powercable
= 25,500/= Only!

25,500/=

ஒழுங்குபடுத்தப்பட்ட பராமரிப்பு சேவையுடன்

SST SUNSAKTHY
TRADERS PRIVATE LIMITED
Informations Technology & Sercurity Systems Provider

உயர்தர மாணவர்களை மென்பொருள் உற்பத்தியாளர் ஆக்குகின்றோம்!

இல.: 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புக்கு. : 0212217994 / 0775527099 முகநூல் : sunsakthy traders private limited
இணையம். : sunsakthy.com மின்னஞ்சல். : info@sunsakthy.com

## சர்வாதிகார முதலாளியின் கீழ்

# அடிமையாக வாழ விரும்பும் சிலரே 20வது திருத்தத்தை எதிர்க்கின்றனர்

## ஜே.வி.பி. எம்.பி. விஜித ஹேரத் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சர்வாதிகார முதலாளியின் கீழ் அடிமையாக வாழவும் சேவை செய்யவும் விரும்பும் சிலர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படுவதை விரும்பவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவர்கள் தனித்து எழும்ப சக்தி இல்லாதவர்கள் எனவும் எப்போதும் பலமிக்க நபரின் தோளில் தொங்கி வாழ்பவர்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு மக்கள் விடுதலை முன்னணியின் சட்டத்தரணிகள் மட்டுமல்லாது எம்முடன் சம்பந்தமில்லாத சட்டத்தரணிகளும் பங்களிப்பை வழங்கினர்.

20 ஆவது திருத்தச் சட்டம் மூலம் நாடாளுமன்றத்தில் கையளிக்கப்படும் முன்னர் சில பிக்குமார் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களுடன் இந்தத் திருத்தச் சட்டம் குறித்து கலந்துரையாடி வருகின்றோம். அவர்கள் தற்போது உண்மை நிலைமையை புரிந்து வருகின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணி 1978 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை எதிர்த்து வருகிறது.

அதேபோல் பல கட்சிகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை எதிர்த்தே வந்துள்ளன.

1994 ஆம் ஆண்டு முதல் ஆட்சிக்கு வந்த அனைத்து ஜனாதிபதிகளும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஒழிப்பதாக வாக்குறுதி வழங்கியுள்ளனர் எனவும் விஜித ஹேரத் தெரிவித்தார். (இ-7)

## குற்றச்செயல்கள் அதிகரிப்பு

# பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் செயற்பாடுகளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுமையாக சாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் திணைக்களத்தின் நடவடிக்கைகளை திறம்பட முன்னெடுக்குமாறு ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபரை கடுமையாக எச்சரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி அண்மையில் பொலிஸ்மா அதிபரை தனது இல்லத்திற்கு அழைத்து, நாட்டில் நடந்து வரும் குற்றச் செயல்கள் குறித்து கேள்வியெழுப்பியுள்ளார்.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை குறித்து ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபரிடம் வினவியுள்ளார்.

பொலிஸ்மா அதிபரின் பலவீனமே குற்றச் செயல்கள் அதிகரிக்க காரணம் எனக் கூறியுள்ள ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபரை கடுமையாக எச்சரித்துள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி தலைமையிலான வைபவம் ஒன்றில் உரையாற்றும் போது ஜனாதிபதியின் செயற்பாடுகளை மறைமுகமாக விமர்சித்து கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது! (இ-7)

# காணாமல் போனோருக்கான பணியக அடுத்த அமர்வு திருகோணமலையில்

(கொழும்பு)

காணாமல் போனோருக்கான பணியகத்தின் அடுத்த அமர்வு திருகோணமலையில் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

காணாமல் போனோருக்கான பணியகம், பிரதேச வாரியாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சந்தித்து வருகிறது.


ஏற்கனவே, மன்னார், மாத்தறை, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் அமர்வுகளை நடத்திய காணாமல் போனோருக்கான பணியகம், எதிர்வரும் 13ஆம் திகதி திருகோணமலையில் அடுத்த அமர்வை நடத்தவுள்ளது.

திருகோணமலை கலாசார மண்டபத்தில் இந்த அமர்வு இடம்பெறவுள்ளதாகவும், இதில் பணியகத்தின் 7 ஆணையாளர்களும் பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மரண அறிவித்தல்

## ஆழ்வாப்பிள்ளை சிவலிங்கம்

**(உரிமையாளர் - லா பான்சி)**



வியாபாரிமூலை பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் சென். அன்ரனிஸ் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை சிவலிங்கம் நேற்று (09.06.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை - அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பூமணி, இராசலிங்கம், தவமணி, செல்வரட்ணம் மற்றும் செல்வவிநாயகம் (உரிமையாளர் - ஈஸ்வரி நகை மாடம், பிரதான வீதி, பருத்தித்துறை), பாலச்சந்திரன் (உரிமையாளர் - வாணி நகை மாடம், பிரதான வீதி, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயகுமார் (உரிமையாளர் - நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்), சுரேஸ்குமார் (Cheif MLT - யாழ்.போதனா வைத்தியசாலை), சுகந்தி (சிரேஷ்ட விரிவுரையாளர் - உயர்தொழில்நுட்ப நிறுவனம், தெகிவளை, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பவானி (ஆசிரியர் - யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ராஜினி (ஆசிரியர் - யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி), சுபாகரன் (Senior Quantity Surveyor/ Alucare PVT LTD Colombo) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரண்யா (மாணவி - கொ/கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்), அனுஷிகா (மாணவி - யா/வேம்படி மகளிர் கல்லூரி), அக்ஷிகா (மாணவி - யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), ஆருக்சியா (மாணவி - யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(4455)

'தில்லைவாசம்'
சென்.அன்ரனிஸ் வீதி, மானிப்பாய்.
(யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)

தகவல்:- குடும்பத்தினர்
குமார்-077 747 5166
சுரேஸ்-071 817 5807, சுகந்தி-071 8569962

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் **வி.பிரபாகரன்** அவர்களின் அன்புத் தாயார் **பத்மாவதி வயிரவப்பிள்ளை** அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



அமரர்
**பத்மாவதி வயிரவப்பிள்ளை**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**வாடகைக்கு**

நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் அருகில் 3 அறைகள், ஒரு குளியலறை, வாகனத் தரிப்பிடம் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (4453)

தொடர்புகளுக்கு
0779808956



# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தராக பணியாற்றும் **திருமதி நந்தினி நற்குணராஜா** அவர்களின் அன்புக் கணவர் **ஆ.நற்குணராஜா** அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயர் அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரர்
**ஆ.நற்குணராஜா**

நலன்புரிக் கழகம்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



## வைகுந்தநாதன் கௌசிகன்

**(பஸ் உரிமையாளர் WPND 1003)**
**(பழைய மாணவர் - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி A/L - 2010)**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28*08*1991 | 04*06*2018 |

யாழ்.மாவிட்டபுரம் மேற்கு கொல்லங்கலட்டி, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தை, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வைகுந்தநாதன் கௌசிகன் கடந்த 04.06.2018 திங்கட்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் கந்தசாமி வைகுந்தநாதன் - தவரஞ்சிதம் (சந்திரா) தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான குமரபுரம் பரந்தனை சேர்ந்த கந்தசாமி - சிவபூபதி தம்பதிகளினதும் காலஞ்சென்றவர்களான மாவிட்டபுரம் மேற்கு கொல்லங்கலட்டியைச் சேர்ந்த தனபாலசிங்கம் - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு பேரனும் வசிகரன் (அவுஸ்திரேலியா), பிரதீபன் (லண்டன்), காலஞ்சென்ற கௌரிதாசன் மற்றும் சிவகௌரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கயனி, ஜனனி, தயாநந்தன் ஆகியோரின் அருமை மைத்துனனும் தர்ஷிகன், மேனுயன் ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தேவிவாசம், துரை வீதி சந்தி, K.K.S வீதி, இணுவிலில் உள்ள அவரின் இல்லத்தில் நாளை (11.06.2018) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துரை வீதி சந்தி,
K.K.S வீதி,
இணுவில்.

தகவல்:- குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு: வைகுந்தநாதன் (தந்தை)
021 205 3384, 077 791 5677, 0094773019943

(4454)

# மக்களை சுரண்டி வாழும் நிலையில் மைத்திரி தலைமையிலான நல்லாட்சி

## முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விசனம்

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்கு தீர்வு தருவதாக தமிழ் மக்களுக்கு ரணில் மற்றும் மைத்திரி உறுதிமொழி வழங்கினார்கள். ஆனால் இன்று வரை அது நிறைவேற்றப்படவில்லை என தெரிவித்த முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் வேடிக்கையாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் வேடிக்கையாக உள்ளன. அர்ஜுன் அலோசியஸிடமிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பணத்தை பெற்றுக்கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது. 118 பேர் அவ்வாறு பெற்றுக்கொண்டிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டில் ஊழலை ஒழித்து நல்லாட்சியை உருவாக்குவதாக கூறிக்கொண்டு ஆட்சிப்பீடம் ஏறிய ரணில் - மைத்திரி அரசாங்கம் தற்போது என்ன செய்கின்றது.



மக்களை ஏமாற்றி நாட்டை படுபாதாளத்திற்கு கொண்டு சென்றுள்ளது. பொருளாதார ரீதியில் இனிவரும் நாட்கள் இலங்கைக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தப்போகின்றது. இதனால் மக்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்படும். நாட்டின் கடன் சுமையும் அதிகரிக்கும். அரசாங்கத்திற்கு என்று ஒரு கொள்கையில்லை. பொது மக்களை சுரண்டி வாழும் நிலையே நல்லாட்சி அரசிடம் காணப்படுகின்றது.

ஆட்சிக்கு வரும் போது நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகள் எதுவும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. தேசிய பிரச்சினைக்கு தீர்வு தருவதாக தமிழ் மக்களுக்கு ரணில் மற்றும் மைத்திரி உறுதிமொழி வழங்கினார்கள். ஆனால் இன்று வரை அது நிறைவேற்றப்படவில்லை. மாறாக இனங்களுக்கு இடையில் மோதலை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளே காணப்படுகின்றன.

இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு மாத்திரம் அல்ல நாட்டின் பொது பிரச்சினைகளுக்கும் தீர்வைத் தராது. அரசியல் இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்காக போலியான பிரசாரங்களைச் செய்து காலத்தை கடத்தும் செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றது. எனவே மக்கள் இனிவரும் தேர்தல்களில் நாட்டின் நலன் கருதி வாக்களிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 'வன்முறையை தவிர்ப்போம் போதையை ஒழிப்போம்' சமூக விழிப்புணர்வுச் செயற்றிட்டம்



(கரணவாய்)

"வன்முறையை தவிர்ப்போம்போதையை ஒழிப்போம்" எனும் சமூக விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்று பருத்தித்துறை நகரில் இடம்பெறறது.

வடக்கு-கிழக்கு சமூக நல்லிணக்கத்திற்கான அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வட மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், வி.சிவயோகன்,கே.தர்மலிங்கம், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அரியகுமார், பருத்தித்துறை நகர சபை தவிசாளர் இருதயராசா, கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் ஜங்கரன் ,ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், பிரதேசசபைகளின் உறுப்பினர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். (இ-60)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

## அமரர். செல்லையா செல்வரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



கடந்த 12.05.2018 சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளி விளக்கு அமரர் செல்லையா செல்வரத்தினம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 11.06.2018 நாளை திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதராய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.278, சில்வா வீதி,
வட்டக்கச்சி.

குடும்பத்தினர்.


# கடலுக்குள் மூழ்கிப் போகும் இலங்கையின் ஒரு பகுதி



(புத்தளம்)

புத்தளம் கடற்கரையோர பகுதியிலுள்ள மைதானம் ஒன்று கடலில் மூழ்கி வருவதாக தெரிய வந்துள்ளது.

மஹவெவ - மடட்கொட்டுவ கோல்டன் பீச் மைதானம் வேகமாக கடல் நீரில் மறைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.150 மீற்றர் தூரம் வரையிலான மைதானத்தின் பகுதி கடலுக்குள் சென்றுள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன்கடலுக்கு நேராக இருந்த வீதியும் முறையாக கடலுக்கு இரையாகி வர ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆபத்து தொடர்பில் கடல் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்கு பல மாதங்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டதாகவும் ஆனால்எந்தபலனும் இல்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

பருவ காலம் ஆரம்பித்துள்ளமையினால் கடல் அரிப்பின் வேகம் அதிகமாக உள்ளதென கூறப்படுகின்றது.

இந்நிலைமை காரணமாக பிரதேசத்திற்கு உள்ள ஒரே மைதானம் மற்றும் வீதி என்பன கடலுக்குள் மூழ்கும் ஆபத்துள்ளதாகமக்கள்கவலை வெளியிட்டுள்ளனர். (இ-7)

# இராசி பலன்

**10.06.2018**

வைகாசி 27, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 8.39 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 7.59 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | சந் | சூரி | புத |
| | | | சுக், ராகு |
| கேது, செவ் | | | |
| சனி | | குரு | |

சந்திராஷ்டமம்
அத்தம், சித்திரை

**மேடம்:** கனவு பலிதமுண்டு, ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கனிசமான ஆதாயம் கிடைக்கலாம், போசன சுகமுண்டு.

**இடபம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுபகாரிய செலவுகள் அதிகரிக்கும் நாள், சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சட்பவங்கள் இடம்பெலாம், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்:** அந்நியர்களின் உதவியுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**சிம்மம்:** ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் கைகூடும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், முயற்சிகளில் சிறு தடங்கல்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**துலாம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, கௌரவமான நாள்.


**விருச்சிகம்:** பகைவர்கள் விலகுவர், எடுத்தகாரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்:** உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, தொழில் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** உறவினர்களின் ஒத்துழைப்புக்கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் வரும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**மீனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வார்த்தைகளில் நிதானம் தேவை, பொருமையால் காரியம் சாதிக்க வேண்டிய நாள்.



இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவில் சப்பரத் திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வெகுவிமர்சையாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# “தீவகம்” நூல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய யாழ்.தீவக ஒன்றியத்தினால் ஆளவாழ்தல் அமைப்பின் ஒருங்கிணைப்புடன் என்.செல்வராஜாவின் படைப்பான “தீவகம்” நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் கோவில் வீதியிலுள்ள துர்க்கா மண்டபத்தில் ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்த தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

நூல் ஆய்வுரையை ஊடகவியலாளர் இ.தயானந்தா, யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கா.குகபாலன், ஆளவாழ்தல் வளவாளர் ஆசிரியர் க.மு.நித்தியானந்தன், வலம்புரி பத்திரிகை பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், எழுத்தாளர் நெடுந்தீவு மகேஸ் ஆகியோர் வழங்குவர். (இ-7)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய விளம்பி வருட மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். நாளை திங்கட்கிழமை விநாயகர் வழிபாடு இடம்பெறும். தொடர்ந்து 10 நாட்கள் தினமும் பூஜை வழிபாடு இடம்பெற்று எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறும். எதிர்வரும் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் கொடியிறக்கமும் இடம்பெறும். (இ

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும். 19.06.2018 செவ்வாய்க்கிழமை வேட்டைத்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தேர்த்திருவிழாவும் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ

# நற்கருணை வழிபாடும் திருப்பலியும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை தொடங்கி நடைபெற்று வருகிறது. 9 நாட்கள் நவநாட் திருப்பலிகள் இடம்பெற்று நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நற்கருணை வழிபாடும் மறுநாள் புதன்கிழமை பெருநாட் திருப்பலியும் சுற்றுப் பிரகாரமும் புனிதரின் ஆசிரும் இடம்பெறும். (இ

# பட்டக் கல்வி அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

IIS CITY Campus நிறுவனம் Pioneer Institute of Business and Technolgy நிறுவனத்துடன் இணைந்து குடாநாட்டில் பிரித்தானிய பட்டக்கல்வி யினை அறிமுகப்படுத்தும் நோக்குடன் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.ரில்கோ ஹோட்டலில் PIBT-IIS ஒருங்கிணைந்த புதிய பிரித்தானிய பட்டக்கல்வியின் அறிமுக நிகழ்வு IIS நிறுவனத்தன் பிரதம நிறைவேற்று அதிகாரி குலரத்தினம் விக்னேஷ் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் PIBT நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி கபிலா ரணசிங்கா, முன்னணி பாடசாலைகளின் அதிபர்கள், கல்வி தொழில் வழிகாட்டல் ஆலோசகர்கள், தனியார்துறை சார்ந்தவர்கள் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

# 31 மீனவர்களின் நினைவேந்தல்



(குருநகர்)

மண்டைதீவில் கொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 32ஆவது ஆண்டு நினைவினையொட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை புனித யாகப்பர் ஆலயத்தில் காலை 5.30 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து 31 மீனவர்களின் நினைவாலயத்தில் யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருண்ட் ரவிச்சந்திரன் தலைமையில் நினைவாலய வழிபாடுகள் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் கலந்து கொள்வார். (இ-106)

# பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டு இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வள்ளியம்மை மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ்.தனஞ்சன் தலைமையில் இடம்பெறும். இதில் அனைத்து பழைய மாணவர்களையும் தவாறது கலந்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ

# மார்க்கண்டு சுவாமிகளின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

மார்க்கண்டு சுவாமிகள் பிறந்த ஊரான பிரான்பற்றில் அமைந்துள்ள மார்க்கண்டு சுவாமிகள் ஆலயத்தில் மார்க்கண்டு சுவாமிகளினது குருபூசை நிகழ்வு நாளை மறுதினம் 12.06.2018 செவ்வாய்க்கிழமை சபையின் ஸ்தாபகர் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறும். அன்றைய தினம் மார்க்கண்டு சுவாமிகள் முன்பள்ளி, அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெறும். (இ

# மலக்கழிவுகள் அகற்றுவதற்குரிய நேரம் மாலை 6 மணிவரை மட்டுப்படுத்தல்

## மாநகர முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் மலக்கழிவுகள் அகற்றுவதற்குரிய நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்ட், மீறி செயற்படுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளார்.

மேற்குறித்த நேரத்தின் பின்னர் மலக்கழிவுகள் சேகரிக்கப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் காக்கைதீவில் உள்ள காக்கைதீவு மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையத்திலும் இந்த நேரத்துக்கு புறம்பாக இக்கழிவு பொறுப்பேற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

இரவு வேளைகளில் மலக்கழிவு சேகரிக்கப்படுவதும் அவை சட்டவிரோதமாக பொது நீர்நிலைகள் வாய்க்காலில் போடப்படுவது தொடர்பாகவும் முறைப்பாடு கிடைத்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணம பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பொறுப்பதிகாரிக்கும் இவ்விடயம் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அனுமதியின்றி இரவு வேளைகளில் மலக்கழிவுகள் எடுக்கப்படுவதற்கும் கொண்டு செல்வதற்கும் எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார். (இ-9)

# 40 வருடங்களாக எவ்வித புனரமைப்பின்றி வீதி



(யாழ்ப்பாணம்)

ஜே/349 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட வடமராட்சி வல்லியாவத்தை குறுக்கு வீதி சுமார் 40 வருடங்களுக்கு மேலாக எந்த விதபுனரமைப்புமின்றி காணப்படுகின்றது. இந்நிலையில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை உறுப்பினர் ச.இராமநாதன் அண்மையில் இவ்வீதியைச் சென்று பார்வையிட்டதோடு விரைவில் புனரமைத்துத் தருவதாக வாக்குறுதியளித்துள்ளார். (இ-60)

# மும்மொழித்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மும்மொழித்தினம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வித்தியாலய அதிபர் சு.திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, சிறப்புவிருந்தினராக யாழ்கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா உள்ளிட்ட விருந்தினர்கள் கலந்து கொள்வர். (இ



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் புதுமுகு மாணவர்களைப் பதிவு செய்யும் நிகழ்வு அண்மையில் கல்லூரி வளாகத்தில் பீடாதிபதி கலாநிதி எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள்:-சக்தி)




யாழ்ப்பாணம் YMCA இன் கொடிவாரம் 01.06.2018-06.06.2018 வரை நடைபெற்றது. இதில் கடந்த 2 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். YMCA இனை ஆரம்பித்த சேர்.வில்லியம் ருவைனத்தின் கல்லறையில் மரியாதை செலுத்தி இறைவழிபாடு செய்யப்பட்டது. இவ்வாரத்தில் மோட்டார் சைக்கிள் பவனி, பைபிள் புதிர்போட்டி, பாடசாலை மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை, இரத்ததான முகாம் போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றன. மேலும் யாழ்.அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட் மற்றும் வடக்கு மாகாண அமைச்சர்களான அனந்தி சசிதரன், கு.குணசீலன் ஆகியோருக்கும் YMCA ஆளுநர் சபை உபதலைவர், பொருளாளர், தேசிய YMCA பொதுச்செயலாளர் ஆகியோருக்கும் கொடி வழங்கப்பட்டது.






கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் நுழைவாயில் திறப்பு விழா அண்மையில் அதிபர் பே.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக சட்டத்தரணியும் பிரசித்திபெற்ற நொத்தாரிசுமான செல்வி ஞானலோஜினி சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 'தங்கத் தாரகை' நூல் வெளியீடு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் "தங்கத் தாரகை" எனும் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் இடம்பெறும். (இ)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 3ஆம் பாதம்
கி.பா: சூரிசெவ் 3 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/Lசொந்தத் தொழில்
தொ.இ: B/8641

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3ஆம் பாதம்
கி.பா: 19 செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:MBBSவைத்தியர்
தொ.இ: B/8643

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 13
உயரம்: 178cm
தகைமை/தொழில்: டிப்ளோமா B.ED அரசதொழில்
தொ.இ: B/8645

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:BSC Master in Development studies HND தனியார் தொழில்
தொ.இ: B/8646

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2 ஆம் பாதம்
கி.பா: 23
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:NCEB.COM
தொ.இ: G/8686

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 1ஆம் பாதம்
கி.பா: 51செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:Bio Medicene லண்டன் குடியுரிமை
தொ.இ: G/8691

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சுவாதி 2 ஆம் பாதம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில: HNDIT BSc படித்துக் கொண்டிருக்கிறார்
தொ.இ: G/8695

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: சூரிசெவ் 11 இல்
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/8696

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## விற்பனைக்கு

யாழ்.றக்கா றோட்டில் 3 பரப்பு காணியில் மேல்மாடி வீடு வீட்டுத்தளபாடங்களுடன் விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 0764734160 (4437)

## பகுதி நேர வேலைவாய்ப்பு

சந்தைப்படுத்தல், கணக்கியல் அத்துடன் நிர்வாகத்துறை சார்ந்த அனுபவத்தினையும் மும்மொழியிலும் உரையாடக்கூடியவருக்கு பகுதி நேர (Part time) தொழில் வாய்ப்பினை எதிர்பார்க்கின்றார்.
தொடர்புகளுக்கு:
077 027 5218 (4442)

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் புடைவைக் கடைக்கு வேலையாட்கள் தேவை.
அனுபவம் உள்ளவர்களும் அல்லது பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (4442)
தொடர்புகளுக்கு:
077 202 6295

## பளை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல:PA52

## கட்டட ஒப்பந்தகாரர் கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் தொழிற்சாலை வளாகத்துக்குள் உத்தியோகத்தர் இளைப்பாறும் அறையும், அலுவலகமும் இணைந்த வடிவில் 20'X10' அளவில் புதிதாக அமைத்துத் தருவதற்கு கட்டட ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களுடைய விண்ணப்பங்களை எதிர்வரும் 18.06.2018ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "தலைவர், பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி, பளை' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பு: கட்டட வரைபடம் மற்றும் மேலதிக விபரங்களை சங்கத் தலைமைப் பணிமனையில் கடமை நேரத்தில் பார்வையிட்டு கூறுவிலைகளை சமர்ப்பிக்கவும். (சி-2360)

தலைவர், பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
கண்டி வீதி, பளை.

# எனது காலத்தில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சித்தேன்

## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்



(கொழும்பு)

எனது ஆட்சிக் காலத்தில் பல்வேறு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அந்தக் காலத்தில் இனங்களுக்கு இடையில் மோதலை ஏற்படுத்த பல் வேறுதரப்பினர் பல சதித் திட்டங்களை செய்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மத நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மகிந்த ராஜபக்ஷ இதனைக் கூறினார். (இ-7)

# பாலிதவின் மகன் மறியலில்

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவின் மகன் யசோத ரங்கே பண்டாரவுக்கு நீதிமன்றம் விளக்கமறியல் உத்தரவு பிறப்பித்துள்ளது. நாளை மறுதினம் 12ஆம் திகதி வரையில் அவரை விளக்கமறியலில் வைக்க நுகேகொட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராச்சிகட்டுவ பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம்தெரிவித்துள்ளது.

ஸ்ரீஜெயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் போது அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சிலாபம் - புத்தளம் வீதியில் பங்கதெனிய, ஏகொட்டபிட்டிய சந்திப் பகுதியில் கடந்த 6ஆம் திகதி அதிகாலை யசோத ரங்கே பண்டார பயணித்த கப் வாகனம் வீடொன்றின் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

இதனால் நீர்ப்பாசன அமைச்சுக்குச் சொந்தமான வாகனம்மற்றும்அந்த வீட்டுக்கு சேதம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அர்ஜுன் அலோசியஸிடம்

# 15 இலட்சம் ரூபா பணம் பெற்ற அமைச்சர் சரத் பொன்சேகா

## ஊழல் எதிர்ப்புக்குழு தகவல்



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் சிக்கியுள்ள அர்ஜுன் அலோசியஸிடமிருந்து, அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கு 15 இலட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஊழல்எதிர்ப்பு அமைப்பின் அமைப்பாளரும், மாகாண சபை உறுப்பினருமான வசந்த சமரசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

அர்ஜுன் அலோசியஸின் 166 காசோலைகளின் மூலம் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஊழல் எதிர்ப்பு அமைப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவிற்கு 3.3 மில்லியன் ரூபாய் பணம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அதனை அவர் பலருக்கு பங்கிட்டு கொடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அலோசியஸ் தனக்கு ஒரு இலட்சம் ரூபா பணம் வழங்கியதாக பொன்சேகா அண்மையில் தெரிவித்திருந்த நிலையில், அவருக்கு 15 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்ற அதிரடி தகவலை ஊழல் எதிர்ப்பு அமைப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இதேவேளை, எதிர்காலத்தில் பலரது பெயர்களை வெளிப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியுடன் உள்ள கோபத்தை என்னிடம் காட்ட வேண்டாம்

## டிலானிடம் துமிந்த வேண்டுகோள்





(கொழும்பு)

ஜனாதிபதியுடன் இருக்கும் கோபத்தை தன்னில் வெளிப்படுத்த வேண்டாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் குறிப்பிட்டமையே அவர் என்மீது கோபம் கொள்வதற்கு காரணமாகும்.

அவர் தேசியப்பட்டியல் உறுப்பினராக இருந்து கொண்டு இவ்வாறு விமர்சிப்பது பொருத்தமற்றது. அடுத்த பொதுத் தேர்தலிலாவது மக்களின் வாக்கினால் பாராளுமன்றத்துக்கு வந்து காட்டுமாறுதேசியப் பட்டியல் உறுப்பினர் டிலான் பெரேராவுக்கு, தான் சவால் விடுப்பதாகவும், அதன் பின்னர் இவ்வாறான கருத்துக்களைக் கூறினால் பெறுமதியாக இருக்கும் எனவும் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது, முன்னாள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா துமிந்த திஸாநாயக்கவுக்கு வழங்கிய ஒரு அடியே பொதுச் செயலாளர் பதவியிலிருந்து அவரை மாற்றியதாகும் எனக் கூறியிருந்தமை குறித்து ஊடகவியலாளர்கள் வினவிய போதே அமைச்சர் துமிந்த திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார். (இ-7)




### நிகழ்வுகள்

- 1801 - சிவகங்கையின் சின்னமருது "ஆங்கிலேயர்களின் அதிகாரத்தை உதறித்தள்ளி சுதேசி மன்னர்களின் கீழ் ஜம்புத்தீவின் மக்கள் வாழவேண்டும்" என்ற தனது சுதந்திரப் பிரகடனத்தை திருச்சியில் வெளியிட்டார்.
- 1838 - ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் இன்வெரெல் என்ற இடத்தில் 28 ஆஸ்திரேலியப் பழங்குடிகள் ஆங்கிலேய குடியேறிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1886 - நியூசிலாந்தில் டரவேரா மலை தீக்கக்கியதில் 153 பேஎர் கொல்லப்பட்டனர்.
- 1898 - அமெரிக்கக் கடற்படையினர் கியூபா தீவில் தரையிறங்கினர்.
- 1945 - ஆஸ்திரேலியப் படைகள் புருணையை விடுவிப்பதற்காக அங்கு தரையிறங்கினர்.
- 1956 - இலங்கையில் அம்பாறையில் 150 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1984 - தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு சிறையை உடைத்து அரசியல் கைதியாக இருந்த நிர்மலா நித்தியானந்தனை விடுவித்தனர்.
- 1986 - யாழ்ப்பாணம், மண்டை தீவில் குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1990 - இலங்கைக்கு எதிரான விடுதலைப் புலிகளின் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தது.
- 1998 - முல்லைத்தீவு, சுதந்திரபுரப் பகுதியில் இடம்பெற்ற வான் தாக்குதலில் 25க்கும் மேற்பட்ட தமிழர் கொல்லப்பட்டனர்.
- 2003 - நாசாவின் ஸ்பிரிட் தளவுளவி செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்டது.
- 2006 - ஈழத்தமிழர் படுகொலைகள், 2006: மனனார், வங்காலையில் ஒரே குடும் பத்தை சேர்ந்த 4 தமிழர் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1832-எட்வின் அர்னால்டு, ஆங்கிலேயக் கவிஞர், ஊடகவியலாளர் (இ. 1904)
- 1962-செல்வம் அடைக்கலநாதன், இலங்கை அரசியல்வாதி, ஈழப்போராளி
- 1836-ஆந்த்ரே-மாரி ஆம்பியர், பிரான்சிய இயற்பியலாளர், கணிதவியலாளர் (பி. 1775)
- 1967-ஸ்பென்சர் ட்ரேசி, அமெரிக்க நடிகர் (பி. 1900)
- 2003-கே. முத்தையா, இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், பொதுவுடைமைவாதி, இதழாளர், எழுத்தாளர் (பி. 1918)

### இறப்புக்கள்

- கிமு 323 - பேரரசர் அலெக்சாந்தர், மக்கெதோனியப் பேரரசர் (பி. கிமு 356)
- 1580 - லூயிஸ் டி கமோஸ், போர்த்துக்கீசக் கவிஞர் (பி. 1524)
- 1836 - ஆந்த்ரே-மாரி ஆம்பியர், பிரான்சிய இயற்பியலாளர், கணிதவியலாளர் (பி

### சிறப்புநாள்

- அடிமை ஒழிப்பு நாள் (பிரெஞ்சு கயானா)
- படைத்துறையினரின் நாள் (ஜோர்தான்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 120 | 110 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 85 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 160 | 120 | 200 | 120 |
| தக்காளி | 150 | 160 | 160 | 130 | 160 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 35 | 40 | 40 |
| கோவா | 150 | 160 | 120 | 60 | 120 | 80 |
| கரட் | 200 | 400 | 300 | 230 | 300 | 220 |
| பூசணி | 40 | 20 | 30 | 20 | 40 | 40 |
| புடோல் | 100 | 120 | 100 | 70 | 100 | 100 |
| வாழைக்காய் | 60 | 30 | 40 | 35 | 80 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 160 | 180 | 100 | 140 | 130 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 85 | 100 | 100 |
| பாகற்காய் | 240 | 200 | 200 | 120 | 200 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 100 | 60 |
| பயற்றங்காய் | 150 | 100 | 80 | 100 | 120 | 120 |
| லீக்ஸ் | 250 | 400 | 180 | 240 | 300 | 220 |
| பீற்றூட் | 100 | 120 | 120 | 60 | 120 | 100 |
| கறிமிளகாய் | 180 | 250 | 180 | 70 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 250 | 100 | 140 | 100 | 200 | 150 |
| போஞ்சி | 250 | — | — | — | 400 | 200 |
| கத்தரிதம்புள்ள | 130 | 80 | — | — | 120 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 50 | 30 | 50 | 50 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 140 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 40-70 | 70 | 25-65 | 50-75 | 70 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | — | 200 | 120 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 140 | — | 240 | 250 |
| முள்ளங்கி | 120 | 120 | 120 | 40 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 10 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | 150 | — | — | 80 | 100 |

# பாதுகாப்பு தொடர்பில் நாம் யாரிடம் கேட்பது

## நாடாளுமன்றில் நளிந்த கேள்வி

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு குறித்து விவாதிக்கப்படும் நிலையிலும் வடக்கின் முக்கிய பிரச்சினைகள் குறித்து கேள்வி எழுப்பி வரும் நிலையில் பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சர் ஜனாதிபதியோ அல்லது இராஜாங்க அமைச்சரோ சபையில் இல்லாதது கண்டிக்கத்தக்கது என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் சைட்டம் மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான சட்டமூல திருத்த விவாதத்தின் போது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வடக்கின் இராணுவ ஆக்கிரமிப்புகள் குறித்து உரையாற்றிக் கொண்டிருந்த வேளையில் வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்புகள் குறித்து உரிய முப்படை அதிகாரிகளிடம் காரணம் கேட்க முடியாதுள்ளதாகவும், அவர்களிடம் பேச்சுவார்த்தைகளுக்கு நேரம் கேட்டாலும் பாதுகாப்பு அமைச்சரிடம் அனுமதிபெற்று வருமாறு கூருகின்றதாகவும் குற்றம் சுமத்தினார்.

இந்நிலையில் சபையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ, மிகவும் முக்கியமான குற்றச்சாட்டினை முன்வைத்து சாள்ஸ் எம்.பி. உரையாற்றி வருகின்றார்.

அதேபோல் தேசிய பாதுகாப்பு விடயம் குறித்து சபையில் விவாதம் இடம்பெற்று வருகின்றது. ஆனால் எதிர்க்கட்சி தரப்பில் முன்வைக்கும் காரணிகளுக்கோ, எழுப்பும் கேள்விகளுக்கு பதில் தெரிவிக்க பாதுகாப்பு அமைச்சரோ அல்லது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரோ சபையில் இல்லை. அப்படியாயின் நாம் எமது கேள்விகளை யாரிடம் கேட்பது. ஜனாதிபதியோ அல்லது இராஜாங்க அமைச்சரோ இல்லாது யாரிடம் பாதுகாப்பு குறித்து வினவுவது.

ஒரு முக்கியமான விவாதம் இடம்பெறுகின்றது. பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியோ, இராஜாங்க அமைச்சரோ இல்லாத நிலையில் இந்த விவாதம் நடத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை. பாதுகாப்பு விவகாரத்துடன் தொடர்பு இல்லாத ஒரு அமைச்சர் பதில் கூற முடியாது.

சபையை சமாளிக்க ஒரு சிலர் பதில் கூறினால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. தான் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறுவேன் என ஜனாதிபதி வாக்குறுதி கொடுத்துள்ளார். ஆனால் உரிய அமைச்சர் என்ற வகையில் அவர் சபையில் இல்லாத நிலைமை மிகவும் மோசமானது எனத் தெரிவித்தார்.

இதன் போது சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல பதில் கூறுகையில்,

*உங்களின் குற்றச்சாட்டை* நான் மறுக்கவில்லை, நியாயத்தை ஏற்றுக்கொள்கின்றேன். எனினும் உங்களின் கேள்வியை நான் உரிய இடத்திற்கு கொண்டு சேர்ப்பேன் என்ற வாக்குறுதியை கொடுக்கிறேன். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டுள்ள காரணத்தினால் ஜனாதிபதியிடம் நாம் தெரிவிக்கின்றோம் என சாள்ஸ் நிர்மலநாதனிடம் தெரிவித்தார். (இ-7)

# மத்தளவை விட்டு கடைசி விமான நிறுவனமும் வெளியேறுகின்றது

(கொழும்பு)

இலங்கையின் இரண்டாவது அனைத்துலக விமான நிலையமான, மத்தள மகிந்த ராஜபக்ஷ விமான நிலையத்துக்கான, சேவைகளை மேற்கொண்டு வந்த கடைசி விமான நிறுவனமும் அதனைக் கைவிட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்துக்கு பிளை டுபாய் நிறுவனம் மாத்திரமே வாரத்தில் நான்கு சேவையில் ஈடுபட்டு வந்தது. அந்த நிறுவனமும், சேவையை நிறுத்திக் கொள்ளப்போவதாக அறிவித்துள்ளது.

இதுபற்றி மத்தள விமான நிலைய முகாமைத்துவத்துக்கு ஏற்கனவே பிளை டுபாய் நிறுவனம் அறிவித்துள்ளது என்று, சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக அபயசிங்க தெரிவித்தார்.

போதிய பயணிகள் இல்லாமையால், வருமானம் கிடைக்கவில்லை என்பதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், விமானங்களில் பறவைகள் அடிக்கடி மோதுவதாகவும் முறையிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

கடைசி விமான நிறுவனமும் வெளியேறியதால், மத்தள விமான நிலையம் மூடப்படும் அபாயத்தில் இருப்பதாக அங்கு வேலை செய்யும் பணியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (இ-7)

# அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் 60 மில்லியன் ரூபா வழங்கியது

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகையாக இதுவரை 60 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாக தேசிய அனர்த்த நிவாரண மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மாவட்ட ரீதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரம்ப நிவாரண தொகையாக 10,000 ரூபா வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சமிந்த பதிராஜ தெரிவித்துள்ளார்.

இந்த உதவித் தொகையானது பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரதேச செயலாளர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய இயற்கை சுகாதார காப்பீட்டு திட்டத்தின் கீழ் உள் வாங்கப்பட்டுள்ள அனர்த்தங்களுக்காக 70 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் சமிந்த பதிராஜ தெரிவித்தார்.

இதேவேளை அனர்த்த முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்கவும் மீண்டும் அவர்கள் தங்களின் இருப்பிடங்களுக்கு செல்லும் போது அவர்களின் அனைத்து வாழ்வாதாரத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய அனர்த்த நிவாரண மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சமிந்த பதிராஜ தெரிவித்துள்ளார். (இ-7)

# மரண அறிவித்தல்

## அமரர் சின்னத்துரை அருந்தவராசா (தவம்)



(க-2867)

வீரபத்திரர் கோவிலடி, உடுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை அருந்தவராசா 08.06.2018 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை இளையாச்சியின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி தங்கப்பிள்ளையின் பாசமிகு மருமகனும், கமலாதேவியின் ஆருயிர் துணைவனும், வாசுகி (பிரான்ஸ்), சிந்துஜா (இலங்கை), ஜெயராம் (லண்டன்), அபிராமி (இலங்கை), ரகுராம் (கனடா), சிறீராம் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மராஜன் (பிரான்ஸ்), றுபீனா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், Dawud இன் பேரனாரும், காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, விக்னேஸ்வரி, சோதிமலர் (அவுஸ்திரேலியா), பூமலர் (லண்டன்), ராணிமலர் (கனடா), நாகேஸ்வரி (பிரான்ஸ்), நவமலர் (இலங்கை), நடராசா (கனடா), ஆனந்தராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், குணசிங்கம், சிவசாமி (அவுஸ்திரேலியா), கிருஷ்ணசாமி (கனடா), பாலகிருஷ்ணன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயரட்ணம், புஸ்பராணி (கனடா), கௌசல்யா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.06.2018 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரும்பாலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வீரபத்திரர் கோவிலடி, உடுப்பிட்டி.** தொடர்பு: 077 907 7055 **தகவல்: குடும்பத்தினர்.**

# இராணுவத்தை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த எமது அரசாங்கம் ஒருபோதும் தயாரில்லை

## அமைச்சர் விஜயதாஸ திட்டவட்டம்

(கொழும்பு)

யுத்தக் குற்றச்சாட்டில் இலங்கை இராணுவத்தை சர்வதேச நீதிமன்றத்தில் தண்டிக்கவோ, அல்லது சர்வதேச தரப்பு இராணுவம் மீது முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ளவோ எமது அரசாங்கம் ஒருபோதும் தயாரில்லை என உயர்கல்வி மற்றும் கலாசார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இராணுவத்தை தண்டிப்புக்கு கதவுகளை திறந்துவிட்ட மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இன்று எம்மை குறைகூறுவது வேடிக்கையானது எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தேசிய பாதுகாப்பு நிதியம் (திருத்த) சட்டமூலம் குறித்த இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வினவிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.



எமது ஆட்சியில் ஒருபோதும் இராணுவக் காட்டிக்கொடுப்பு இடம்பெறவில்லை. நான் நீதி அமைச்சராக இருந்த போது ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதிகள் மற்றும் ஜேர்மனிய இராஜ தந்திரிகள், பிரதிநிதிகள் என்னைச் சந்தித்து கலப்பு நீதிமன்றம் அமைக்க கேட்டதுடன், இராணுவத்தை விசாரிக்கும் நீதிமன்றப் பொறி முறை ஒன்றினை எவ்வாறு உருவாக்கப்போகின்றீர்கள், எப்போது, எந்த அடிப்படையில் கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன என்றும் கேள்விகளைக் கேட்டனர்.

எனினும் நாம் இராணுவத்தை ஒருபோதும் தண்டிக்கப் போவதில்லை. காட்டிக் கொடுக்கப் போவதில்லை. இராணுவத்தைக் கையாளும் விதத்தில் தெரேசா மே என்ன யுக்திகளை கையாண்டாரோ அதே கொள்கையை தான் நாமும் பின்பற்றப் போகின்றோம் என்பதை உறுதியாகத் தெரிவித்தேன். யுத்தக் குற்றம் என்ற குற்றச்சாட்டை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

எனினும்இராணுவத்தைத் தண்டிக்கப்போவதாகக் கூறும் நபர்கள் கடந்த காலத்தில் இராணுவத்தைத் தண்டிக்க கதவுகளைத் திறந்தனர் என்பதை மறந்துவிடக் கூடாது. யுத்தம் முடிவுக்கு வந்து 48 மணித்தியாலம் கடக்க முன்னர் ஐக்கிய நாடுகள் செயலாளரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி நிலைமைகளை கூறினீர்கள்.

அதன் பின்னரே நாட்டில் தருஸ்மான் குழு செயற்பட ஆரம்பித்தது. அதன் பின்னரே இறுதி யுத்தத்தில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. சர்வதேச விசாரணை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற அழுத்தமான கோரிக்கையும் அதன் பின்னரே எழுந்தது.

இத்றகு முன்னர் இலங்கையில் சர்வதேச தலையீடுகள் ஏற்படும் நோக்கில் ரோம் உடன்படிக்கை செய்து கொள்ள அழுத்தம் கொடுக்கப்பட்ட போது அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க உடன்படிக்கையில் பாரதூரமான தன்மைகளைக் கவனத்தில்கொண்டு உடன்படிக்கையை கைச்சாத்திடாது நிராகரித்தார்.

எனினும் அதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் தான் பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. அதன் பின்னரே சர்வதேசம் எம்மை நெருக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆரம்பித்தது.

எவ்வாறு இருப்பினும் எமது ஆட்சியில் எமது இராணுவத்தின் மீதான பொய்யான குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நிராகரித்து சர்வதேசம் எம்மை ஏற்றுக்கொள்ளும் நகர்வுகளை முன்னெடுத்துள்ளோம். இனியும் நாம் எமது இராணுவத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்போம். அதில் எந்தச் சந்தேகமும் எழப் போவதில்லை. எனினும் முன்னைய ஆட்சியாளர்கள் எம்மை விமர்சிப்பது வேடிக்கையானதாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இராஜாங்க அமைச்சருக்கு எந்த அருகதையுமில்லை

## வியாழேந்திரன் குற்றச்சாட்டு

(ஏறாவூர்)

இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தன்மீது தேவையற்றதும் பொய்யானதுமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் இருப்பினை கேள்விக்குறியாக்கும் வகையிலேயே புல்லுமலை பகுதியில் குடிநீர் போத்தல் உற்பத்தி நிலையம் அமைக்கப் பட்டுவருகின்றது.

போலியான கருத்துக்களை அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பத்திரிகை அறிக்கைகள் மூலம் வெளியிட்டுவருகின்றார்.

புல்லுமலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் மக்கள் செய்த ஆர்ப்பாட்டம் மக்கள் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் எனக்கு விடுத்த அழைப்புக்கு ஏற்பவே நான் அந்த இடத்திற்குச்சென்றேன்.

மக்களின் பிரச்சினைகளை செவிமடுத்து அவர்களுக்கு தீர்வினைப்பெற்றுக் கொடுப்பதே மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களின் கடமை அதனை இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் விமர்சிப்பதற்கு எந்த அருகதையும் இல்லை.

அந்த ஆர்ப்பாட்டத்தில் 200 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். ஆனால் அதில் 25 இற்கும் குறைவானவர்களே கலந்து கொண்டதாக பொய்யான கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

அவரின் கருத்துகள் தொடர்பில் வன்மையான கண்டனத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என வியாழேந்திரன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முஸ்லிம்களின் கோபத்தைத் தணிக்க மகிந்த அரசு தவறிவிட்டது உண்மையே

## தம்பி கோத்தபாய சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மகிந்த அரசாங்க காலத்தில் இந்நாட்டிலுள்ள முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கோபங்களை தணிப்பதற்கு தான் உட்பட அதிகாரிகளுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் பல இருந்ததாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மகிந்த அரசாங்கத்தின் இறுதிக் கட்டத்தில் முஸ்லிம்கள் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு முயற்சித்தனர் என்பது இரகசியமல்ல. இதற்காக வேண்டி உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் பல முயற்சிகளை முன்னெடுத்தனர்.

சமூகத்துக்குள் பரவிய பல்வேறு விதமான பொய்யான பிரசாரங்கள், முஸ்லிம்களைக் கோப மூட்டக் கூடிய நடவடிக்கைகள் என்பன திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டன. இதன் மூலம் ராஜபக்ஷ ஆட்சியின் மீது முஸ்லிம்களுக்கு குரோதத்தை ஏற்படுத்த ஒரு குழு முயற்சி செய்தது.

உண்மை நிலை அவ்வாறல்ல. இதன் பின்னால் உள்ள உண்மை நிலையை எம்முடன் நெருக்கமாக இருந்த முஸ்லிம் தலைவர்கள் விளங்கியிருந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட நிலைமைகளுக்கு நாம் சில நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியிருந்தது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு செய்யாதிருந்ததனால், இதனைப் பயன்படுத்திக் கொள்பவர்களுக்கு வாய்ப்பு உருவாகியது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கிரக மாற்றம் மகிந்த ராஜபக்ஷவுக்கு அதிக நன்மைகளை ஏற்படுத்தியுள்ளது

## கொழும்பு ஊடகம் தகவல்



(கொழும்பு)

தற்போது ஏற்பட்டுள்ள கிரக மாற்றம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அதீத நன்மைகளை ஏற்படுத்தவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஏற்பட்டுள்ள கிரக மாற்றம் அரசியல்வாதிகளின் நன்மை. தீமைகளை தீர்மானிக்கும் காரணியாக அமைந்துள்ளது.

இவ்வாறான கிரக மாற்றம் காரணமாகவே மகிந்த தனது பதவியை இழந்திருந்தார். எனினும் அவருக்கு தற்போது நல்ல நேரங்கள் ஆரம்பித்துள்ளன.

2018ஆம் ஆண்டுக்கு பின்னர் மகிந்தவுக்கு சாதகமான பலன்கள் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டிற்கு பின்னர் தனக்கு நல்ல நேரம் ஆரம்பிக்கவுள்ளதாக பிரபல ஜோதிடர் கணித்துள்ளதாக மகிந்த தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் கலந்து கொண்ட சந்தர்ப்பத்தில் மகிந்த இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது அடுத்த பிரதமர் நீங்களா? என பலரும் கேள்வி எழுப்பிய போதும், மகிந்த மௌனமாகச் சென்றதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சமகால அரசாங்கம் தற்போது ஸ்திரமற்ற நிலையிலேயே காணப்படுகிறது. இந்நிலையில் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மகிந்தவின் எழுச்சி ரணில் அரசாங்கத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

இந்நிலையில் பலமான கிரக பலனுடன் மகிந்த மீண்டும் களமிறங்கினால் பாரிய தொரு வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் என அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# உடன் அமுலுக்கு வரும் வகையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆறு பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

உடன் அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் உள்ளிட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் 6 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கு அமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த இடமாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய கண்டி பிரதேசத்திற்கு பொறுப்பாகவிருந்த பொலிஸ் அத்தியட்சகர் கே.பீ.கீர்த்தி ரத்ன மாத்தளை பிரதேசத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

கம்பளையில் பணிபுரிந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜீ.ஜீ.என் ஜயசிங்க களுத்துறைக்கும், களுத்துறையில் கடமையாற்றிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜீ.எம். டீ.யூ.பீ.பலிஹவடன கம்பளைக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.டீ.டீ சேனநாயக்க மாத்தறையிலிருந்து இரத்தினபுரிக்கும், உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே.டீ.சந்திரபால அம்பாறையிலிருந்து கந்தளைக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

மேலும் அநுராதபுரத்தில் பணிபுரிந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் விஜித் அல்விஸ் கண்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் மனக்குறைகளுக்கும் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு





(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் பிரச்சினைகளுக்கும் மனக்குறைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்புவாய்ந்த சகல நிறுவனங்களும் தமது கடமைகளைப் புரிந்துணர்வுடனும் மனிதாபிமானத்துடனும் நிறைவேற்றவேண்டியது அவசியம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை பணியாளர்கள் எதிர்நோக்கும் சில பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்பதுடன் அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகளும் திட்டங்களும் முறையாக அமுல்படுத்தப்படுவதற்கு அந்நிறுவனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் இன்றியமையாதவையாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.



ஊவா மாகாண வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக வள நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் பிற்பகல் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தின் ஹாலி- எல பிரதேச செயலாளர் பிரிவில் ஐந்து மாடிகளை உடைய சகல வசதிகளையும் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த புதிய வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக வள நிலையத்திற்கான செலவு ரூபா 540 மில்லியன்களாகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக பணியாளர்களைப் பயிற்றுவித்தல், நலன்புரி சேவைகளைப்பெற்றுக்கொடுத்தல், வெளிநாட்டுப் பணியாளர்களைப் பதிவு செய்தல் உள்ளிட்ட சேவைகளை இங்கு பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி நாட்டிற்கு அந்நிய செலாவணியைப் பெற்றுத் தரும் வெளி நாடுகளில் பணி புரியும் இலங்கையர்களுக்கு நலன்புரி சேவைகளை வழங்குவதும் சிறந்த மனநிலையுடன் பணி புரிவதற்குத் தேவையான சூழலை உருவாக்கிக் கொடுப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று தெரிவித்தார்.

இதன்பொருட்டுதற்போதைய அரசாங்கத்தினாலும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் நலன்புரி தேவைகளை நிறைவேற்றும் சகல நிறுவனங்களும் தமது கடமைகளை உரியவாறு நிறைவேற்றும் அதேவேளை மனிதாபிமானத்தை மதித்து செயற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன, பிரதி அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஊவா மாகாண ஆளுநர் ஆரிய பீ.ரெக்கவ, முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, முன்னாள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொதுமுகாமையாளர் கே.ஓ.டீ.டீ பெர்னாண்டோ உள்ளிட்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பீடம் மூடல்

(கொழும்பு)

கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தின் தொடர்பாடல் மற்றும் வணிகக்கல்வி கற்கைகள் பீடம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. எதிர்வரும் 09 ஆம் திகதி வரை குறித்த கற்கை நெறிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பீடாதிபதி குமுதினிதேவி சந்திரகுமார் தெரிவித்தார்.

கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் இயங்கி வரும் தொடர்பாடல் மற்றும் வணிகக்கல்வி கற்கைகள் பீடத்தின் மாணவர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்து கடந்த மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் கற்றல் நடவடிக்கைகளை பகிஷ்கரித்து வந்தனர்.

எனினும் இதனை முடிவுக்கு கொண்டு வர பல்கலைக்கழகம் பல கட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட போதிலும் மாணவர்கள் தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கையிலிருந்து விலகியிருப்பதனால் தொடர்பாடல் மற்றும் வணிகக் கல்வி கற்கைகள் பீடத்தின் சகல கல்வி ஆண்டு கற்கை நெறிகளும் (YEAR 1,2,3,4, SEMESTER 2) நேற்று முதல் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாகவும் பீடாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# புனர்வாழ்வு பெற்றவர்களுக்கு விசேட நிதித்திட்டம் வேண்டும்

## நாடாளுமன்றில் டக்ளஸ் வலியுறுத்து



(கொழும்பு)

யுத்தத்தினால் நேரடியாக பாதிப்படைந்து நலிவடைந்த மக்களினதும், புனர்வாழ்வு பெற்றவர்களினதும் வாழ்வாதாரத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் விசேட நிதித்திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு நிதிய திருத்தச் சட்டமூலம் தொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வியட்நாம் யுத்தத்தில் ஈடுபட்ட அமெரிக்கப் படையினருக்கு அமெரிக்க அரசு விஷேட நிதித்திட்டம் ஒன்றை உருவாக்கியதாகவும் அதே போல இலங்கையிலும் யுத்தத்தில் ஈடுபட்ட படையினருக்கும் விஷேட நிதியுதவித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் இந்தச் சபையிலே எழுப்பப்பட்டுள்ளன. ஒன்றை மட்டும் கவனத் தில் கொள்ள வேண்டும். அமெரிக்கா மற்றும் வியட்நாம் ஆகியன இரு வேறு நாடுகளாக இருந்து யுத்தத்தில் ஈடுபட்டன.

ஆனால் இலங்கையில் நடந்த யுத்தம் ஒரே நாட்டுக்குள் நடந்த யுத்தம் என்பதை கருத்தில் கொள்ளவேண்டும்.

நடந்து முடிந்த யுத்தத்தில் பெருந்தொகையான மக்கள் தமது உயிர்களையும் உடமைகளையும் இழந்து பெருந்துயரங்களை சந்தித்திருந்தார்கள். அந்தவகையில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் புனர்வாழ்வு வழங்கப்பட்டவர்களுக்கும் விஷேட நிதித் திட்டத்தை அரசு உருவாக்க வேண்டும்.

அத்துடன் இத்திட்டத்தினூடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த வாழ்வாதார கட்டுமானங்களை முழுமையாக கட்டியெழுப்பி அதனூடாக அவர்களது வாழ்க்கை முறையை மாற்றியமைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சுதர்ஷினிக்கு ஏன் வாக்களிக்கவில்லை

## பிரசன்ன ரணதுங்க விளக்கம்



(கொழும்பு)

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கட்டான தொகுதியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு விடுத்த அச்சுறுத்தல் மற்றும் வேறு சில காரணங்களின் அடிப்படையிலேயே பிரதி சபாநாயகர் பதவிக்கு போட்டியிட்ட சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளேவுக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் அதிகாரபூர்வமாக இணைந்தால் மட்டுமே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களை ஏற்றுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர், சபாநாயகர் பதவி மற்றும் பிரதி சபாநாயகர் பதவிகளுக்கு கூட்டு எதிர்க் கட்சி போட்டியிடவில்லை என்பதால், இம்முறையும் வாக்கெடுப்பில் கலந்துக் கொள்வதில்லை எனத் தான் தீர்மானித்ததாகவும் பிரசன்ன தெரிவித்தார்.

சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளேவுக்கு இம்முறை வாக்களித்திருந்தால், அது பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்த மக்களுக்குச் செய்யும் துரோகம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)



# மருந்தகங்கள் அனுமதிப்பத்திரங்களின்றி முல்லை.மாவட்டத்தில் இயங்குகின்றன

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் சிறந்த அனுமதிப்பத்திரங்கள் இன்றி மருந்தகங்கள் இயங்குவதாகவும் இதேவேளை சரியான தொழில் சார்ந்த மருந்தாளர்களும் அங்கு வேலைக்கு அமர்த்தப்படவில்லையென வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாகாண சுகாதார அமைச்சர் நோயாளி போல் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சென்று பார்வையிட்டுள்ளார். அத்துடன் மாவட்ட வைத்தியசாலை மற்றும் அங்கு இயங்கும் மருந்தகங்களை சோதனை செய்து சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை மற்றும் மாவட்டத்தில் இயங்குகின்ற மருந்தகங்களுக்கு மக்களோடு மக்களாகச் சென்று அங்கு நடைபெறும் செயல்களை அவதானித்துவிட்டு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்துள்ள கருத்துக்களில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, மாதாந்த சிகிச்சை பகுதி உள்ளிட்ட பகுதிகளில் நோயாளர்கள் என்ன பிரச்சினையை எதிர்நோக்குகின்றார்கள். சுகாதாரத் துறையின் ஊழியர்களின் சேவை எவ்வாறு இருக்கின்றது போன்ற விடயங்களை கவனிக்க வேண்டும் என்பதற்காக வைத்தியசாலைக்கு சாதாரண நோயாளி போன்று உத்தியோகபூர்வமற்ற விதத்தில் பயணத்தை மேற்கொண்டிருந்தேன்.

உத்தியோக பயணத்தின் போது பெரும்பாலான குறைகள் அங்கு பார்க்கப்படுவதில்லை. நடைமுறையில் உள்ள பிரச்சினைகளை நேரடியாக கண்காணிக்க வேண்டும் என்பதற்காகச் சென்றேன்.

இதன்போது முக்கியமான பணிகள் அவதானிக்கப்பட்டு தேவையான அறிவுறுத்தல்கள் என்னால் வழங்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஓரளவிற்கு முன்னேற்றம் காணப்படுகின்றது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற எந்த மருந்தகங்களும் சரியான முறையிலான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமலும்வைத்தியரின்ஆலோசனைச்சீட்டை அல்லது மருந்துச் சிட்டை இல்லாமல் பொது மக்களுக்கு மருந்து விநியோகிப்பது போன்ற முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அவற்றையும் பரிசோதிக்க வேண்டிய தேவை இருந்ததால் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஏழு மருந்தகங்களுக்கு மேல் நேரடியாக விஜயம் செய்த நிலையில் எந்தவொரு மருந்தகமும் சரியான அனுமதிப்பத்திரமும்இல்லை. சரியான தொழில் சார்ந்த மருந்தாளர்கள் அங்கு இருக்கவில்லை. ஆனால் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மருத்துவத்துறையுடன் சம்பந்தப்படாதவர்கள் மருந்தகங்களில் காணப்படுகின்றார்கள். ஒரு சில மருந்தகங்கள் மருந்துச் சிட்டை இல்லாமலே என்னுடன் வந்த ஊழியர்களுக்கு மருந்தினை விற்றிருக்கின்றார்கள்.

ஒரு மதுபானசாலைக்கு அனுமதிபெறவேண்டும் என்றால் ஜனாதிபதி வரைக்கும் செல்லவேண்டிய இறுக்கமான கட்டுப்பாடுகள் அரச திணைக்களங்களில் இருக்கும் போது உயிர்காக்கும் மருந்துகள் விற்கப்படுகின்ற மருந்தகங்கள் சரியான அனுமதியில்லாமல் தாங்கள் நினைப்பவர்கள் எல்லாம் ஆரம்பித்து மருந்தகம் நடத்துவது என்பது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பரிசோதிக்கப்பட்ட சகல மருந்தகங்களுக்கும் எதிராக சரியான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். சரியான அனுமதிப்பத்திரம் இல்லாமல் இயங்குபவர்களுக்கு நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு கட்டுப்படுத்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்தெரிவித்துள்ளார்.(2-281)




# சுற்றுலாத்துறை தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மாகாணசபை முன்னெடுத்துள்ளது

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

நாட்டில் இடம்பெற்று முடிந்த சுமார்30 ஆண்டுகால தொடர்ச்சியான போரின் விளைவாக வடபகுதியின் வளங்கள் அனைத்தும் முடக் கப்பட்ட நிலையில் எமது மக்கள் எதுவித அபிவிருத்தி களுமின்றி வாழ வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலையில்வீடுகளுக்குள்முடங்கிக் கிடக்க வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலை மாற்றப்பட்டு மக்கள் சுயமாக இயங்கக் கூடிய இன்றைய நிலையில் சுற்றுலாத்துறை தொடர்பான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை வடக்கு மாகாண சபை மேற்கொண்டு வருகின்றது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் மாகாண குறித்தொடுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதியின் கீழ் 2017 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி மூலத்தில் அழகுபடுத்தப்பட்ட பேசாலை கடற்கரைப் பூங்கா பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பேசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,


சுற்றுலாத்துறைக்கான நியதிச் சட்டங்கள் அனைத்தும் தயாரிக்கப்பட்டு முறையாக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த 07.06. 2018 இல் சுற்றுலாத்துறை பணியகம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்திருக்கின்றோம். இப் பணியகத்தின் வழிகாட்டலின் கீழ் வடபகுதியில் காணப்படும் இயற்கைவளம் நிரம்பிய சுற்றுலாத்தளங்கள் மற்றும் கடற்கரை, பொழுதுபோக்கு மையங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு சுற்றுலாத்துறை மேம்படுத்தப்படவிருக்கின்றது.

இன்று (நேற்று) பேசாலை கடற்கரையில் திறந்து வைக்கப் படுகின்ற இந்த கடற்கரைப் பூங்கா இப் பகுதியில் வாழும் மக்களுக்கும் இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் மாலை வேளைகளில் அமர்ந்திருந்து காற்று வாங்குவதற்கும் நடைப் பயிற்சி, தேகப் பயிற்சி போன்ற பயிற்சிகளைச் செய்வதற்கும் ஏற்றவையாக இரு க்கும்.

ஒவ்வொரு சுற்றுலா மையமும் அந்தந்தப் பகுதிகளுக்கு வருவாயைத் தேடிக் கொடுப்பதுடன் பொருளாதார நிலையில் நலிந்த நிலையிலுள்ள அப் பகுதி மக்கள் தமது பொருளாதாரத்தை விருத்தி செய்யக்கூடிய வகையில் ஒழுங்குகளை மேற்கொள்ள முடியும். உதாரணமாக பேசாலை கடற்கரைப் பூங்காவில் மக்கள் அதிகம் கூடுகின்ற போது இப் பகுதிகளில் சுண்டல், கடலை வியாபாரம் மற்றும் சிற்றுண்டி வியாபாரங்கள், தேநீர் வியாபாரங்கள் போன்ற பல வர்த்தக நடவடிக்கைகளுக்கு நல்ல மவுசு ஏற்படும். அதே போன்று இவ்வாறான கடற்கரைகளில் உள்ள தனியார் நிலங்களில் அந்த நிலச் சொந்தக்காரர்கள் அழகான சிறிய குடில்களை சட்டப்படி அமைத்து அதனை சுற்றுலாப் பயணிகளின் பாவனைக்காக குறைந்த வாடகைக் கட்டணத்தில் கையளிக்கின்ற போது சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும். வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்ட பின்னர் 1 1/2 மணித்தியாலங் களில் யாழ்ப்பாணத்திலிருந்து பேசாலைக்கு வரக் கூடியதாக இருக்கின்றது. அதேபோன்று பேசாலை - கொழும்புப் பிரயாணமும் இலகுவாக்கப்பட்டிரு க்கின்றது. இதனால் மீன்களைக் கொள்வனவு செய்ய வருகின்ற கூலர் ரக வாகனங்களும் ஏனைய வாகனங்களும் விரைவாக கடல் உணவுகளை எடுத்துக் கொண்டு கொழும்பு நோக்கிச் செல்லமுடியுமாகஇருக்கின்றது.

வீதிகள் செப்பனிடப்பட்ட பின்னர் பிரயாணம் இலகுவாக்கப்பட்டது. ஆனால் வீதி விபத்துக்கள் இங்கு அதிகரித்துள்ளன என்று அறிகின்றேன். இது கவலைக்குரியது. சாரதிகள் வீதி ஒழுங்குகளை முறையாகக் கவனிக்காத காரணத்தினாலேயே இவ் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

சுற்றுலா மையங்கள் கூடுதலாகக் காணப்படுகின்ற இந்த மன்னார்ப் பிரதேசத்தில் இன்னும் பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள போதும் உரிய நிதி மூலங்கள் கிடைக்காமையால் அவை தடைப்பட்டுள்ளன. இவ் வேலைகள் நிச்சயமாக அடுத்த அடுத்த ஆண்டுகளில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்தார். (2)



வவுனியாவில் தடை செய்யப்பட்ட வீதி பொதுமக்களின் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த 30 வருட காலமாக நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக வவுனியா நீதிமன்றத்திற்கும் சிறைச்சாலைக்கும் இடையே சந்தை சுற்றுவட்ட வீதிக்குச் செல்லும் வீதி ஒன்று பாவனைக்குத் தடை செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது நகரசபைக்கு தவிசாளர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இவ்வீதி மக்களின் பாவனைக்குத் திறந்து விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நகரசபைத்தவிசாளர் இ.கௌதன் மற்றும் நகரசபை நிர்வாக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் சென்று அவ்வீதியிலுள்ள தடைகளை அகற்றி இன்று முதல் மக்களின் பாவனைக்கு குறித்த வீதியைத் திறந்து விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் சந்தை சுற்றுவட்ட வீதியில் காணப்படும் போக்குவரத்து நெரிசலைக்கட்டுப்படுத்தி இலகுவாக்கப்பட்டுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

# சுவாசப் பாதுகாப்பு அங்கிகள் பொலிஸாரினால் வழங்கிவைப்பு



(குருமன்காடு)

வவுனியா பொலிஸார்தென் பகுதி மக்களுக்கு சுவாச பாதுகாப்பு அங்கிகள் வழங்கி வைத்துள்ளனர்.

தென்மாகாணத்தின் மாத்தறை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள இன்புளுவன்சா நோய்த்தாக்கத்தினால் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களின் பாதுகாப்பிற்கான சுவாச பாதுகாப்பு அங்கிளை வழங்கி வைத்துள்ளனர்.

வவுனியா மன்னார் பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனிடம் மாத்தறை பிரதேச ஊடகவியலாளர்கள் விடுத்த கோரிக்கைக்கமைய வவுனியா வர்த்தகர் சங்கத்தின் மூலமாக 5 ஆயிரம் சுவாச பாதுகாப்பு அங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதனை வவுனியா வர்த்தகர் சங்கத்தினரிடம் இருந்து பெற்றுக்கொண்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பொலிஸ் உத்தியோகத்தரின் ஊடாக குறித்த பொருட்களை மாத்தறை மாவட்ட ஊடகவியலாளர்களிடம் வழங்கிவைத்திருந்தார்.(2-250)

# வவுனியாவில் குழந்தை கடத்தலுடன் தொடர்புடைய எட்டுப் பேர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் அண்மையில் தாயுடன் இருந்த குழந்தையை கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் 8 பேரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பத்துடன் தொடர்புடைய இரு பெண்கள் மற்றும் ஆணொருவர் அண்மையில் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி தலைமையிலான 12 பேர் அடங்கிய பொலிஸ் பிரிவினர் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் 8 பேரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவர்களில் 6 பேர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் முல்லைத்தீவு மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்களாவர். கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் பிரகாரம் குழந்தையை கடத்துவதற்காக குழந்தையின் தந்தையார் வவுனியாவைச் சேர்ந்த நபரினூடாக பணப் பேரம் பேசியதாகவும் குழந்தையை கடத்தி வைத்திருந்த இரு பெண்களுக்கும் தொண்ணூறாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனையோருக்கு தலா ஐயாயிரம் ரூபா கொடுக்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில்குழந்தையை இந்தியாவிற்கு கடத்தி செல்லவும் திட்டமிடப்பட்டுள்ளமையும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்கள் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்துவதற்கு வவுனியா பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இச் சம்பவத்துடன் இதுவரை 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2.250)

# கல்விசார் அபிவிருத்தி வேலைகள் கண்டாவளையில் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப்பிரதேசத்தில் பல்வேறு கல்விசார் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பல மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கண்டாவளைப் பிரதேசத்தில் கல்விசார் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்டன.

அதாவது, வகுப்பறைக் கட்டடங்கள் திருத்தம், பாடசாலைகளுக்கான குடிநீர், சுகாதார வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல், மின்சார வசதிகளை ஏற்படுத்தல், துவிச்சக்கரவண்டி வழங்குதல் போன்ற வேலைத் திட்டங்கள் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை மற்றும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீடு என்பவற்றின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேபோல இவ்வாண்டு அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற திட்டத்தின் கீழ் வகுப்பறைக் கட்டடத் திருத்தத்திற்காக 8.26 மில்லியன் ரூபாவும், பாடசாலைகளில் குடிநீர் வசதிகளை ஏற்படுத்துவதற்கு 0.69 மில்லியன் ரூபாவும் இரண்டு பாடசாலைகளுக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்துவதற்கு 0.72 மில்லியன் ரூபாவும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் கண்டாவளை மகா வித்தியாலயத்தில் வகுப்பறைக் கட்டடம் ஒன்று 6.4 மில்லியன் ரூபா செலவிலும் அமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு குறித்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (2-315)

வாழ்வின் வெற்றி என்பது வாழும் விதத்தில் உள்ள சத்தியத்தைப் பொறுத்தது.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட்டமைப்பை ஓரங்கட்டியது ஏன்?

வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்கென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அமைக்கப்பட்ட சிறப்புச் செயலணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எவரும் உள்வாங்கப்படவில்லை என்ற விவகாரம் கூட்டமைப்பில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கென சிறப்புச் செயலணி ஒன்று அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அமைக்கப்பட்டது.

இதில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்ரன் அவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இருந்தும் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கூட்டமைப்பைச் சேர்ந்தவர் என்பதை கூட்டமைப்பினர் அடிக்கடி மறந்து விடுகின்றனர்.

ஜனாதிபதி அமைத்த விசேட செயலணியில் கூட்டமைப்பினருக்கு இடம் வழங்கப்படவில்லை என அந்தக் கட்சியினர் ஜனாதிபதியிடமோ அன்றி வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடமோ முறையிட முடியாது.

அவ்வாறு முறையிட்டால் முதலமைச்சர் விக்னேஸ்வரன் செயலணியில் உள்வாங்கப்பட்டுள்ளார். அவர் கூட்டமைப்பைச் சேர்ந்தவரல்லவா.

அவ்வாறாயின் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எவரையும் செயலணியில் உள்ளீர்க்கவில்லை என்று எங்ஙனம் நீங்கள் கூறமுடியும் என மறுப்புக் கேள்வி கேட்கப்படும்.

எனவே கூட்டமைப்பில் இருந்து எவரையும் சிறப்புச் செயலணிக்குச் சேர்க்கவில்லை என்ற குற்றச்சாட்டு அடிபட்டுப் போகும் என்பது வேறு கதை.

இது ஒருபுறமிருக்க, ஜனாதிபதியின் சிறப்புச் செயலணியில் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலரை மேலதிகமாகச் சேர்ப்பது ஏன் தவிர்க்கப்பட்டது என்று ஆராயும்போது, அதற்கு கூட்டமைப்பு விட்ட முழுத் தவறே காரணம் என்று அடித்துக் கூறமுடியும்.

இதைக்கூறுவதனூடு கூட்டமைப்பைக் குறை கூறி, ஜனாதிபதியை நிறைவு காண்பதாக யாரும் கருதிவிடாதீர்கள்.

மாறாக நல்லாட்சிக்கு ஆதரவு வழங்குதல் என்று தீர்மானித்த கூட்டமைப்பினர் – ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொண்ட கூட்டமைப்பினர், எதற்காக ஜனாதிபதி மைத்திரியின் உறவை வெட்டிவிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மட்டும் உறவைப் பேணிக்கொண்டனர் என்பதுதான் இங்கு எழும் முக்கிய கேள்வியாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுதான் இலக்கு என்றால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் ஒரு சமத்துவமான உறவை கூட்டமைப்பு பேணியிருக்க வேண்டும்.

ஆனால் கூட்டமைப்பினர் அவ்வாறு செய்யாமல் ஜனாதிபதி மைத்திரியை ஓரங்கட்டுவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதே தமக்கு நம்பிக்கை என்பதுபோலவும் நடந்து கொண்டபோது,

கூட்டமைப்புக்கு ஜனாதிபதியிடம் இருந்து மதிப்பு மரியாதை கிடைக்கும் என எதிர்பார்ப்பது மடமைத்தனமானதே.

தவிர, அரசாங்கத்தால் தலா இரண்டு கோடி ரூபாய் பணம் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது என கூட்டமைப்பின் எம்.பி கூறியிருக்கையில், கூட்டமைப்பின் நேர்மைத்தன்மையில் ஜனாதிபதிக்கு ஐயம் எழுவது நியாயமானதே.

ஆக, கூட்டமைப்பினர் தமது நேர்மைத்தனத்தை இழந்து போனதும் செயலணியில் அவர்கள் இடம்பெறாமல் போனமைக்குரிய காரணம் என்று கூறுவதில் தவறிருக்க முடியாது.

# குழந்தையின் இறப்பு உறுதியானது இறுதிச் சடங்கு இன்று நடைபெறும்

உடுவில் பெண் குழந்தையின் உயிரிழப்பில் நீடித்த குழப்பம் நேற்று முடிவுக்கு வந்தது. குழந்தையின் இறுதிச் சடங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என உறவினர்கள் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுவில் ஆலடிப் பகுதியைச் சேர்ந்த இரண்டரை வயது பெண் குழந்தை காய்ச்சலால் பாதிக்கப்பட்டாள்.

குழந்தையை தெல்லிப்பளை வைத்தியசாலையில் பெற்றோர் சேர்த்துள்ளனர். அங்கு குழந்தைக்கு 4 நாள்கள் சிகிச்சையளிக்கப்பட்டது.

எனினும் காய்ச்சல் நீடித்தமையால் பாலகி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கு 11 நாள்கள் சிகிச்சை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை இரவு குழந்தை உயிரிழந்துவிட்டார் என மருத்துவ அறிக்கையிடப்பட்டது. குழந்தையை சடலமாக புதன்கிழமை நள்ளிரவு உறவினர்களிடம் வைத்தியசாலை நிர்வாகம் ஒப்படைத்தது.

குழந்தையின் இறுதிச் சடங்கு கடந்த வியாழக்கிழமை வீட்டில் நடைபெற்றுள்ளது. முற்பகல் 11 மணியளவில் குழந்தையின் சடலத்திலிருந்து மலம், சலம் வெளியேறியுள்ளது.

அதனால் குழந்தை உயிருடன் உள்ளது என சிலரால் நம்பிக்கை வெளியிடப்பட்டது. அதனையடுத்து குழந்தையின் சடலம் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டது. பின்னர் இந்து முறைப்படி வழிபாடும் நடைபெற்றுள்ளது.

எனினும் குழந்தை உயிரிழந்துவிட்டது என பெரியோர்கள், பெற்றோருக்கு எடுத்துக் கூறினர். அதனையடுத்து சடலம் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் நடைபெறும் என உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இறுதிச் சடங்கு இடம்பெறவிருந்த நிலையில் குழந்தை மலம் சலம் கழித்துள்ளது.

அதனால் அவர் தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் நேற்றுக் காலை கடவுளிடம் மன்றாடி பெற்றோர் வழிபாடுகளில் ஈடுபட்டனர். எனினும் குழந்தை உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் குழந்தையின் இறுதிச் சடங்கு இன்று இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மானிப்பாயில் வீடொன்றுக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்ட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் வீடொன்றுக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் சம்மந்தப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையாக உள்ள வீடொன்றுக்குள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பகல் புகுந்த கும்பல் ஒன்று அடாவடியில் ஈடுபட்டுத் தப்பித்தது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 6 பேர் கொண்ட கும்பல் அந்த வீட்டின் வாசல் படலை, வீட்டு முற்றத்தில் தரித்து நின்ற முச்சக்கர வண்டி மற்றும் வீட்டின் யன்னல்களை கூரிய ஆயுதங்களால் தாக்கி விட்டு தப்பித்தது.

சம்பவம் தொடர்பில மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதில் மூவரை நேற்று கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் தாக்குதல் நடத்தப் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர். (ம)

## மாட்டுவண்டி சவாரி போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு வட்டுக்கோட்டை கொத்துதுரை சவாரித்திடலில் நடைபெறவுள்ளது.

இவ் மாட்டுவண்டி சவாரிப் போட்டியில் பல இடங்களிலிருந்தும் முன்னணி மாடுகள் சவாரியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம)

## ஹெரோயின் வியாபாரம்; தந்தையும் மகளும் கைது

கண்டி, மஹியாவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின் போது ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த தந்தையும் மகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு மத்திய மாகாணத்தில் மேற்கொண்ட இந்த சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 940 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 46 வயதைச் சேர்ந்த தந்தையும் 23 வயதுடைய மகளும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம)

## கரந்தெனிய பிரதேசசபை உபதவிசாளரை சுட்டுக்கொலை செய்த சந்தேகநபர் கைது

கரந்தெனிய பிரதேச சபையின் உப தவிசாளர் டொனால்ட் சம்பத் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

22 வயதுடைய அசேல ரணசிங்க என்பவரே ஊரகஸ் மங்சந்தி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கரந்தெனிய பிரதேச சபையின் உப தவிசாளர் டொனால்ட சம்பத் மோட்டார் சைக்கிளில் வநத இனந்தெரியாத இரு நபர்களால் நேற்று முன்தினம சுட்டுக்கொலை செய்யபபட்டார்.

சம்பவத்தில் காயமடைந்த மற்றொரு நபர் வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

## பொலிஸ் நிலையத்திலிருந்து சந்தேகநபர் தப்பியோட்டம்

(பனிக்கன்குளம்)

வவுனியா பொலிஸ் நிலையத்திலிருந்து நேற்றுக் காலை 10.00 மணியளவில் சந்தேகநபரொருவர் தப்பியோடியுள்ளார்.

குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவரை வவுனியா பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்ற சமயத்தில் குறித்த நபர் தப்பியோடியுள்ளார்.

அவரை கந்தசுவாமி ஆலய வீதி, மில் வீதி, பஜார் வீதிகளில் பொலிஸார் தேடிய போதிலும்சந்தேகநபரை பொலிஸாரால் இதுவரை கண்டு பிடிக்க முடியவில்லை.(ம-281)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**புருஷார்த்தங்கள் என்பவை எவை? அவற்றை ஏன் கடைப்பிடிக்க வேண்டும்?**

எனவே தர்மத்திற்குப் புறம்பான தன சம்பாத்தியம் ஆபத்தானதாகும். அது கூடாது. தர்மத்தின் வழியில் வந்து சேரக்கூடிய தனத்தினால் நமது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம். அது மோட்சத்திற்கான வழியைக் காட்டும். அதாவது தர்மத்திற்கு கேடு இல்லாமல் தனத்தைத் தேடி நமது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வது மோட்சத்தை நோக்கி என்றால் நாம் புருஷார்த்தத்தை அடைந்து விட்டோம் என்று நிம்மதி அடையலாம்.

அதர்மத்தின் வழியில் வந்து சேரக்கூடிய தன சம்பாத்தியம் ஆசைகளின் எல்லையற்ற நன்மையாகும். இது புருஷார்த்தம் ஆகாது.அது இச்சைகளோடு சேர்ந்ததாகும். அது மோட்சத்திற்கான வழியைக் காட்டாது என்பது மட்டுமல்ல நம்மை நரகத்தில் கொண்டு சேர்க்கும். அது மீண்டும் மீண்டும் நம்மை இச்சைகளுக்கான பாதையைக் காட்டி மூழ்கடித்துவிடும்.

*(தொடரும்)*

## பிரித்தானிய ரக்பி வீரர்கள் ஹெரோயின் மாத்திரைகளை உட்கொண்டதால் உயிரிழந்தனர்

(கொழும்பு)

பிரித்தானிய ரக்பி வீரர்கள் ஹெரோயின் போதை மாத்திரைகளை உட்கொண்ட காரணத்தினால் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த ரக்பி வீரர்களை அழைத்துச் சென்ற ஆட்டோச் சாரதியான ராசீக் மொஹமட் ரியாஸ் என்பவர் இதனைப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நட்பு ரீதியான ரக்பி போட்டிகளில் பங்கேற்பதற்காக இலங்கை வந்த இரண்டு பிரித்தானிய கழகமட்ட வீரர்கள் உயிரிழந்த சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. 25 வயதான தோமஸ் பெட்டி மற்றும 26 வயதானதோமஸ்ஹொவார்ட் என்ற இரண்டு வீரர்களே உயிரிழந்திருந்தனர். 17000 ரூபா பெறுமதியான போதைப் பொருளை உட்கொண்ட காரணத்தினால் இவர்கள் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரக்பி வீரர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஆட்டோச்சாரதி போதைப்பொருள விற்பனை செய்யும் இடமொன்றுக்கு அழைத்துச் சென்றுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (இ-7)

# கண்ணீர் அஞ்சலி



**கொக்குவில் இந்து பழைய மாணவனும் ஆசிரியருமான வ.பிரபாகரன் அவர்களின் அன்புத் தாயார்**

## திருமதி பத்மாவதி வயிரவப்பிள்ளை

அவர்கள் 08.06.2018 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-2875)

**கொக்குவில் இந்து நண்பர்கள்**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திருமதி ஜீவரஞ்சனி விவேகானந்தராசா

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 33வது பொதுப் பட்டமளிப்பு விழா 08.06.2018 அன்று கல்வியியல் முதுமாணிப் (MEd) பட்டத்தைப் பெற்ற எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி ஜீவரஞ்சனி விவேகானந்தராசா அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் மேன்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

-வாழ்த்துவோர்கள்-
பாடசாலை சமூகம்
கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்,
கிளிநொச்சி.

(சி-2871)

# மரண அறிவித்தல்



## இராசா குமாரசுவாமி

**(பிரதேச சபை உறுப்பினர் - வலிகாமம் தெற்கு - சுன்னாகம்)**
**(சுன்னாகம் சுவர்ணா பேக்கரி உரிமையாளர்)**

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட இராசா குமாரசுவாமி அவர்கள் நேற்று (09.06.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் புலோலியைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயராணியின் பாசமிகு கணவரும் மயூரன் (தொழிற்பயிற்சி மையம் - காரை நகர்), குகப்பிரியா (யாழ்.பல்கலைக்கழகம்), அபர்ணா (உடுவில் மகளிர் கல்லூரி), வைஷ்ணவி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(4465)

தகவல்:-
குடும்பத்தினர்

## பாதாள உலக...

னிய வீதியில் நேற்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் படி விசேட அதிரடிப்படையினர் சந்தேகத்துக்குரிய சொகுசு வாகனத்தை பின் தொடர்ந்து வந்து, பின்னர் மடவளையில் அதனை முற்றுகையிட்டுள்ளனர்.

மடவளை, பிரதான சந்தியைக் கடந்து 150 மீற்றர் தூரத்திலுள்ள சன நடமாட்டம் குறைந்த இடத்தில் வாகனத்தில் வந்தவர்களை கைது செய்வதற்காக குறித்த சொகுசு வாகனத்தை நிறுத்தியுள்ளனர்.

அப்போது வாகனத்திலிருந்த இரு சந்தேக நபர்கள் அதிரடிப்படையினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முயற்சித்த போது அதிரடிப்படையினர் அவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இதன் காரணமாக சம்பவத்துடன் தொடர்புடைய பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த இருவரும் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் உயிரிழந்த இருவரின் சடலங்களும் கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது. மாஜிஸ்திரேட் விசாரணைக்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

சம்பவத்தில் கொல்லப்பட்ட இருவரும் பிரபல பாதாள உலக கோஷ்டியைச் சேர்ந்த மாகந்துர மதூஸ் என்பவரின் கையாட்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில் இரண்டு கைத்துப்பாக்கிகள் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. இவை வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட நவீன ரக கைத்துப்பாக்கிகள் என பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தேகம பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## வவு.வில் முற்று...

த்து 500லீற்றர் கோடாவுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிலுள்ள பாலமோட்டை, ஊறாகுளம் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி நிலையம் செயற்படுவதாக கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப்பிரிவினருடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் அப்பகுதியைச் சுற்றிவளைத்து முற்றுகையிட்ட பொலிஸார் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் ஒரு பரல் (ஆயிரம் 500 லீற்றர்) கோடாவினையும் அப்பகுதியைச் சேர்ந்த 36வயதுடைய நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.(ம-250,251)

## வயோதிப தம்பதி...

கொள்ளையர்கள் வயோதிபரை தாக்கி காயப்படுத்திவிட்டு இரண்டு தொலைபேசி, 25ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

காயமடைந்த வயோதிபரும், அதனால் அதிர்ச்சி அடைந்த அவரின் மனைவியும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணையை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)

## சட்டவிரோத மீன்...

பேரணி ஒன்றும் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளதாக சம்மேளனம் அறிவித்துள்ளது. யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள மேற்படி சம்மேளனத்தின் அலுவலகத்தில் அதன் தலைவர் த.தவச்செல்வம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதிகளில் வெளி மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் தடைசெய்யப்பட்ட கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர். இது தவிர அங்கு அத்துமீறி வாடிகளை அமைத்தும் அவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர். இவர்களை வெளியேற்றுவதற்கு எங்கள் அரச அலுவலர்களால், எங்கள் அரசியல்வாதிகளாலும் முடியவில்லை.

இந்த நிலையிலேயே அவர்களை உடனடியாக எங்கள் பிரதேசங்களில் இருந்து வெளியேற்றி எங்கள் கடல் வளத்தையும் எங்கள் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க கோரி நாளை திங்கட்கிழமை யாழ்.மாவட்டத்தில் பகுதி நேர கதவடைப்புக்கு அழைப்பு விடுக்கின்றோம். இந்த பகுதி நேர கதவடைப்புக்கு வர்த்தகர்கள் எமக்கு ஆதரவு வழங்க முன்வர வேண்டும்.

இது தவிர அன்றைய தினம் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றையும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். இதற்கு பஸ் சங்கங்கள், பல்கலை மாணவர்கள், முச்சக்கர வண்டி சங்கங்கள், வர்த்தக சங்கம், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் வேறுபாடின்றி ஆதரவு வழங்க வேண்டும்.

இன்றைய தினம் (நேற்று) 128 மீன்பிடி சங்கங்கள், மற்றும் 10 இற்கு மேற்பட்ட சமாசங்களை அழைத்து கலந்துரையாடினோம். இந்த கலந்துரையாடலில் சங்கங்கள் சமாசங்கள் ஒருங்கிணைந்து இந்த பிரச்சினையை அணுகுவதற்கு தீர்மானித்துள்ளோம். அந்த நிலையில் தான் இதற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுப்பது என தீர்மானிக்கப்பட்டது.

கதவடைப்பன்று கடற்றொழிலாளர்கள் தொழிலுக்கு செல்ல மாட்டார்கள். அவர்கள் அனைவரும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். காலை 9 மணியளவில் எமது அலுவலகத்திலிருந்து ஆரம்பமாகும் ஆர்ப்பாட்ட பேரணி யாழ்.மாவட்ட செயலகத்தை சென்றடைந்து அங்கு மாவட்ட செயலரிடம் எமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்ட பின்னர் வடக்கு மாகாண ஆளுநரிடமும் மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

அகிம்சை ரீதியில் முன்னெடுக்கப்படும் எமது போராட்டத்திற்கு பதில் தராவிட்டால் சர்வதேச நாடுகளுக்கு எமது பிரச்சினைகளை கூறுவதற்கு முடிவு செய்துள்ளோம். திங்களன்று சகல இடங்களிலும் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்டு இந்த அரசுக்கு எமது எதிர்ப்பு தெரிவிக்கப்படும்.

தமிழர்கள் தலையெடுக்க முடியாதபடி இன்றைய அரசு திட்டமிட்டு வடபகுதி கடல் வளத்தை அழிக்கும் முயற்சிக்கு எதிராக அனைத்து மக்களும் திரள வேண்டும் என்றார். (ம-4)

## பாராளுமன்றத்...

ணைக்களம் முன்பாக அரசியல்வாதிகள் சிலரும் அவரது ஆதரவாளர்களும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். எனினும் அன்றைய தினம் மீனவர்களே ஆர்ப்பாட்டம் நடத்த தீர்மானித்திருந்த போதிலும் இடையில் அரசியல்வாதிகள் நுழைந்து விட்டனர்.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் அரசோடு கதைக்காமல் இங்கு வந்து கண் துடைப்புக்காக போராடுகின்றனர். மீனவர்களின் பிரச்சினையை தங்கள் சொந்த நலன்களுக்காக பயன்படுத்துகின்றனர். அரசாங்கம் எங்கள் பிரச்சினையை தீர்க்கவில்லை என்றால் எமது அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தை விட்டு வெளியேற வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் அரசுக்கும் ஆதரவு கொடுத்துக்கொண்டு சுமந்திரன் தனது அரசியலுக்கு மீனவர்களின் பிரச்சினையை பயன்படுத்துகின்றார். இதற்கு சுமந்திரனால் உருவாக்கப்பட்ட சங்கம் ஒன்று ஆதரவுக்கு நிற்கின்றது என குற்றம் சாட்டியுள்ளனர். (ம-4)

## கருத்து முரண்...

டித்துறை பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியில் உள்ள விளையாட்டு கழகம் ஒன்றிற்கும் ஊறணி பகுதியில் உள்ள விளையாட்டு கழகம் ஒன்றிற்கும் இடையில் நடந்த முரண்பாடு மோதலாக மாறியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் தாக்கியுள்ளனர். இதில் 13 பேர் காயமடைந்த நிலையில் வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதில் ஜே.திவாகரன், வி.விதுசன், எஸ். விஜயன், எம்.தினேஷ் ஆகிய நால்வரும் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட வல்வெட்டித்துறை பொலிஸார் ஏழு சந்தேக நபர்களை கைது செய்ததுடன் மேலதிக விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)

## பசுவும் - எருமை...

கம்பஹா பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இந்த கட்சியின் இணைவானது பசு மாட்டையும் எருமை மாட்டையும் ஒன்றாக இழுத்துச் செல்வது போன்றது என்றும், இதில் எவ்வித பொருத்தமும் இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், தற்போதைய அரசாங்கத்தில் உள்ளவர்கள் எங்களை திருடன் திருடன் என்று குற்றம் சுமத்தியபோதிலும், தற்போது அரசாங்கத்தில் உள்ளவர்களை திருடன் திருடன் என்று கூறும் நிலை ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

அத்துடன் பெப்பர்ச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜூன் அலோசியஸிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது குற்றம் சுமத்தப்படவில்லை, எனவும் மகிந்த ராஜபக்ஷ முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## உணவகத்தில் தீ...

யல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் இவ் அனர்த்தம் இடம்பெற்றதாக தெரியவருகின்றது. சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்து வந்த நகரசபையின் தீயணைப்பு படையினர் தீயினை சில நிமிடங்களில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இவ் தீ விபத்து காரணமாக பாரிய சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-250-281)

# உறவுகளை பாதிக்கும் வகையில் நாம் செயல்படமாட்டோம்

## சாலிய பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அதிருப்தியடையும் வகையில் நாம் ஒருபோதும் செயற்படமாட்டோமென காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோரின் விபரங்கள் எம்மிடம் உள்ளன. எனவே மீண்டும் நாம் தகவல் சேகரிப்பில் ஈடுபட வில்லை. மக்களுக்கு சலிப்பினை ஏற்படுத்த விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், முன்னர் நிறுவப்பட்டிருந்த ஆணைக்குழுக்கள் மற்றும் ஜனாதிபதியின் கீழான செயற்திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான தகவல்கள் எம்மிடம் உள்ளன. அதனைக் கொண்டு மேலதிக செயற்திட்டங்களை மேற்கொள்வோம். அத்துடன் சுயாதீன ஆணைக்குழு என்ற வகையில் நாம் மக்களுக்கு நம்பிக்கையாகச் செயற்படுவோம் என்று தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் இதுவரை மன்னார், மாத்தறை மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் மக்களுடனான சந்திப்பை மேற்கொண்டுள்ளது. எதிர்வரும் 13 ஆம் திகதி திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் மக்களுடனான அடுத்த சந்திப்பினை காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தலைமன்னாரில் இரு மீனவர்களை காணவில்லை

(மன்னார்)

தலைமன்னார், ஊருமனை பகுதியில் கடற்தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இரண்டு பேர் காணாமற்போயுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மீன்பிடிக்கச் சென்ற இவர்கள் இதுவரை கரைதிரும்பவில்லை என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை காணாமற்போனவர்களை தேடும் நடவடிக்கைகளில் கடற்படையினரும் இணைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பத்து மீனவப் படகுகளும், கடற்படையின் படகொன்றும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

வடக்கு பிராந்தியத்தில் தற்போது தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (ம)


31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 1956.07.02

இறப்பு: 2018.05.11



பண்பின் சிகரமாய்
இருந்தீர்
பார்ப்போரை அன்போடு
பேணுவீர்
தன்னலமற்ற சேவையை
தந்தீர்

மறவோம் உம் அன்பை
மாண்புறும் உம் பண்பை
என்றும் நினைவில் ஒளிரும்
உம்மை என்றும் நாம் மறவோம்.

சுப்பிரமணியம்
சேய்சோதிகாந்தன்
(ஓய்வு நிலை கோட்டக்கல்வி அதிகாரி)

மு/வற்றாப்பளை ம.வி
ஆசிரியர் நனன்புரி கழகம்
வற்றாப்பளை, முள்ளியவளை.

(4-2870)

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை



- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413

(C-2810)



## Sun Travels and Tours

**UK, Denmark, Norway, France, Italy, Sweden**

போன்ற அனைத்து நாடுகளுக்குமான **Visit Tourist Visa Online** மூலம் செய்து கொடுக்கப்படும்.

மேலும் அனைத்து நாடுகளுக்குமான **Visa** எம்பிசி அப்போயிமன்ற் செய்து கொடுக்கப்படும்.

இந்தியாவுக்கான ரூறிஸ் வீசா எம்மிடத்தில் பெற்றுக் கொள்ளலாம். அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்களும் இந்தியா போன்ற அனைத்து நாடுகளுக்குமான வீசா விண்ணப்பப்படிவங்கள் **Online** மூலம் நிரப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு
Sun Travels
இல 162, கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
077 225 9030

(4460)


# கடுமை...

படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிலும் நாட்டைச் சூழவுள்ள கடற் பரப்புகளிலும் காணப்படும் காற்றுடன் கூடிய நிலைமை அடுத்த சில நாட்களுக்கு தொடருமென எதிர்பார்க்கப்படுவதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், மேல் மாகாணம், தென் மாகாணம், மத்திய மாகாணம், வடக்கு மாகாணம், வடமத்திய மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களிலும், மொனராகலை மாவட்டத்திலும் மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசுமென கூறப்படுகிறது. (ம)

# துஷ்பி...

வவுனியா தரணிக்குளம் பகுதியில் வசித்து வந்த 11வயது பாடசாலை மாணவியை அவரது தந்தை நேற்று முன்தினம் இரவு பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக நேற்று ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் தாய் மற்றும் சிறுமி முறைப்பாட்டினை மேற்கொண்டனர். இதையடுத்து ஈச்சங்குளம் பொலிஸார் குறித்த சிறுமியின் தந்தையை கைது செய்துள்ளதுடன் சிறுமியை வைத்திசாலையில் மருத்துவப் பரிசோதனைக்காக அனுமதித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட ஈச்சங்குளம்பொலிஸார்கைது செய்யப்பட்ட சந்தேக நபரான தந்தையை நேற்று பிற்பகல் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ம-250.281)


துரித தபால்கள் பொதிகள் சேவை

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | -550/= |
| Germany | -650/= |
| France | -700/= |
| Canada | -850/= |
| Australia | -800/= |

திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம்,
திருநெல்வேலி, நெல்லியடி,
கிளிநொச்சி, முல்லைத்தீவு,
மன்னார், வவுனியா.
Hotline -0777554528

(4047)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



வீட்டுடன் காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.
2.913 பரப்பு

தொடர்பு 077 744 8326



வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்துக்கு வரவேற்பாளர், டிசைனர் வேலைகளுக்கு ஆட்கள் தேவை. அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
0765656534, 0715656573

PRINT STAR
DIGITAL IMAGE
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(4466)



எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை

- அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
- அருள்ஸ் பிறைவேற் லிமிட்டற் நிறுவனங்களின் இணை நிறுவனம்.

அருள்

சாவகச்சேரி
இல. 01 NDB வங்கிக் கட்டடம்,
தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
076 443 1576

நெல்லியடி
இல. 01 பெற்றோல் செற் லேன் ,நெல்லியடி.
076 443 1576

கிளிநொச்சி
இல. 10, கரடிப்போக்கு,
கிளிநொச்சி.
(வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்)
076 443 1576

(C-2813)



பெயர் மாற்றம்

மேழிவனம், மாங்குளம் வதியும் குகனேசன் யாழவன் ஆகிய நான் 01.05.2018 ஆம் திகதி முதல், எனது பெயரை குகனேசன் அபிசாந் என சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என தெரிவித்துக் கொள்கின்றேன்.

குகனேசன்
அபிசாந்

(4463)



ஜீவநதியின் 100 ஆவது வெளியீடான
இ.சு.முரளிதரனின்
சுரோடிங்கரின் பூனை
கட்டுரைத் தொகுப்பு வெளியீட்டு விழா

இடம் :-
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி
இன்று (10.06.2018)
ஞாயிற்றுக்கிழமை 3.30 மணி

முதன்மை விருந்தினர்
கவிஞர் சோ.பத்மநாதன்

தலைமை
கவிஞர் த.ஜெயசீலன்

வரவேற்புரை
எழுத்தாளர் வெ.துஷ்யந்தன்

வெளியீட்டுரை
எழுத்தாளர் சி.ரமேஷ்

முதற்பிரதி பெறுநர்
திரு.கு.அம்பிகைபாகன்
(ஆசிரியர், யா/நெல்லியடி மத்திய கல்லூரி)

கருத்துரை
எழுத்தாளர் அ.பௌநந்தி

ஏற்புரை
இ.சு.முரளிதரன்




விளம்பர அனுசரணை
கேம்பிறிஜ் கலாசாலை நவிண்டில்

(4464)



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-2755)



வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

(C-2811)



# Study in LATVIA

**Schengen visa** (France, Germany, Italy, Norway, Poland, ...)

மீண்டும் ஓர் நேரடி அனுமதி யாழில்....

Admission open for 2018 Intakes



- நீங்கள் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவரா?
- IELTS இன்றி உயர் கல்வியினை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்.
- கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
- கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
- 100% விசா உத்தரவாதம்.
- குறைந்த பாட நெறி கட்டணம்
- வேறு நாடுகளில் விசா நிராகரிக்கப்பட்ட மாணவர்களுக்கும் அனுமதி பெற்றுதரப்படும்.

iCS A Complete Visa Solutions
Study Abroad Expert

Appoinments :- 077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
( பெருமாள் கோவில் அருகாமையில் )
107 B 1/1 . Galle Road . Colombo 6

(சி-2866)



ParcelLk மகாராஜா பொதிகள் சேவை GTV Express

நாம் மேலும் பின்வரும் தரமான சேவையை வழங்கிவருகின்றோம்

*வெளிநாட்டு கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை.
*365 நாள் வாடிக்கையாளர் சேவை.
*குறைந்த கட்டணத்தில் விரைவான சேவை.
*30 வருடத்திற்கு மேலான நம்பிக்கை.

30 வருடத்திற்கு மேலதிகமாக வாடிக்கையாளர நன்மதியப்பை பெற்ற ஒரே நிறுவனம்

| 11Kgக்கு மேல் 1Kgக்கான கட்டணம் | | | | |
|---|---|---|---|---|
| லண்டன் | ஜேர்மனி | அவுஸ்ரேலியா | சுவிஸ் | கனடா |
| Rs.600/- | Rs.600/- | Rs.800/- | Rs.900/- | Rs.900/- |

| கொழும்பு | யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| இல. 18/3 டாக்டர் ஈ.ஏகுரே மாவத்தை கொழும்பு 06 | 225,கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25,கந்தசாமி கோவில் வீதி வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி கிளிநொச்சி. |
| 0112 360926 011 4378164 | 021 2224338 021 4925024 | 021 4930099 | 024 4930200 076 6908961 | 021 4930330 |

(சி-2863)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 169

விலை : 30.00

வள்ளுவர் ஆண்டு 2049 10.06.2018 தொலைபேசி : 021 222 3378



# தம் தலைவரை தலைகுனிய வைத்த கூட்டமைப்பு





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் பண்டிதர் பரமலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன் இண்டைக்குப் பண்டிதர் ஐயாவைக் காணவில்லை. விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

வரணி வடக்கில இருக்கிற அம்மன் கோவில் தேருக்குப் போறதாச் சொன்னவர். அதுதான் இன்னமும் வந்து சேரவில்லைப் போல.

கங்காணியார் கார்த்திகேயனின் பதிலுரை முடியும் நேரத்தில் பண்டிதர் பரமலிங்கமும் விறுக்கு நடையுடன் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

பண்டிதரின் முகத்தில் கோபம் கொப்பளித்து நின்றது. ஆலடியில் இருந்தவர்கள் பண்டிதரின் கோபத்தை உணர்ந்தனராயினும் அதற்கான காரணத்தை அறியமுடியவில்லை.

என்ன பண்டிதர் ஐயா முகம் ஒரு மாதிரியாக இருக்குது. மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் தயங்கித் தயங்கிக் கேட்டார்.

**பண்டிதர்:** வாத்தியார் வரணி வடக்கில உள்ள கண்ணகை அம்மன் கோவில் தேருக்குப் போனனான். அங்க தேரைப் பக்கோ தான் இழுத்தது.

**சாத்திரியார்:** என்ர கண்ணகைத்தாயே இதென்ன கூத்து.

**மூப்பர்:** தேர் இழுக்கிறதுக்கு ஆட்கள் இல்லாமல் இருந்திருக்கும் போல.

**பண்டிதர்:** அடியவர்கள் தாராளமாக இருந்தவியள். ஆனால் சமூகப் பிரச்சினையாம். அதால தேரை ஒருத்தரும் இழுக்காமல் பக்கோவைப்பிடித்து தேர் இழுக்கப்பட்டிருக்குது.

**வாத்தியார்:** ஊர் கூடி தேர் இழுக்கிறதுக்காகத் தான் தேர்த்திருவிழாவே செய்யப்படுகிறது. ஆனால் இங்க...

**விதானையார்:** இப்படியான செயல்களாலதான் தமிழ் மக்களுக்கு இனப் பிரச்சினை எதுவும் கிடையாது. அவர்களிட்ட சாதிப் பிரச்சினைதான் இருக்குது எண்டு தென்பகுதிப் பேரினவாதிகள் கூறிவருகினம்.

**வாத்தியார்:** எல்லா இடங்களிலும் உள்ள கோயில்களில பக்கோவோ தேரை இழுக்குது. வரணியில ஒரு பகுதியில அப்படி நடந்து விட்டது என்பதற்காக அதனை முழுமைப்படுத்திக் கூற முடியாது.

**விதானையார்:** வாத்தியார் இது உங்களுக்கும் எங்களுக்கும் தெரியும். ஆனால் மற்றைய இனமக்களும் சைவத்தமிழ் மக்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றவர்களும் இப்படியான செயல்களைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளுவினம்.

(விதானையாருக்கும் வாத்தியாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டாலும் என்று பயந்த மூப்பர் சரி...சரி... என்ன நடந்தது என்பதைப் பண்டிதர் ஐயா விளக்க மாகச் சொல்லுங்க என்று கூறி கதையைத் திசைதிருப்பி விட்டார்)

**பண்டிதர்:** வரணி கண்ணகை அம்மன் கோவிலுக்கு சித்திரத்தேர் ஒன்று புதிதாகச் செய்திருக்கினம். முதல் நாள் வெள்ளோட்டம். வெள்ளோட்டத்தின் போது தேரை எல்லோரும் இழுத்ததில சமூகப் பிரச்சினை ஏற்பட்டிருக்குது. மறுநாள் தேர்த்திருவிழாவில ஒருத்தரும் தேர் வடம் பிடித்து இழுக்காமல் பக்கோவைப் பிடித்து தேரை இழுக்கிறது என முடிவு செய்திருக்கினம்.

**சாத்திரியார்:** அது சரி பக்கோ ஓடினது ஆராம். சிங்கள இனத்தவரோ? சாத்திரியார் இப்படிக் கேட்க மாநாட்டில் சிரிப் பொலி எழுந்தது.

**கங்காணி:** நாசமறுந்த சமூகப் பிரச்சினைதானே எங்கட இனத்தைக் கருந்துக்குது.

**விதானையார்:** அதுசரி பண்டிதர் ஐயா தேர் இழுபடும் போது வர்ணனை செய்யிற வழக்கம் இருக்குதல்லோ. வரணிக் கோயிலில எப்படி வர்ணனை செய்திருப்பினம்.

விதானையாரின் அசட்டுக் கேள்வியைப் புரிந்து கொண்ட வாத்தியார், பண்டிதர் பதில் கூறுவதற்கு இடம்கொடுக்காமல் தானே முந்திக்கொண்டு

*அம்மன் வருகிறார்*
*பக்கோ தேர் இழுக்க*
*அம்மன் வருகிறார்...*
*அன்னை வருகிறார்...*
*அழகான பக்கோ*
*தேர் இழுக்க*
*அன்னை வருகிறார்..*
*அதிசயம் பாரீர்...*
*அதிசயம் பாரீர்...*
*வடலி பனை*
*வான் டயிர்கள்*
*வாய்க்கால் குளம்*
*கிண்டி எடுத்த*
*பக்கோவில்*
*அம்மன் வருகிறார்...*

இப்படித்தான் தேருக்கான வர்ணனை நடந்திருக்கும். வாத்தியார் இப்படி நகைச்சுவையாகக் கூறியதுடன் பண்டிதரும் சாந்தமடைய, வாத்தியார் ஆலடி மாநாட்டிற்கு வந்த கடிதமொன்றை எடுத்தார்.

**வாத்தியார்:** எங்கட மண்ணில நாளாந்தம் நடந்த விபத்தைத் தடுப்பதற்கு வசதியாக வேகத்தடைகளை வீதிகளில் அமைக்க வேண்டும் என்று தன்ர ஆலோசனையை கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த கே.வி. முருகையன் என்பவர் முன்வைத்திருக்கிறார்.

வேகத்தடைகளை வீதிகளில் அமைப்பதன் மூலம் வீதி விபத்துக்களைக் கணிசமாகக் குறைக்க முடியும் என்ற முருகையனினுடைய ஆலோசனையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்திலெடுக்கவேணும் எண்டு கேட்டுக் கொள்கிறம்.

வாத்தியார் ஆலடி மாநாட்டிற்கு வந்த கடிதத்தின் சாராம்சத்தைக் கூறிமுடிக்க, விதானையார் விசுவலிங்கம் ஒரு கடிதத்தை எடுத்து வாசித்தார்.

மட்டுவில் சிவச்சந்திர மௌலீஸ்வரர் ஆலயச் சுற்றாடலில் கோயில் நிர்வாகத்தின் அனுசரணையுடன் ஒரு கிணறு அமைத்து அதிலிருந்து குடிநீர் விநியோகத் திட்டம் உருவாக்கப் பட்டது. இந்தத் திட்டத்தை வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவைக் கொண்டு ஆரம்பிக்க வேணும் எண்டு சம்பந்தப் பட்டவர்கள் விரும்பினர். அதற்கான ஏற்பாடும் நடந்தது. எனினும் இந்தத் தகவலை அறிந்து கொண்ட தென்மராட்சியைச் சேர்ந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவர் குறித்த குடிநீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிக்க முதலமைச்சரை அழைக்கக்கூடாது என்றும் அதற்கு தன்னையும் குறிப்பிட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் தான் அழைக்க வேணும் என்றும் கூறினவராம்.

இதால மட்டுவில் சிவச்சந்திரமௌலீஸ்வரர் ஆலயச் சுற்றாடலில அமைக்கப் பட்ட குடிநீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பது இழுபறியில இருக்குது.

ஏதோ நாலாம் பேருக்கும் தெரியாமல் திட்டத்தை ஆரம்பித்து வைப்பம் என்று பிரதேச சபை நிர்வாகம் நினைக்குதாம். இவ்வாறு விதானையார் விசுவலிங்கம் கூறி முடித்தார்.

**வாத்தியார்:** அடுத்த மாகாண சபைத் தேர்தலில தக்க பாடம் புகட்டினால் எல்லாம் சரியாவரும்.

**பண்டிதர்:** அடுத்த மாகாண சபைத் தேர்தலில எப்படி சாட்டை அடி கொடுக்கிறது என எங்கட மக்கள் காத்துக் கொண்டிருக்கினம்.

**சாத்திரியார்:** அது சரி கொக்குவிலில இருக்கிற ஒரு பிரபலமான கல்லூரியின்ர ஆசிரியர் ஒருவரை சிலர் தாக்கினவியலாமல்லோ.


**மூப்பர்:** ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அடிக்கக் கூடாது என்ற சட்டம், வாத்திமாருக்கு மாணவர்கள் மறைந்திருந்து அடிக்கலாம் என்ற கருத்தைத் தானே சொல்லுது.

**கங்காணி:** அதெண்டால் உண்மைதான். எண்டைக்கு மாணவர்களைத் தண்டிக்கக்கூடாது என்ற சட்டம் வந்ததோ அண்டைக்கு மாணவர்களின்ர தலைமுடி வெட்டுதல் மாறிப் போய்ச்சுது. வாள்வெட்டுக் கலாசாரம், போதைவஸ்துப் பாவனை என எல்லாமும் வந்திட்டுது. இனி வாத்திமார் பாடு கஷ்டம்தான்.

**வாத்தியார்:** வாத்திமார் பாடு கஷ்டம் எண்டு மொட்டையாச் சொல்லாதிங்கோ. நல்லாப் படிப்பிக்கிற வாத்திமாருக்கும் பிள்ளையள் ஒழுக்கமாக இருக்கவேணும் எண்டு நினைக்கிற வாத்திமாருக்கும் கஷ்டம் என்பதுதான் உண்மை.

இப்படி வாத்தியார் கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



## அம்மன் வருகிறார் அழகான பக்கோ தேர் இழுக்க அம்மன் வருகிறார்

# கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் விரைவில் வெளியேற்றப்படுவார்




## பாராளுமன்றில் சம்பந்தரை தலைகுனிய வைத்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்

வாலிக்குப் பயந்து ஒளிந்திருந்த சுக்கிரீவன் ஒருநாள் திடீரென வாலியைப் போருக்கு அழைக்கிறான். இதுகாறும் தனக்குப் பயந்து நடுங்கி ஊர்விட்டு ஓடிய தன் தம்பி சுக்கிரீவன், வழமைக்கு மாறாக இன்று போருக்கு அழைக்கிறானே இவனுக்கு எப்படித் துணிவு வந்தது என்று வாலி நினைத்தானோ இல்லையோ வாலியின் மனையாள் தாரை நினைத்தாள்.

அந்த நினைப்பு இராமனுடைய நட்பு சுக்கிரீவனுக்குக் கிடைத்து விட்டது என்ற செய்தியைத் தருகிறது.

இராமபலம் சுக்கிரீவனுக்குக் கிடைக்காவிட்டால், வாலியைப் போருக்கு அழைக்கும் திராணி சுக்கிரீவனுக்கு ஏற்பட்டிருக்க மாட்டாது.

இதுபோலத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்குப் பயந்து போயிருந்த கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கடந்த 5 ஆம் திகதியன்று தமது தலைவர் இரா. சம்பந்தரின் கோரிக்கையை நிராகரித்து பாராளுமன்றத்தை விட்டு வெளிநடப்புச் செய்தனர்.

ஆம், கடந்த 5 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் தெரிவுக்கான போட்டி இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளேயும் போட்டியிடுகின்றனர்.

கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தர் அவர்கள், பிரதி சபாநாயகராகப் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சுதர்சினி பெர்னாண்டோ புள்ளேயை ஆதரிக்க வேண்டும் என்று கருத்துரைக்கிறார்.

இதற்குப் பதிலுரைத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனை பிரதி சபாநாயகராக நியமிக்க முன்வந்த போது அதனை எதிர்த்தீர்கள். இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடுகின்றவருக்குத் தான் பிரதி சபாநாயகர் பதவி கிடைக்க வேண்டும் எனக் கூறுகிறீர்கள். இது எந்தவகையில் நியாயம் என்று கேட்டார்.

பிரதமரின் இந்தக் கேள்விக்குப் பதிலுரைத்த கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தர்; தற்போது சபாநாயகராக இருக்கும் கரு ஜெயசூரிய ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர். பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர். ஆகையால் நல்லாட்சி எனும் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் பிரதி சபாநாயகராக இருப்பதுதான் ஒழுங்கு என்றார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் கூறிய கருத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டாரோ, இல்லையோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தான் இங்கு ஆச்சரியத்திற்குரிய விடயம்.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் ஒரு கருத்தைக் கூறினால் அதற்கு விளக்கமோ அல்லது மறுத்தான் கேள்வியோ கேட்கத் திராணியில்லாமல் இருந்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தங்கள் தலைவர் சம்பந்தரை எதிர்க்கின்ற துணிச்சல் எங்ஙனம் ஏற்பட்டது என்பதுதான் புரியாத புதிர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளேயை ஆதரிப்பதென்பது, பிரதி சபாநாயகர் தெரிவு நடைபெற்ற அன்றையதினம் எடுக்கப்பட்டதன்று.

ஏனெனில் பிரதி சபாநாயகர் பதவிக்குப் போட்டியிட்ட சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தன்னை ஆதரிப்பதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தனக்கு உறுதிமொழி தந்ததாகக் கூறியிருந்தார்.

ஆக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரை ஆதரிப்பது என்ற முடிவை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் தனக்கு நெருக்கமான கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நிச்சயம் கூறியிருப்பார்.

இந்தத் தகவல் தெரிந்த கையோடு கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்குப் பாடம் புகட்டத் திட்டமிடப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் பிரதி சபாநாயகர் பதவிக்குப் போட்டியிடுகின்றவரையே பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரிக்க வேண்டுமென சம்பந்தர் கூறியபோது உடனடியாக பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்வது என்ற முடிவை கூட்டமைப்பின் தலைமையைக் கைப்பற்ற திட்டமிட்டிருக்கும் ஒரு சிலர் செய்திருந்தனர்.

அதுவே பாராளுமன்றத்தில் கனகச்சிதமாக நிறைவேற்றப்பட்டது.

தான் கூறிய கருத்தை தனது கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட ஏற்றுக்கொள்ளாமல் தன் முகத்தில் அறைந்தால் போல பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியது கண்டு இரா.சம்பந்தர் அதிர்ந்து போனார்.

என்ன செய்வது, இதுகாறும் எழுந்து நின்று கேள்வி கேட்க முடியாதவர்கள் இன்று தன்னை எட்டி உதைத்து விட்டு பாராளு மன்றத்தை விட்டு வெளிநடப்புச் செய்கின்றனர் எனும் போது, போருக்கு வா என்று வாலியை அழைத்த சுக்கிரீவனின் காட்சிதான் சம்பந்தருக்குத் தெரிந்தது.

முதுமையும் இயலாமையும் வந்துற்ற போது, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை எதிர்த்து எதுவும் செய்யமுடியாது என்ற நிலைப்பாட்டில் ஈற்றில் தானும் பாராளு மன்றத்தைவிட்டு வெளி யேறுவது என்ற முடிவை சம்பந்தர் எடுக்கிறார். அவரின் இந்தத் தீர்மானம் தலைமைத்துவத்திற்குக் சரியானதா? என்று ஆராய்ந்தால் அது பல்வேறான கருத்துக்களை முன்வைக்கும்.

ஆனால் சம்பந்தரைப் பொறுத்தவரை சுட்டுவிரலை உறுக்கி, மூக்கை விரித்து, அதட்டல் தொனியில் பேசியதெல்லாம் முடிந்து போயிற்று. கதிரையில் இருந்து எழுந்து நிற்பதற்கே மற்றவர்களின் உதவி தேவை என்ற நிலையில் துரியோதனின் அதர்மத்திற்கு உதவுகின்ற திருதராட்டினின் நிலையில் சம்பந்தர் இருந்தபோது அவர் எடுத்த முடிவு சரியென்று கூறுவதுதான் பொருத்தமானது.

இது ஒருபுறமிருக்க, கூட்டமைப்பின் எழுதப்படாத தலைவர், ஏனைய உறுப்பினர்களைக் கொண்டு தன் திட்டத்தை நிறைவேற்றியதன் பின்னணியில் இருக்கக்கூடிய காரணங்கள் பல எனக் கூறலாம்.

அதில் ஒன்று எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது முதலமைச்சர் வேட்பாளரைத் தீர்மானிக்கும் அதிகாரம் இரா. சம்பந்தருக்கு இருக்காது என்பதை உறுதி செய்வது.

அதாவது கடந்த முறை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் என்பதைத் தீர்மானித்தவர் இரா. சம்பந்தர் அவர்கள்.

எனவே இந்த முறையும் அப்படியொரு முடிவை சம்பந்தர் எடுக்கவிடமாட்டோம் என்பதை நிரூபிப்பது.

இரண்டாவது காரணம் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கமே கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கான எங்கள் ஆதரவு ஒருபோதும் மாறாது என்பதை 'பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெளிப்படையாகச் சத்தியம் செய்வது.

மூன்றாவது விடயம் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரை ஓரங்கட்டி அவரை ஒதுக்கி விடுவதற்கு ஒத்திகை பார்ப்பது எனப் பல காரணங்களைக் கூற முடியும்.

எது எவ்வாறாயினும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் இனிப் பெறுமதி இழந்த தலைவராக மட்டுமே இருப்பார் என்பது சர்வ நிச்சயம்.

விதுரன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம்
பகுதியில்
உங்கள் ஆக்கங்கள்
இடம்பெற
வேண்டும் என்றால்
உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி
வையுங்கள்.

## ஏமாற்றம்



குட்டையில் மூழ்கிக் குளித்து விளையாடிய வாத்துகள் மூன்று கரையில் உட்காந்தன.

அங்கே இருந்த இரண்டு கொக்குகள் "நண்பர்களே, எத்தனை நாட்களுக்கு இந்தக் குட்டையிலேயே இருப்பீர்கள். சுற்றுத் தொலைவில் ஒரு ஆறு இருக்கிறது. அதில் பெரிய மீன்கள் உள்ளன. வாருங்கள்... அங்கே போகலாம்" என்றன.

"வேண்டாம் தெரியாத இடத்துக்கு நான் வரவில்லை" என்றது ஒரு வாத்து.

ஆனால், மற்ற இரண்டு வாத்துகளும் கொக்குகளின் பின்னால் சென்றன. அந்த ஆற்றை அடைந்து, மகிழ்ச்சியுடன் தண்ணீரில் விளையாடின.

அப்போது அங்கே வந்த வேடன் வலையை வீசினான். கொக்குகள் பறந்துவிட்டன. பறக்க முடியாத வாத்துகள் வலையில் அகப்பட்டுக்கொண்டன.



## சூழல் மாசடைதல்



**வளி மாசடைதல்**

பல்வேறு வகையான வேதியியற் பொருட்களும், தூசியும் வளிமண்டலத்துக்கு வெளியேற்றப்படுவதன் மூலம் வளி மாசடைகின்றது. தற்காலப் போக்குவரத்து ஊர்திகளாலும், தொழிற்சாலைகளாலும் வெளிவிடப்படும் கார்பன் மோனாக்சைடு, கந்தக ஈராக்சைடு குளோரோபுளோரோ காபன்கள், நைதரசன் ஒக்சைட்டுகள் என்பன வளி மாசடைதலுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**நீர் மாசடைதல்**

நீர்சூழ்மண்டல சீர்கேடு தொழிற்சாலைகள், வேளாண் நிலங்கள், வேளாண் பண்ணைகள், நகர்ப்புறக் கழிவுகள் முதலியவற்றிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள் ஆறுகளிலும், வடிகால்களிலும், வேறு நீர்நிலைகளிலும் கலந்துவிடுவதால் நீரின் தரமும், நீர்வாழ் உயிரினங்களும் பாதிக்கப்படுகின்றன. இதனால் புவியின் நீர்வளங்கள் பாதிக்கப்படுகின்றன.

மேலும் வளிமண்டலத்தில் கலக்கும் மாசுகள் மழை நீருடன் கலந்து நிலத்தை அடைகின்றன. இவை நீருடன் நிலத்துக்கு அடியில் சென்று நிலத்தடி நீரையும், ஆறுகள், குளங்கள் முதலியவற்றையும் மாசுபடுத்துகின்றன. எனினும் இவை முன் குறிப்பிட்டவற்றை விட குறைந்தளவிலேயே பாதிப்பைத் தருகின்றன.

**மண் மாசடைதல்**



மண் சூழ்மண்டல சீர்கேடு இதற்கும், தொழிற்சாலைக் கழிவுகள் முக்கிய காரணிகளாக இருப்பினும், தற்கால வேளாண்மை முறைகளும் மண்மாசடைதலுக்குப் பெருமளவு பங்களிப்புச் செய்கின்றன எனலாம். வேதியியல் உரங்கள், பூச்சிகொல்லிகள்; களைகொல்லிகள் முதலியவற்றின் அதிகளவிலான பயன்பாட்டினால் மண் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

**கதிரியக்கப் பாதிப்பு**

அணு மின்சார உற்பத்தி, அணு ஆயுத ஆராய்ச்சிகள், அணு ஆயுத உற்பத்தி போன்ற இருபதாம் நூற்றாண்டு நிகழ்வுகளால் கதிரியக்கக் கழிவுகள் உருவாகி சூழல் மாசடைகிறது.

**ஒலிசார் மாசடைதல்**

ஒலிசார் மாசடைதல் என்பது சாலைகளில் ஏற்படும் வண்டி ஒலி, வண்டி ஒலிப்பான்களால் ஏற்படும் மிகுதியான ஒலி, வானூர்தியின் ஓசை முதலியவற்றால் ஏற்படுகிறது.

**ஒளிசார் மாசடைதல்**

ஒளி அத்துமீறுகை, அதிகப்படியான ஒளியூட்டம், வானியல்சார் குறுக்கீட்டு விளைவு போன்றவை இவ்வகை மாசில் அடங்கும்.


**காட்சி மாசடைதல்**


இவ்வகை மாசுக்கு, தலைக்கு மேலாகச் செல்லும் மின்கம்பிகள், சாலை ஓரங்களில் வைக்கப்படும் பெரிய விளம்பரப் பலகைகள், பாதிக்கப்பட்ட நிலவடிவங்கள், திறந்த வெளிக் குப்பைக் கிடங்குகள், திடக் கழிவுகள், விண்வெளி சிதைவுக் கூளங்கள் போன்றவை எடுத்துக்காட்டுகளாகும்.


**வெப்பம்சார் மாசடைதல்**

வெப்பம்சார் மாசடைதல் என்பது காடுகளை அழித்தல், வண்டிகளிலிருந்து வெளியேற்றப்படும் கரியமில வாயு போன்றவற்றால் ஏற்படுகின்றது.

தரமற்ற காற்று, மனிதன் உள்ளிட்ட உயிரினங்களைக் கொல்லக் கூடியது. ஓசோன் மாசு, மூச்சு நோய், இதய நோய், தொண்டை எரிச்சல், நெஞ்சு வலி, மூக்கடைப்பு போன்ற நோய்களை மனிதனில் ஏற்படுத்துகிறது. நீர் மாசு, நாள்தோறும் 14,000 இறப்புகளுக்கு காரணமாக உள்ளது.










# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



## ரஜனியால் ஜெயலலிதாவின் இடத்தைப் பிடிக்க முடியுமா?

## இரகசிய வாக்கெடுப்பும் அங்கஜன் இராமநாதனும். கூறுங்கள்?

## கூட்டமைப்பு விக்னேஸ்வரன் ஐயா வுடன் முரண்டு பிடிப்பது எதனால்?

**சண் — வவுனியா**

**7000 ரூபாவை தவராசாவுக்கு கொடுக்க நினைக்கிறோம்?**

நல்லது சண். திருப்பிக் கொடுப்பது தான் முறை. எனது பணத்தை திருப்பித் தர ஆவன செய்யுங்கள் என ஒரு பெரிய சபையில் கூறி யிருக்கிறாரே. எப்படிக் கொடுக்காமல் இருக்க முடியும். அதனைக் கொடுப்பது நல்லது.

இனி இவரிடம் எதுவும் வாங்காமல் இருப்பது நல்லது. சிறுவயதில் நண்பன் தந்த நெல்லிக் காயை சாப்பிட்ட பின் அவன் எனது நெல்லிக் காயை தா எனக் கேட்ட போது வலித்த வலியை விட இதைக் கேட்டபோது அதிகம் வலித்தது. அதனால் நிச்சயம் பகிரங்கமாக அவரின் பணம் அவரிடம் கொடுக்கப்பட வேண்டும்.

**விது — செட்டிக்குளம்**

**கூட்டமைப்பு விக்னேஸ்வரன் ஐயாவுடன் முரண்டுபிடிப்பது எதனால்?**

அவரைக் கூட்டி வந்ததே அவர் தாம் போடும் தாளத்துக்கு ஆடுவார் என்ற நம்பிக்கையில் தான். இப்போது அவர் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பது கூட்டமைப்புக்கு கொஞ்ச மும் பிடிக்கவில்லை.

எதுவும் பேசமாட்டோம் என அரசுக்கு வாக்குக் கொடுத்தவர்களுக்கு விக்னேஸ்வரன் ஐயா வின் பேச்சுக்கள் பெரும் இடைஞ்சலாக இருக் கிறது. அதனால் அவரின் இருப்பை குலைத் தெரிய செய்யாத நாசகாரமெல்லாம் செய்து பார்த்தார்கள்.

ஐயா அசைவதாய் இல்லை. அவர் மக்களின் மனங்களில் சிம்மாசனமிட்டு இருக்கிறார். இனி ஒன்றும் செய்ய முடியாது.

**தமிழ் — முதலிக்குளம்**

**இரகசிய வாக்கெடுப்பும் அங்கஜன் இராம நாதனும். கூறுங்கள்?**

பிரதி சபாநாயகராக ஒரு தமிழர் வருவதைத் தடுத்த கூட்டமைப்பு எதிர்க்கட்சிப் பதவியைப் பெறு வதற்கு எப்பாடுபட்டதென்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

போர்க்குற்ற விசாரணையில் இருந்து உப்புச் சப்பில்லாத வரவு-செலவுத் திட்டம் வரை தமிழ ருக்கு நாசமறுப்புச் செய்து பெற்ற பதவியை தக்க வைத்துக் கொண்டு அங்கஜன் பிரதிசபாநாயகராக வருவதை தடுத்த கேவலத்தனம் வேறெங்கு உண்டு.

இதைக் கேட்கும் போது ஒரு படத்தில் வில்லன் கூறுவார். மரண வீடு என்றால் கூட பிணம் நானாக தான் இருக்க வேண்டும் என்று. அங்க ஜன் தமிழருக்கு ஏதும் நல்லது செய்தால் தமது இருப்பு இல்லாது போய்விடும் என்ற சின்னத்தனங் களை மாற்றாதவரை ஒன்றும் மாறாது.

**சச்சிதானந்தன் — மல்லாவி**

**நடு ராத்திரியிலும் ஒரு பெண் தனியாகச் செல்லக் கூடிய அந்தக் காலம் திரும்ப வருமா?**

அப்படிப்பட்ட ஒரு காலத்தைத்தான் உலக நாடுகள் ஒன்று சேர்ந்து அழித்து விட்டதுவே. இனி அந்தப் பொற்காலத்தை நினைத்துப் பார்க்கலாமே தவிர வேறு எதுவும் செய்து விட முடியாது. எனது நாடு, எனது தேசம், எனது உறவு, எனது சொத்து இப்படி எனது எனது என்ற விதை விருட்சமான காலமது. இப்போது போதையின் பிடியில் கிடந்து அல்லற்படு கிறது.




**சிவா**

**சில பெற்றோருக்கு பிள்ளை வளர்க்கத் தெரிவதில்லையே?**

சில பெற்றோருக்கு அல்ல பல பெற்றோருக்கு பிள்ளை வளர்க்கத் தெரியாது.

காலை 6 மணியிலிருந்து 7 மணி வரை ரியூசன், 7.30 இலிருந்து 2.30 வரை பள்ளிக் கூடம், மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரை மறுபடியும் ரியூசன், 6.30 இலிருந்து 9 மணிவரை வீட்டில் படிப்பு (பேர்சனல் கிளாஸ்) இதைத்தான் பிள்ளை வளர்ப்பு என்று பல பெற்றோர் சிந்தித்து எலும்பிச்சைப் பழத்தைப் பிழிவது போல பிள்ளைகளைப் பிழிந்தெடுக் கிறார்கள்.

இப்படிச் செய்தால் பிள்ளை படிக்காது. படிப்பது போல பாசாங்கு தான் செய்யும். முதலில் பிள்ளையின் மனதை அறிந்து கொள்ள முயற்சி யுங்கள். அறிந்து கொண்டால் அதுதான் முதல் வெற்றி.

**அருட்கதிர் — துன்னாலை**

**புத்தபிரான், யேசுபிரான், காந்தி மூவரும் கட்டு நாயக்க விமான நிலையத்தில் சந்திக்க கனவு கண்டேன்?**

இந்தக் கனவுக்கு பலன் பார்த்தேன். இனி இந்த மூவரும் பூமியில் பிறப்பதற்கு சந்தர்ப் பமே இல்லை என பலன் சொல்கிறது.

**அபி — கரவெட்டி**

**தங்களுக்கு அடிவாங்கிப் பழக்கமா? அடி கொடுத்துப் பழக்கமா?**

பாடசாலையில் வாத்தியாரிடம் தொடங்கிய அடி வீட்டில் வீட்டுக்காரி வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பலமுறை திருப்பி அடிக்க முயற் சிப்பது தான். ஆனாலும் முயற்சி வீணாகி விடுகிறது.

**சயன் — யாழ்ப்பாணம்**

**முதல்வர் புதிய கட்சி தொடங்குவாரா?**

புதிய கட்சி தொடங்குவதா, புதிய கூட்டணியா என்பது தொடர்பில் இன்னும் சிந்திக்கவில்லை என முதல்வரின் அறிவித்தல் கேட்டவுடனேயே ஆடிப்போய் இருக்கிறது கூட்டமைப்பு. கூட்டமைப் பைக் காட்டிக் கொடுத்து துரோகப் பட்டத்தை முதல்வர் பெற்றுவிடக் கூடாது என ஒரு பாராளு மன்ற உறுப்பினர் பேசியும் இருந்தார்.

தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் இப்போது கூட்டமைப்பின் நிலை என்ன? முதலில் கூட்ட மைப்பு அதை விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் உரிமைசார் விடயத்தில் கவனம் செலுத்தாத கூட்டமைப்பை முதல்வர் உடைக்கிறாராம். **நல்ல ஜோக்.**

**சான் — சங்கானை**

**கொடுத்த பணத்தை திருப்பிக் கேட்பது சரியா?**

கொடுத்த பணத்தை திருப்பிக் கேட்பதில் எந்தப் பயமும் இல்லை. ஆனால் அன்பளிப் புச் செய்து விட்டு திருப்பிக் கேட்பது மனிதம் அல்ல. மனிதம் இல்லாதவர்களிடம் பணம் வாங்கியது தவறு தான். பிச்சை எடுத்தாவது அவரின் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி உள்ளதே அது போதும்.

சிலரின் சுயரூபங்களை அடையாளம் காட்ட கடவுள் சில சந்தர்ப்பங்களை தருவார் அதை கப்பென்று பிடிப்போமாக.

**கோபு — திடலூர்**

**ரஜனியால் ஜெயலலிதாவின் இடத்தைப் பிடிக்க முடியுமா?**

அந்த இடத்தை எவராலும் தொட்டுவிட முடி யாது கோபு. அம்மா என்கின்ற அந்த மந் திரம் தமிழக மக்களின் மனங்களில் அழிவது என்பதோ அந்த இடத்தில் இன்னொருவரை இடுவது என்பதோ முடியாத ஒன்று.

ரஜனியின் வழி தனி வழி என அவர் அடிக் கடி சொல்வாரே அவர் தனது வழியில் செல் வதுதான் அவருக்கு நல்லது.

உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்



# கவிதைக் கலசம்

## மழலை

பூமிவிடிவதும்
பூக்கள் மலர்வதும்
உன்...
புன்னகையின்
உதிர்வால்தான்

## இயற்கை

ஆடை
மாற்றிக்கொள்ளும்
பூமியின்
அதிசய படைப்பு...

## தாய்

விலை கொடுத்தாலும்
கிடைக்காத
தாய்மையின் பிறப்பு
வெகுமதியில்லாத
வெறும் அன்பின் படைப்பு

## சீதனம்

கன்னியரின்
கல்யாணக் கனவுகளை
ஏலம் போடும் சந்தை

க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்

## கூலிப்படையா நீ!

பாரத நாடாம் இந்தியா
வீரத் தமிழன் பிறந்து வளர்ந்த நாட்டில்
தமிழன் வாழ வழியில்லையா?
அகிம்சைவாதிகள் பிறந்த நாட்டில்
ஆடை இழந்து பிணங்களாக
உலாவுகின்றார் மக்கள்
கம்பன், கண்ணதாசன் பிறந்தது
கவிதைகளோடு உலாவிய நாட்டில்
மக்கள் வாழ வழி இல்லாமல்
தவழ்வதைப் பாருங்கள்
ஐயகோ! எம்மினத்தை
சாலைக்கு இழுத்துவந்து
அடிக்கும் மக்கள் காவலனே
நீ மக்கள் பாதுகாவலனா?
இல்லை ஸ்டெர்லைட் கூலிப்படையா?

எஸ்.ஏ.கோகுலன், கோப்பாய்

## முகாரி இராகம்

பிஞ்சு வயதினில்
நெஞ்சம் நெகிழ்ந்து
விடியலைப் பார்த்தாய்
துயில்களை மறந்து!
முன்பின் முரணான
முத்தமிழ் தேசத்தில்
பெண் எனும் பைங்கிளியாள்
பேதமைகொண்டு
சிறகுள்ள சிறு பறவையை
சிறைபிடிக்கப் பார்க்கின்றாள்!
குறையறியா சிறுபறவை
நிறைபொருள் தேடி
நெடுகடல் கடந்து
நிலமதுள் பதுங்கி
வலுவிழந்து துடிக்கின்றது
வகையறியா மனத்துடன்!
வித்திட்டபோதே
சுமைகளையும் விதைத்திட்டான்
இயந்திர உலகில்
முகாந்திர பயணமிது!
ஈனச்செயலன்றோ
இறைவன் செயற்பாடு
இவைகளுடன் உருவானது
இன்றைய முகாரி!

நாவலூரான் குட்டி ஜசி

## முத்தங்கள் வரமா? தவமா?

உன்னைப் பெற்ற
தந்தையிடம் கேட்டுப்பார்
உன் முத்தங்கள் தந்த இன்பத்தை
உன்னை ஆசையுடன்
தோள் சுமந்த
உன் சகோதரங்களிடம்
கேட்டுப்பார்
முத்தங்களின் உயிர்த்துடிப்பை
உன் அம்மாவிடம் கேட்டுப்பார்
உன் முத்தங்களுக்காகக்
காத்துக் கிடந்த காலங்களின்
உயிர்த்துடிப்பின் உச்சத்தை
உன் தாத்தா பாட்டியிடம்
கேட்டுப்பார்
உன் முத்தத்தின் கோடி பெறுமானங்களை
உன் மனைவியிடம் கேட்டுப்பார்
உன் முத்தங்கள் வரமா, தவமா?
என்பதை அவள் சொல்லுவாள்

ஆர்.எஸ்.ஆனந்தன், தும்பளை

## ஜே.சி.பி.யில் வலம் வருகிறாள்

ஏழையின் சிரிப்பினிலே
இறைவன் வாழ்கிறான்
என்ற பாடல் ஒலிக்கிறது...

ஏழைகளுக்கு உதவுவோம்
உண்டியல் சத்தங்கள்
காதைப் பிளக்கிறது

ஏழைக்கு உணவளிப்போம்
அவர் தம்பசி தீர்ந்தால்
ஆண்டவன் படியளப்பான்
எனும் பிரசங்கம்
பீரங்கியாய் முழங்குகிறது

ஜாதிகள் இல்லையடி பாப்பா
பாரதி பாடல் வீதியெங்கும்
ஒலமிடுகிறது

இதோ அடியார்க்கு அருள் அளிக்க
அம்மன் அற்புதத் தேரில் வருகிறாள்...
பிரசங்கம் சட்டப்படி நடக்கிறது

ஜே.சி.பி.வாகனத்தில்.அம்மன்
அடியவர்க்கு அருள் கொடுக்க
வீதிவலம் வருகிறாள் வருகிறாள்...

ஏழையின் சிரிப்பினிலே...
ஏழைக்கு உணவளிப்போம்...
ஜாதிகள் இல்லையடி பாப்பா
ஒலித்துக் கொண்டே இருக்கிறது
ஏழைகள் ஏழைகளாகவே...!

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 402



## மனிதப் பண்பு

தளக்குதவி செய்தார்க்கு
கைகொடுத்துதவுவது
மனிதப் பண்பு
ஈருருளி வண்டியில்
பயணிக்கும் மங்கை
மகிழ்வான பயணத்தில்
மழைதூறத் தொடங்கியது
சாரதி நனைவது கண்டு
கையிலிருந்த குடை விரித்து
பிடிக்கின்றாள் அவன் தலைமேல்
உதவும் மனப்பாங்கோடு

துரை
தென்மட்டுவில்

## துணை

குடை பிடித்து
விடைதேடும்
வாழ்வுதனில் - ஐயோ!
தடைபோடும்
மடையர் கல்லையும்
முள்ளையும் தெருவில்
கொடையாகப் புடை சூழப்
போட்டாலும் பறயாக்கும்
பயணத்திற்கு நல்ல
மடையோடும்
சைக்கிள் வண்டி
சீரித் துணையாகும்

மாலைவயூர் கவி
வடலியடைப்பு

## மனிதாபிமானம்

வயிற்றுப் பசிக்கு
சுமை ஏந்தும் சுமை தாங்க
நெஞ்சங்களை கனம் பண்ண
கருதுவதில்லை சில உள்ளம்
மனிதாபிமானம் அருகிச் செல்லும்
இவ்வுலகில் இன்றும்
மழை பெய்கிறது என்றால்
ஏழைத் தொழிலாளரை மதிக்கும்
மனிதாபிமானம் கொண்ட
நெஞ்சங்களால்
வாழ்க வையகமே!
செயற்படுவோம் மனிதாபிமானம்
கொண்ட நெஞ்சங்களாக!

அ.நிரூநவினி
யா/ சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி

## அன்பு உள்ளம்

பாசங்கள் மனதில்
எழுந்து
பெருமைகள் எல்லாம்
அகன்று
எங்கோ இருந்து
வந்தவனே
எமக்காக வியர்வை
சிந்துவதை
ஒரு துளி மழை பட்டாலும்
அவனுக்கு அத்துளிபடாமல்
ஏங்கி நிற்கின்றதே
எமது உள்ளம்

வி.நிரூஷா
யா/ மா.ம.க.

## முதன்மைச் செய்தி

நாளும் செய்தியில் சொல்லும்
வாள்வெட்டுக் கும்பலுக்கு
நேரமிருத்திப் படத்தை
பார்க்க நேர்ந்தால்
உதவி செய்யாவிட்டாலும்
உபத்திரமாவது
செய்யாதிருப்பது
உகந்ததென்னுமெண்ணம்
உள்ளமதில் தோன்றக்கூடும்
குடையும் சிந்துவது தண்ணீரல்ல
கருணையால் வரும் கண்ணீர்

க.நாகராசா
நுணாவில்

## குடைபிடிக்கும் பெண் தெய்வம்

அம்மா தாயே
வாகனம் ஓட்டும் சாரதிக்கு
மழைபடாமல்
குடைபிடிக்கும் தாய்மையின்
தயவு கண்டு
பெருமை கூறும்
பெண்ணுலகிற்கும்
ஓர் எடுத்துக்காட்டு
சாரதி பயணம்
எடுப்பது ஒரு பெண்
தெய்வத்திற்காக
என எண்ணத் தோன்றுகின்றது
வாழ்க பெண்மையின்
ஆதரவும் அன்பும்

அபி துலமாலிகா
சங்கானை

## உண்மைகள்

மழைத்துளிகளின் வரவில்
மலர்ந்தது மனிதநேயத்தின்
உச்சத்தில் உழைத்து
வாழல் என்ற உறுதியும்
உயிர் வாழ்கிறது

தேன்நிலா, நல்லூர்

## விலைவாசியை வென்றிடுவோம்

எரிபொருளின் விலையேற்றத்தால்
இன்னலுறும் மனிதர்கள்தான் எத்தனை
ஒருசாண் வயிற்றுக்கு உழைப்பதற்கு
உத்தம மனிதர் அவர் உருட்டுகின்றார்
இவ்வாகனத்தை உவகையுடன்!
மழை பெய்தாலும் மனதினில்
மகிழ்ச்சி பொங்க
மாண்புடன் செல்கிறார்
மங்கையொருத்தி!

உ.யா
வேல்முருகன்

# மௌனத்தின் தேடல் -403




அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 06.06.2018 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

சிறுகதை



# ஊனம்

மாலை நான்கு மணி. சுந்தரம் வாசலுக்கும் வீட்டுக்குமாக பரபரத்துக் கொண்டிருந்தார். இதைக் கவனித்தவாறு வரவேற்பறையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த மருமகள் வனஜா "என்ன மாமா மணிக்கூட்டைப் பார்ப்பதும் கேற்றடிக்குப் போவதுமாக ஒரே படபடப்பாக இருக்கிறீங்க?" என்று சிரித்தவாறு கேட்டாள். "ஓமம்மா மாப்பிள்ளை வீட்டுக்காரரை நாலு மணிக்குக் கூட்டிக்கொண்டு வாறனெண்டு புறோக்கர் பொன்னம்பலம் சொன்னவன். அதுதான் ஒரே டென்ஷனாக இருக்கு" என்று சிறு தவிப்புடன் பதிலளித்தார் சுந்தரம்.

சுந்தரம் ஓய்வுபெற்ற ஆசிரியர். சேவைக் காலத்தில் கண்டிப்பும் கனிவும் மிக்க ஆசிரியராக அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர். நேர்மையான மனிதர். நாணயமானவர் என சமூகத்தில் பெயரெடுத்தவர். நடுத்தர பொருளாதார வசதியுடையவர். எனினும் யாரிடமும் எதற்காகவும் கடமைப்பட விரும்பாதவர். சுந்தரம், லட்சுமி தம்பதியினருக்கு இரு பிள்ளைகள். வசீகரன், வனிதா. இருவரையும் பண்பும் பணிவுமிக்க ஒழுக்கசீலர்களாக வளர்த்திருந்தனர். வசீகரன் அரச வங்கியொன்றில் முகாமையாளராகக் கடமையாற்றுகின்றான். வனிதா அண்மையிலேயே பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்திருந்தாள்.

சுந்தரம், வசீகரனுக்கு சீதனம் எதையும் எதிர்பார்க்காது தமது சொந்தத்திலேயே திருமணம் செய்துவிட்டிருந்தார். மருமகள் வனஜாவும் குடும்பத்திற்கு ஏற்ற பாசமும் பணிவும் மிக்க குணவதி. பேரக்குழந்தை பூஜா. வசீகரன் தனது சொந்த சம்பாத்தியத்தில் சுந்தரம் வீட்டிற்கு அருகிலேயே வீடு கட்டி வசித்து வருகிறான். சுந்தரத்திற்கு வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தரும் பல விடயங்களிருந்தும் அவரது கவலையும் யோசனையும் மகள் வனிதாவைப் பற்றியதுதான். வனிதா அழகும் குணமும் மிக்கவள். எனினும் செவிப்புலன் சற்றுக் குறைவாக காணப்பட்டது. ஆனால் வனிதா கல்வியிலும் சிறந்தவளாகவே விளங்கினாள். எனினும் சுந்தரத்தின் கவலை அவளுக்கு நல்ல ஒரு வாழ்க்கைத் துணையை ஏற்படுத்திக் கொடுப்பது பற்றியதுதான். தனது வருமானத்தில் கட்டிய வீடு, மனைவி லட்சுமியின் சிக்கனத்தினால் வனிதா பெயரில் வங்கியில் சிறு ரொக்கம், மனைவியின் நகைகள் என வனிதாவுக்குக் கொடுப்பதற்காக சீதனமும் சேர்த்து வைத்திருந்தார். இதைவிட வசீகரனும் தங்கைக்கு சீர் செய்வதற்குத் தயாராகவே இருந்தான்.

இருபத்தாறு வயதை எட்டிக் கொண்டிருக்கும் வனிதாவுக்கு வரன் தேடத் தொடங்கிய இந்த ஒரு மாதகாலத்தில் திருப்தி தரக்கூடியவகையில் பொருந்தியுள்ள மாப்பிள்ளையின் வீட்டுக்காரர்களே இன்று பெண்பார்க்க சுந்தரம் வீட்டிற்கு வருகின்றனர்.

தனது நண்பர் மூலமாக அறிமுகம் பெற்ற தரகர் பொன்னம்பலத்திடமே தமது மகளிற்கு மாப்பிள்ளை பார்க்கும் பொறுப்பை முழுவதுமாக அளித்திருந்தார் சுந்தரம். எல்லாவற்றிற்கும் மேலாக வனிதாவின் செவிப்புலன் தொடர்பான விடயத்தைக் கூறியே வரன் தேட வேண்டும் எனக் கறாராகக் கூறியிருந்தார்.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்கவே எட்டிப்பார்த்த வசீகரன் "அப்பா, அம்மா மாப்பிள்ளையாக்கள் வந்திட்டினம் கெதியா வாங்கோ" என்று கூறியபடி வெளியே ஓடினான். "வாங்க வாங்க வணக்கம்" என்று வந்தவர்களை மரியாதையுடன் வரவேற்று வீட்டினுள்ளே அழைத்துச் சென்றனர் சுந்தரம் குடும்பத்தார். மாப்பிள்ளையையும் கூடவந்திருந்த தாய், தந்தை, தாய்மாமன் ஆகியோரையும் அறிமுகம் செய்து வைத்தார் தரகர்.

மாப்பிள்ளை மாறன் கறுப்பாக களையாகவே இருந்தான். அரச அலுவலகமொன்றில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றான்.

பெண்ணை அழைத்துக் கொண்டு வந்தாள் வனஜா. தலை குனிந்தவாறு வந்த வனிதா நிமிர்ந்து பார்த்து அனைவருக்கும் வணக்கம் சொன்னாள். பொது நிறம், வட்டமுகம், எடுப்பான மூக்கு, நீண்டு அகன்ற விழிகள், சிரிக்கும்போது கன்னத்திற் குழி. அம்சமான வனிதாவை தனது கைவண்ணத்தினால் மேலும் மெருகேற்றியிருந்தாள் வனஜா. தாய் கொண்டு வந்து கொடுத்த தேநீர்க் கோப்பைகளை அனைவருக்கும் கொடுத்துவிட்டு நிமிர்ந்தவளை "உட்காரம்மா" என தமக்கு முன்னாலிருந்த ஆசனத்தைக் காட்டினார் மாறனின் தந்தை. அவர் காட்டிய இருக்கையில் அடக்கத்துடன் வனிதா அமர அருகே வனஜா நின்றிருந்தாள். மாறனின் விழிகள் வனிதாவைப் பார்ப்பதும் பின்னர் தனது தாயைப் பார்ப்பதுமாக நிமிடங்கள் நகர்ந்தன.

"கம்பஸில என்ன துறையில படிச்சனீங்கள் பிள்ள?" எனப் பேச்சை ஆரம்பித்தார் மாறனின் தாய். தலை கவிழ்ந்து அமர்ந்திருந்த வனிதாவினருகில் குனிந்து வனஜா மாறனின் தாய் கேட்ட கேள்வியை சற்று உரக்கக் கூறினாள். "பி.காம்" என்றாள் வனிதா. "அப்பாவைப் போல ரீச்சிங் வேலைக்குப் போக விருப்பமா?" என்றார் தன் பங்கிற்கு மாறனின் தந்தை. மீண்டும் வனஜாவின் உதவியுடன் பதிலளித்தாள் வனிதா. மாறனின் தாயின் முகம் மாறத்தொடங்கியது. மகனையும் கணவரையும் கலவரத்துடன் பார்த்தபடி ஆசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்தார். "என்ன பிள்ள அண்ணி சொல்லாம பதில் வருகுதில்ல. கூச்சமா இருக்கா?" என்று கேட்டார்.

சுந்தரத்திற்கு தூக்கிவாரிப்போட்டது. "என்ன பொன்னம்பலம் பிள்ளையப் பற்றின விசயத்த இவையளுக்குச் சொல்லேலயோ?" என்று சற்றுக் கோபமாகவே கேட்டார். "இல்ல மாஸ்ரர் உவையள் எதிர்பார்த்த எல்லாம் இந்த சம்மந்தத்தில அமைஞ்சிருக்கு. இது ஒரு சின்னக் குறைதானே. அட்ஜஸ்ட் பண்ணுவினம் எண்டு நினைச்சு சொல்லேல்ல" என்று தலையைச் சொறிந்தார் தரகர்.

"மன்னிச்சுக் கொள்ளுங்கம்மா. இந்தாள் செய்த பிழைக்கு நான் மன்னிப்புக் கேக்கிறன். நான் பிள்ளையப் பற்றின எல்லா விசயத்தையும் மாப்பிள்ளை வீட்டாருக்குச் சொல்லச் சொல்லி உவருக்குச் சொன்னனான். இவர் இப்பிடிச் செய்து போட்டார்" என்று மனவருத்தத்துடன் கூறினார் சுந்தரம். "என்ன என்ன விசயம்? என்னத்தை உந்தாள் சொல்லாம விட்டது?" என்று ஏககாலத்தில் வெடித்தனர் மாறனின் தந்தையும் தாயும். 'என்ர பிள்ளைக்கு காது கொஞ்சம் கேட்காதம்மா. ஆனா அதை ஒரு குறையாக நாங்களோ என்ர பிள்ளையோ நினைச்சதில்ல. அவள் படிப்போட எல்லாத்திலயும் கெட்டிக்காரி. வீட்டு செய்காரியமும் அவ்வளவு திறம். போற இடத்தில் நல்ல மருமகளா, மனைவியா நடப்பா" என்று பரிதவிப்புடன் கூறினார்.

"உங்கட பிள்ள அவ்வளவு திறமான தெண்டா வேற மாப்பிள்ளயப் பார்த்து கட்டி வையுங்கோ. குறையுள்ளதுகளுக்கு வாழ்க்கை குடுக்க என்ர பிள்ளை ஒண்டும் தியாகியில்ல. கல்யாணம் கட்டிறது சந்தோசமாக வாழத்தானே தவிர காலம் முழுக்க கட்டிச் சுமக்க இல்ல." வார்த்தைகளைத் தீக்கனலாய் கக்கினாள் மாறனின் தாய்.

"இதப்பாருங்கோ மாஸ்ரர் எங்கட பிள்ள இதுவரைக்கும் எங்கட பேச்சைத் தட்டினதில்ல. நாங்க சொல்றதுதான் அவனுக்கு வேதவாக்கு. அதால எங்களுக்கு இந்த சம்மந்தம் வேண்டாம். நீங்க வேற இடம் பாருங்கோ. நாங்கள் வாறம்" என்றபடி எழுந்தவர் "பொன்னம்பலத்தார் எங்கள நல்லா அலைக்கழிச்சுப் போட்டீர். இனி வீட்டுப்பக்கம் வந்திடாதையும்" என்று தரகரைப் பார்த்து முறைத்தாள். தலையைக் குனிந்தபடி எழுந்த மாறன், தாய் தந்தையருடன் புறப்படத் தயாரானான். இதுவரை நேரமும் மௌனித்திருந்த மாறனின் தாய்மாமன், எழுந்தவர்களைப் பார்த்துக் கையமர்த்திவிட்டு பேசத் தொடங்கினார்.

"மாஸ்ரர், நான் சதாசிவம். எங்கட ஊரில பெரிய பலசரக்குக் கடை வச்சிருக்கிறன். உங்களப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறன். என்ர மகனும் உங்கட பள்ளிக்கூடத்திலதான் படிச்சவன். எனக்கு மூத்தது மகள். இளையவன் மகன். என்ர மகள் பத்தாம் வகுப்பு படிக்கேக்க பந்து விளையாடும்போது கீழ விழுந்து கை முறிந்து புக்கை கட்டினோம். ஆனா அதில ஏதோ பிழையாம். இடது கை மணிக்கட்டோட கீழ சூம்பிப் போயிட்டுது. எவ்வளவு இடம் கொண்டுபோய்க் காட்டினம். நாட்பட்டதால ஒண்டும் செய்யேலாமப் போயிற்றுது. அப்பிடியே விட்டிட்டம். பிள்ளைக்கு இருபத்தெட்டு வயசில சொந்தத்தில தேடி சீதனத்தையும் கொட்டிக் குடுத்து கல்யாணம் செய்து வச்சம். ஆனா போன இடத்தில என்ர பிள்ள அனுபவிச்சது பெரும் துன்பத்தைத்தான். மாமியார், மச்சாள்மார் அவள வார்த்தையாலேயே குத்திக் காயப்படுத்திச்சினம். அவயிட்ட வீட்டில முழு வேலையும் செய்து கொடுமைப்பட்டுக் கொண்டிருந்த பிள்ளை அதைப்பற்றி எங்களிட்ட ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. மருமகனும் அதைக் கண்டுகொள்ளவில்லை. ஒரு கட்டத்தில வெறுத்துப் போன என்ர பிள்ள ஒருநாள் விசம் குடிச்சுச் செத்துப் போயிட்டுது. மகள் இறந்த துக்கம் தாளாம மூண்டு மாசத்துக்குள்ள என்ர மனிசியும் போயிட்டா. நானும் என்ர மகனும் தனிச்சுப் போனம். தமக்கையையும் தாயையும் அடுத்தடுத்துப் பிரிஞ்சதில துடிச்சுப் போன என்ர மகன் வெளிநாடு போயிற்றான். இங்க சொத்துபத்து, நிலபுலங்களைப் பார்த்துக் கொண்டு நானும் ஏதோ வாழ்ந்து கொண்டிருக்கிறன். இந்த சம்பவம் நடந்து பத்து வருசமாச்சு. ஆனா அந்த துன்பமெல்லாம் நேற்று நடந்த மாதிரியிருக்கு. இதையெல்லாம் நான் ஏனிப்ப சொல்றனெண்டா இப்ப இதில இவ்வளவு கதைச்ச என்ர தங்கச்சி அண்டைக்கு என்ர மகளின்ர செத்தவீட்டில சொல்லியழுதது இன்னும் என்ர காதில ஒலிச்சபடியிருக்கு" என்றபடி மாறனின் தாயை நோக்கி "என்னம்மா தனம் அண்டைக்கு என்ன சொன்னனீ? அண்ணை என்ர மகனுக்கு வயசு சரியாயிருந்திருந்தா நான் என்ர மருமகள வெளில விட்டிருக்கமாட்டன். எங்கட பிள்ளைக்கும் இப்பிடி நடந்திருக்காது. எண்டு அழுது குழறினாய். ஆனா இண்டைக்கு இப்பிடிக் கதைக்கிறாய். இது சரியா?" என்று கேட்டார்.

தமையனைப் பார்த்து முறைத்த மாறனின் தாய் "அண்ணை நீங்கள் என்னெண்டாலும் சொல்லுங்கோ. உங்கட பிள்ளைக்கு வந்தது சின்னக்குறைதான். அதுவும் இடையில வந்தது. ஆனா இது குறைபாடு. அதுக்கு நான் என்ர மகன்ர வாழ்க்கையைப் பாழாக்கேலாது" என்றாள் எரிச்சலுடன். தங்கையைப் பரிவுடன் பார்த்த தமையன் "எதம்மா குறைபாடு? குறைபாடு உங்கள மாதிரி மனிசரின்ர மனசிலதானே தவிர இந்தப் பிள்ளையின்ர உடம்பில இல்ல. உடம்பில ஏதாவது குறையேற்படேக்க அதச்சரிக்கட்டும் விதத்தில மூளை செயற்பட்டு அதுக்குப் பதிலீடான திறன் உடம்புக்கு வந்திடும். ஆனா சிந்தனையிலேயே குறைபாடுள்ள உன்ன மாதிரி ஆக்களுக்கு மனமே ஊனமாயிடுது. உன்ன நினைச்சு நான் வேதனைப்படுறன்" என்றவர் சுந்தரத்தைப் பார்த்து "கவலைப்படாதைங்கோ மாஸ்ரர். என்ர மகனும் ஏ.எல் படிச்சவன்தான். பழக்கவழக்கமும் உங்கட பிள்ளைகளுக்குக் குறைவில்ல. நீங்க சம்மதிச்சா நான் உங்கட மகள என்ர மருமகளாக்கிறன். இல்ல, இல்ல என்ர மகளாக்கிறன். என்ர மகன் அவுஸ்திரேலியா போய்ப் பத்து வருசமாச்சு. பி.ஆரும் கிடைச்சிட்டு. உங்களுக்கு விருப்பமெண்டா பிள்ளைய அங்க அனுப்புவம். இல்லையெண்டா என்ர மகன இஞ்ச கூப்பிடுவம். ஏனெண்டா உங்களுக்கு இருக்கிறது ஒரே மகள். பொம்பிளைப் பிள்ளையைக் கட்டிக்குடுத்து அது சிறப்பா வாழ்றத பக்கத்தில இருந்து பாக்கிறது எவ்வளவு சந்தோசம் என்றத அனுபவிச்சவன் நான். உங்கட முடிவ வீட்ல கலந்து பேசிற்று சொல்லுங்கோ. ஆனா என்ர முடிவு இதுதான். ஏனெண்டா என்ர பிள்ளையும் நான் கிழிச்ச கோட்டத் தாண்டமாட்டான். என்ர சொல்லத் தட்டமாட்டான்" என்று தங்கையை ஓரக்கண்ணால் பார்த்தபடி கூறினார்.

மாறன் தாய் தந்தையரைப் பார்த்துவிட்டு எழுந்து வெளியே சென்று விட்டான். இருவரும் அவனைப் பின்தொடர்ந்தனர். வசீகரன் மகிழ்ச்சிபொங்க தாயைக் கட்டிக் கொண்டான். வனஜா பூரிப்புடன் வனிதாவை உச்சிமோந்தாள். இருக்கையை விட்டு எழுந்த சுந்தரம் சதாசிவத்தின் இரு கைகளையும் இறுகப்பற்றி ஆனந்தக் கண்ணீர் மல்க "நன்றி" என்றார் நா தழுதழுக்க. பக்கத்து தெரு பிள்ளையார் கோயில் மணி "டாண் டாண்" என்று ஒலிக்கத் தொடங்கியது.

[illegible]

# தமிழ்மொழியில் அறிவியல்

மாதவி உமாசுதசர்மா
கோண்டாவில்


தமிழ்மொழியே உலகில் முதல் தோன்றிய பாரம்பரிய புகழுடை மொழியாகும். இற்றைக்கு ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியது எம் தாய்மொழி. இவ்வாறான ஆதிமொழியில் வானியல் சாஸ்திரங்களும் விஞ்ஞான அறிவியல் சிந்தனைக் கருத்துக்களும் நம் விஞ்ஞானிகள் கண்டறிய முன்னரேயே கூறப்பட்டிருப்பது நாம் பெருமை கொள்ள வேண்டிய விடயமே. நம் முன்னோர்களின் அறிவியல் பற்றி பண்டைய நீதி நூல்கள், காப்பிய நூல்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

**“அறிவு அற்றம் காக்கும் கருவி”** என்றார் திருவள்ளுவர். பெருவெடிப்புக் கொள்கையின்படி இப்பேரண்டம் விரிவடைந்திருப்பதை ஆழமாக விளக்கும் திருவாசகப் பாடல் **“அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும்...”** என்பதாகும். உலகம் என்ற தமிழ்ச்சொல் **“உலவு”** எனும் சொல்லின் அடியாகப் பிறந்தது. **“உலவு”** என்றால் சுற்றுதல் என்று பொருள். **“ஞாலம்”** என்ற சொல் **“ஞால்”** எனும் சொல்லின் அடியாகப் பிறந்தது. **“ஞால்”** என்றால் தொங்குதல் என்று பொருள்படும். வானத்தில் காற்றில்லாத பகுதி உண்டென்பதை உணர்த்தும் புறநானூற்று நூலின் பாடல் **“வறிது நிலை இயகாயமும்...”** (பாடல் -30) என்பதாகும்.

**“தீம்பிழி எந்திரம்பந்தல்வருத்த...”** எனும் பதிற்றுப் பத்து பாடல் அன்றே கரும்பைப் பிழிந்திட எந்திரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன என்பதைப் புலப்படுத்துவதாகும். **“அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்”** என்ற பெருங்கதை வரியானது அக்காலத்திலேயே ஆழ்துளைக் கிணறு இருந்திருக்கலாம் என்பதை உணர்த்துகிறது.

கிரேக்கத் தொன்மத்தின் டிராய்போரின் எந்திரக் குதிரைக்கு ஒப்பாகக் குறிப்பிடப்படும் **“எந்திர யானை”** இடம்பெற்ற நூல் **“பெருங்கதை”** ஆகும். இவற்றின் ஊடாக பொறியியல் அறிவு, வானியல் அறிவு என்பவற்றில் எமது முன்னோர்கள், விற்பன்னர்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**“ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின்..., இலங்கு கதிர் விடூஉம் நலங்கெழு மணிகளும்”** எனும் சிலப்பதிகாரப் பாடலின் வாயிலாக மணிகளும் ஒளிவிடும் திறத்தால் வெவ்வேறு பெயர்களைக் கொண்டிருப்பினும் அவற்றின் மூலப்பொருள் ஒன்றே எனக் குறிக்கிறது. வாழிடத்தினை நிலங்களின் தன்மைக்கேற்ப தமிழர்கள் பிரித்திருந்தனர். அவையே ஐவகை நிலங்கள் ஆகும். ஐவகை நிலங்களுக்கும் உரிய உணவு, விலங்கு, பறவை, தமிழர்கள் பிரித்தும் வைத்திருந்தனர். மேலும் நிறத்தின் அடிப்படையில் செம்மண் நிலம் என்றும் (செம்புலப் பெயர் நீர் போல- குறுந்தொகை), சுவையின் அடிப்படையில் உவர் நிலம் என்றும் (அகல் வயல் பொழிந்தும் உறுமிடத்துதவா உவர்நிலம்- புறநானூறு) மற்றும் தன்மையின் அடிப்படையில் களர் நிலம் என்றும் (பயவாக் களரனையர் கல்லாதவர்- திருக்குறள்) என்றவாறு வகைப்படுத்தியுள்ளனர்.



**“அணுவைத் துளைத்து ஏழ்கடல் புகட்டி....”** என்ற ஔவையாரின் வரியிலும் **“ஓர் அணுவினைச் சத கூறிட்ட கோணினும் உளன்”** என்ற கம்பரின் அடியிலும் அணுவைப் பிளக்கவும் சேர்க்கவும் முடியும் என்ற கருத்தை எடுத்துரைப்பதாகும்.

**“நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி தான் நல்காதாகிவிடின்”** எனும் வள்ளுவப் பெருந்தகையி உரைப்பது, நீரானது ஆவியாகி விண்ணைச் சென்று அடைந்து பின் மழையாக மண்ணிற்கு வரும் சுழற்சி, நீரியல் வட்டம் பற்றிய அறிவை உலகிற்கு விளக்குவதாக அமைகிறது.

**“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்”** எனும் திருமூலர் கூற்று உயிரிருக்கும் வரைதான் உடல் பயணம் மேற்கொள்ளும் என்பதாகும். **“மருந்து”** எனும் அதிகாரத்தின் மூலம் திருவள்ளுவரும் இதனை விளக்குகிறார். சித்தமருத்துவம் என்பது பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவமாகும். **“புல்லாகிப் பூடாகி...”** எனும் திருவாசக வரிகள் பரிணாம வளர்ச்சியை விளக்குவன ஆகும்.

**“உடம்பிடை தோன்றிற் றொன்றை அறுத்ததன்**
**உதிரம் ஊற்றி உடல் உரச்சுட்டு வேறோர்**
**மருந்தினால் துயரம் தீர்வர்...”**

எனும் வரிகள் கம்பரால் பாடப்பட்டவை. இவை அறுவைச்சிகிச்சை மருத்துவத்தை மெய்ப்பிக்கும் வரிகளாகும். எமது முன்னோர்களின் படைத்துயட்ட அறிவியலை நாம் பயன்படுத்துவதோடு மட்டுமல்லாது உலகிற்கு அறியப்படுத்துவோம்.




# பென்சில் செடி

**இந்திய தமிழ்நாட்டில் முளைக்கும் பென்சில் இப்போது பிரபல்யம். சிறுவர்களைக் கவரும் இந்த முளைக்கும் பென்சில் இன்னும் சில காலங்களில் இலங்கையிலும் அறிமுகம் ஆகும் என்பது நம் எதிர்பார்ப்பு.**

குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்புவது என்பது சாதாரண விடயமல்ல. அம்மாவாக இருந்தால்தான் அதன் வலி புரியும். இப்படி பாடசாலைக்கு அடம் பிடிக்கும் குழந்தைகளுக்கு அவர்களைக் கவரும் சின்ன சின்ன பொருட்களை விதவிதமாக வாங்கிக்கொடுக்கிறது பெற்றோருக்குப் பெரிய வேலை. அப்படி நீங்கள் கொடுக்கும் பொருள், அவங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறதோடு, சமூகத்துக்கும் பிரயோசனமாக இருந்தால், சந்தோசம்தானே. இதோ, அப்படி ஒரு சந்தோஷத்துக்கு வந்திருக்கு, ஆர்கானிக் பென்சில் செடி. அது என்ன பென்சில் செடி? இந்தியாவில் இந்த முளைக்கும் பென்சில் செடி இப்போது பிரபல்யம்.

ஆர்கானிக் பென்சில் செடி தயாரிக்கும் நிறுவனமான போர்ம்சில் உரிமையாளர்களில் ஒருவரான ரஞ்சித் குமார், “குழந்தைகள் எழுதும் பென்சில் சின்னதாக ஆனதும் பெரும்பாலும் தூக்கி எறிஞ்சுடுவாங்க. அப்படி எறிவதை மண்ணில் நட்டுவைத்து செடி வளர்ந்தால் எப்படி இருக்கும்? இதுதான் எங்க யோசனை. இதற்கு குழந்தைகளிடம் நல்ல வரவேற்பு இருக்கு. வேலையை விட்டுட்டு இயற்கைச் சார்ந்த பிசினஸ் செய்ய முடிவெடுத்தேன். என் கல்லூரி நண்பனான ராஜ் கமலேஷ் இதே மாதிரி ஐடியாவில் இருந்தார். இரண்டு பேரும் சேர்ந்து உருவாக்கியதுதான் பென்சில் செடி. ஒரு மாத்திரையின் கப்சூலில் சில தாவரங்களின் விதைகளை நிரப்பினோம். அந்தக் கப்சூலை பென்சிலின் முனையில் செருகி மண்ணில் நட்டுவைத்தோம். சரியாக நான்காவது நாள் செடி முளைச்சது” என்கிறார்.

தொடரும் ராஜ் கமலேஷ், “அப்புறம் இதுதான் நம்ம பிசினஸ் என முடிவெடுத்தோம். ஆரம்பத்தில் எங்க யோசனையைச் சொன்னதும் பலரும் சிரிச்சாங்க. வங்கியில் லோன் கிடைக்க நிறையச் சிரமப்பட்டோம். ஆனாலும், விடாமுயற்சியோடு பென்சில்களை உருவாக்கி, குழந்தைகளிடம் கொடுத்தோம். அதக்கு நல்ல வரவேற்பு கிடைச்சது. ஸ்கூல், கலேஜ், சமூக நிறுவனங்கள் இப்படி எல்லா இடங்களிலும் ஓடர் கிடைச்சது. கப்சூலை குழந்தைகள் வாயில் வெச்சுட்டால் என்ன ஆகும் எனப் பல பெற்றோர்களுக்குத் தயக்கம் இருந்துச்சு. அதனால், ஆர்கானிக் கப்சூல்களை புழக்கத்துக்குக் கொண்டு வந்தோம். பென்சிலின் அடிப்பகுதியின் உள் பகுதியில் தாவர விதைகள் இருக்கும். தக்காளி, கத்திரிக்காய், வெண்டைக்காய், மிளகாய், என பத்துக்கும் மேற்பட்ட பூ விதைகள் கொண்ட பென்சிலைத் தயார்செய்கிறோம்” என்கிறார்.

“இந்தப் பென்சிலை நட்டுவைத்தால் செடி முளைக்கும் எனச் சொல்லி பெற்றோர்கள் குழந்தைக்கு வாங்கிக் கொடுப்பாங்க. குழந்தைகளும் நட்டு வைப்பாங்க. அப்போ, செடி முளைக்காமல் எந்த ஒரு குழந்தையும் ஏமாந்துடக் கூடாது என்பதில் கவனமா இருக்கிறோம். அதனால், பலகட்ட பரிசோதனைக்குப் பிறகே விதைகளைப் பென்சிலில் சேர்த்து விற்பனைக்கு அனுப்புகிறோம். விதைத் தேர்வுக்குத் தனியாக ஒரு குழு அமைத்திருக்கிறோம்.

இயற்கை உரம், தென்னங்கழிவு ஆகியவற்றோடு விதைகளைச் சேர்த்துப் பென்சிலுடன் இணைக்கிறோம். ஒரு பென்சிலின் விலை 10 ரூபாய். உங்கள் குழந்தை எழுதி எழுதி பென்சில் சின்னதாக ஆனதும் சிறிய தொட்டியில் இந்தப் பென்சிலை, உங்கள் குழந்தைகளின் கைகளால் நட்டுப் பராமரிக்கச் சொல்லுங்கள். அது செடியாக வளர்வதைப் பார்க்கும் உங்கள் குழந்தைக்கு நிச்சயம் இயற்கையைப் பாதுகாக்கும் எண்ணமும் ஆர்வமும் உண்டாகும்” என்கிறார் ரஞ்சித்குமார்.

# படம் பார்த்து கதை சொல்வோம்



# இந்து- பசுபிக் பிராந்தியத்தில் இலங்கையின் முக்கியத்துவம்



அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் தலைவர் பேராசிரியர் றொரி மெட்காப் **(Prof. Rory Medcalf)** அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இவர் இலங்கையில் தங்கியிருந்த போது 'டெய்லி மிரர்' நாளிதழுக்கு நேர்காணல் ஒன்றை வழங்கியிருந்தார். பேராசிரியர் தனது நேர்காணலில் இலங்கையின் மூலோபாய அமைவிடம் மற்றும் அவுஸ்திரேலியாவின் பார்வையில் இலங்கையின் அமைவிடத்தின் முக்கியத்துவம் தொடர்பாக விளக்கமளித்திருந்தார்

கேள்வி: இலங்கைக்கான தங்களின் பயணத்தின் நோக்கம் என்ன?

பதில்: அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆய்வாளர்கள், கல்விமான்கள், முன்னாள் கடற்படை அதிகாரிகள் போன்ற பல்வேறு தரப்பினரை உள்ளடக்கிய பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அவுஸ்திரேலியா மற்றும் சஇலங்கைக்கு இடையிலான உறவை மேலும் ஆழப்படுத்துவதில் நாம் உண்மையில் விருப்பம் கொண்டுள்ளோம். இது எமக்கான கற்றல் அனுபவமாகவும் உள்ளது.

இலங்கையானது இந்திய-பசுபிக் பிராந்தியத்தில் செயற்படு நிலையிலுள்ள முக்கிய பங்காளி நாடாக வளர்ந்து வருகிறது. இந்த நிலையில் இலங்கையின் மூலோபாய பார்வை எவ்வாறானதாகவுள்ளது என்பதை விளங்கிக் கொள்வதும் எமது பயணத்தின் நோக்காகும்.

இரண்டாவதாக, இலங்கையும் அவுஸ்திரேலியாவும் இணைந்து மேலும் பல செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது என நாம் நம்புவதால் அவுஸ்திரேலியாவின் தோற்றப்பாடுகள் என்ன என்பதையும் இலங்கையுடன் பகிர்ந்து கொள்வதை நோக்காகக் கொண்டுள்ளோம்.

இலங்கை, இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகளையும் உள்ளடக்கிய முத்தரப்பு கலந்துரையாடலில் ஈடுபடுவது புதிய விடயமாகும். அத்துடன் இது ஒரு பிராந்தியக் கலந்துரையாடலாகவும் உள்ளது. ஆகவே இலங்கைக்கான எமது பயணத்தை எமது அரசாங்கத்திற்குப் பயன்படும் விதமாக மாற்றியமைப்போம் என நாம் நம்புகிறோம்.

கேள்வி: இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் இலங்கையின் மூலோபாய அமைவிடத்தை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?

பதில்: இலங்கையானது மூலோபாய முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. பாரிய பொருளாதாரச் செயற்பாடுகள் தொடர்பாக சீனா, ஜப்பான், இந்தியா, தென்கொரியா போன்ற ஆசிய நாடுகளிலும் அதன் கடல் பாதைகளிலும் நாங்கள் தங்கியுள்ளோம்.

இவ்வாறான கடல் பாதைகளின் மையப் புள்ளியில் இலங்கை அமைந்துள்ளது. கப்பல்கள் தரித்து நிற்பதற்கான முக்கிய இடமாக இலங்கை காணப்படுகிறது. இப்பிராந்தியத்தில் எத்தகைய கடல் சார் செயற்பாடுகள் நடக்கின்றன என்பதைப் பார்ப்பதற்கான கேந்திர அமைவிடத்தையும் இலங்கை கொண்டுள்ளது.

இரண்டாவதாக, இலங்கையில் சீனா தனது அதிகாரத்தையும் நலன்களையும் விரிவாக்குவதுடன் இந்திய மாக்கடலில் தனது இருப்பைப் பலப்படுத்துவதற்கும் இலங்கையைப் பயன்படுத்தி வரும் நிலையில் இலங்கையானது மூலோபாயப் போட்டி மிக்க நாடாக மாறியுள்ளது. சீனா தனது அதிகாரத்தையும் செல்வாக்கையும் எவ்வாறு இலங்கையில் பயன் படுத்துகிறது என்பது தொடர்பாக வேறு பல நாடுகளைப் போலவே அவுஸ்திரேலியாவும் கவலையடைந்துள்ளது.

டொனால்ட் ட்ரம்பின் ஆட்சியைக் கொண்டுள்ள அமெரிக்கா தொடர்பாக சில பதற்றங்கள் நிலவுவதால், அவுஸ்திரேலி




யாவானது சீனா அல்லது அமெரிக்கா போன்ற நாடுகளுடன் அல்லாது, மத்திய நாடுகளுடன் தனது உறவை விரிவுபடுத்துவதில் அக்கறை காண்பிக்கின்றது.

குறிப்பாக ஜப்பான், இந்தியா, இந்தோனேசியா மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுடன் அவுஸ்திரேலியா தனது உறவை விரிவுபடுத்தி வருகிறது. சிங்கப்பூர் மற்றும் இலங்கை போன்ற சிறிய நாடுகளுடனும் அவுஸ்திரேலியா தனது உறவைப் பலப்படுத்தி வருவது இங்கு முக்கியமானதாகும்.

ஆகவே நடுத்தர நாடுகள் அனைத்தும் ஒன்றுசேர்வதுடன் பாரிய அதிகாரத்துவப் போட்டியை எவ்வாறு சமாளிப்பது என்பது தொடர்பான தகவல்களையும் பகிர்ந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

கேள்வி: இலங்கை ஏற்கனவே சீனாவின் ஒரு பாதை ஒரு அணை என்கின்ற திட்டத்துடன் இணைந்து கொண்டுள்ளது. இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் இத்திட்டமானது எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப்படும்?

பதில்: நான் தனிப்பட்ட ரீதியாக ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட்டம் தொடர்பாக எச்சரிக்கையாக உள்ளேன். ஒரு மட்டத்தில் நோக்கும் போது இத் திட்டமானது சீனா போன்ற எழுச்சியுறும் சக்தி வாய்ந்த நாடுகள் இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் முதலீடு செய்வதானது நல்லதொரு செயலாகும். ஏனெனில் இப்பிராந்தியத்தில் மேலும் கட்டுமானங்கள் தேவையானதாகும். இந்த நாட்டில் வேறு சில திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதையும் நீங்கள் காணமுடியும். ஆனால் இவ்வாறான திட்டங்கள் எதிர் மறையான மூலோபாய மற்றும் அரசியல் செல்வாக்காக மாறிவிடக் கூடாது என்பதை நாங்கள் உறுதிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. அத்துடன் இவ்வாறான திட்டங்களால் நாடுகள் கடன் பொறிக்குள்தள்ளப்படுவதைத் தவிர்க்க வேண்டிய தேவையும் உள்ளது.

வணிக நோக்கங்களைக் கொண்ட பொருளாதார முதலீடுகள் ஆராயப்பட வேண்டும். பொருளாதார ரீதியாக எந்தவொரு நாட்டின் மீதும் தங்குவதைத் தவிர்ப்பது தொடர்பாக அவுஸ்திரேலியா ஆராய்ந்து வருகிறது. ஏனெனில் எதிர்காலத்தில், இது பல நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தலாம்.

வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பாக அவுஸ்திரேலியா தெளிவான வழிகாட்டல்களைக் கொண்டுள்ளது. நாங்கள் பல நாடுகளுடன் திறந்த பொருளாதாரச் செயற்பாடுகளை மேற்கொள்கிறோம். சீனா எமது பாரியதொரு வர்த்தகப் பங்காளியாக உள்ளதென்பது உண்மை தான். ஆனால் எமக்கான பாரிய முதலீடு பங்காளி நாடு அமெரிக்கா ஆகும். நாங்கள் அமெரிக்கா, ஜப்பான் போன்ற பல நாடுகளுடன் சீனாவை விட அதிக முதலீட்டு உறவுகளைக் கொண்டுள்ளோம். இவற்றுக்கப்பால், அனைத்து வெளிநாட்டு முதலீடுகளும் தற்போது தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார நியமங்களுக்கு அமைவாக அவுஸ்திரேலி யாவால் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

கேள்வி: இலங்கையின் துறைமுக அபிவிருத்தியில் சீனாவின் முதலீட்டை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?

பதில்: இலங்கை மீதான தனது முதலீட்டை சீனா தனக்கான மூலோபாய செல்வாக்காக தவறாகக் கருதுகிறதா என்பதே எனது கேள்வியாகும். அவ்வாறாயின், நீண்டகால அடிப்படையில் நோக்கில் இது உங்களின் நலனாக இருக்காது. ஏனெனில் இது பல்வேறு அதிகார சக்திகள் குவிந்துள்ள பிராந்தியமாகும். இதனை தனியொரு நாடு அதிகாரம் செலுத்துவதற்கு இயலாத விரிந்த பிராந்தியமாகும். நடுத்தர மற்றும் சிறிய சக்திகள் ஒன்றிணைய வேண்டிய பிராந்தியமாகவும் இது காணப்படுகிறது. இது தொடர்பாக நாங்கள் அனைவரும் இணைந்து ஆராய வேண்டிய தேவையுள்ளது.

அத்துடன் சீனா போன்ற அதிகாரத்துவ நாடுகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாகவும் மதிப்பீடு செய்ய வேண்டும். எதிர்காலத்தில் அதிகாரத்துவத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு செயற்பாட்டையும் நாம் தவிர்க்க வேண்டும். சீனாவின் பொருளாதாரத் திட்டங்கள், ஏற்கனவே காலனித்துவத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளில் நவீன-காலனித்துவ அனுபவமாக மாறுவதைப் பார்க்க நாங்கள் விரும்பவில்லை.

கேள்வி: இந்த நாடுகளுடன் இலங்கை தனது நட்புறவை எவ்வாறு சமவலுப்படுத்த முடியும்?

பதில்: இது நல்லதொரு வினாவாகும். ஒரு நாடு சந்திக்கக்கூடிய முக்கிய பிரச்சினையாகவும் இது உள்ளது. இலங்கை மீது வேறு நாடுகள் போதியளவு கவனம் செலுத்தாத அல்லது விளங்கிக் கொள்ளாத நிலை முன்னர் காணப்பட்டது. ஆனால் தற்போது இதற்கு எதிர் மாறான பிரச்சினை இலங்கைக்கு உள்ளது.

இலங்கை ஒரு சிறிய நாடாகவும் ஜனநாயக நாடாகவும் கேந்திர முக்கியத்துவம் மிக்க நாடாகவும் உள்ளதால் இது தனது தேசிய முன்னுரிமைகள் மற்றும் தேசிய விழுமியங்கள் தொடர்பாகவும் ஒரு தெளிவான வரையறையைக் கொண்டிருக்க வேண்டும். ஆகவே இதற்கான உள்ளக ஆளுமைகளையும் திறன்களையும் இலங்கை கட்டியெழுப்ப வேண்டும். இதற்காக திறமையான புத்தாக்க ஆற்றலைக் கொண்ட இராஜதந்திரிகளை இலங்கை கொண்டிருக்க வேண்டும். இவ்வாறான இராஜதந்திரிகள் சிலர் தற்போது செயற்பட்டாலும்கூட இதற்கும் அதிகமானவர்களை இலங்கை உள்ளீர்த்துக் கொள்ள வேண்டும்.

இலங்கை தன் மீது அதிகாரம் செலுத்த முன்வரும் அனைத்து நாடுகளுடனும் வினைத்திறன் மிக்க வகையில் முகாமை செய்யக்கூடிய ஆளுமையை விருத்தி செய்ய வேண்டும். இந்த வகையில் தேசிய பாதுகாப்பு மற்றும் தேசியக் கோட்பாடு தொடர்பாக பயிற்சிகளையும் கல்வியையும் வழங்கக் கூடிய வாறான தொடர்புகளை இலங்கையானது அவுஸ்திரேலியாவுடன் முன்னெடுக்க முடியும் என நான் பரிந்துரைக்கிறேன்.

ஒரு பல்கலைக்கழகத்தின் தலைவர் என்ற வகையில் நான் இதனைக் கூறுகிறேன். இவ்வாறான பயிற்சிகள் மூலம், இந்திய மாக்கடலில் சிங்கப்பூர் கொண்டுள்ள இராஜதந்திர முக்கியத்துவம் போன்று, இலங்கை ஒரு முக்கிய இராஜதந்திர செயற்பாட்டாளராக மாறுவதற்கு அவுஸ்திரேலியா உதவ முடியும்.

கேள்வி: உலகின் சக்திவாய்ந்த நாடுகளுடன் தனது உறவுகளை சமப்படுத்துவதில் இலங்கை பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கின்றது. இலங்கை மீது அரசியல் சார் நலன்களைக் கொண்டுள்ள நாடு இந்தியாவாகும். தங்களது பார்வையில் இந்தியாவுடனான உறவை இலங்கை எவ்வாறு சமவலுப்படுத்த முடியும் என தாங்கள் கருதுகிறீர்கள்?

பதில்: இலங்கையானது சுயாதீன வெளிநாட்டுக் கோட்பாட்டை நிலையாகக் கொண்டிருக்க வேண்டிய தேவையுள்ளது. ஆனால் சீனாவின் செல்வாக்கிற்காக இந்தியாவின் செல்வாக்கை இலங்கை பண்டமாற்றிக் கொள்ள முடியும் என்பதல்ல. அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, சீனா மற்றும் இந்தியா போன்ற செல்வாக்கு மிக்க நாடுகளுடன் சமவலுவான உறவைப் பேணக்கூடிய அணுகுமுறையை இலங்கைகடைப்பிடிக்க வேண்டும்.

கேள்வி: சட்ட ரீதியற்ற வகையில். அவுஸ்திரேலியாவிற்குள் நுழைந்த இலங்கையர்கள் உட்பட பலர் அவுஸ்திரேலியாவின் மனுஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டமை மனித உரிமை மீறல் என்கின்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் இது தொடர்பான தங்களின் பதில் என்ன?

பதில்: சட்ட ரீதியற்ற குடிவரவாளர்கள் மற்றும் ஆட்கடத்தல்காரர்கள் தொடர்பான விடயமானது பல ஆண்டுகளாக அவுஸ்திரேலியாவில் அரசியல் விவகாரமாக காணப்படுகிறது. கடல்மூலம் சட்ட ரீதியற்ற வகையில் அவுஸ்திரேலியாவிற்குள் நுழையும் எவருக்கும் அவுஸ்திரேலியாவின் குடியுரிமை வழங்கப்படமாட்டாது என சில ஆண்டுகளுக்கு முன்னர் அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் கொள்கை ரீதியாக தீர்மானிக்கப்பட்டது.

பதிலாக, ஐ.நா மனிதாபிமான நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக சட்ட ரீதியான குடிவரவாளர்களை அதிகளவில் ஏற்றுக் கொள்வதென அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்தது. மனுஸ் தீவில் அமைக்கப்பட்ட தற்போது மூடப்பட்டுள்ள தடுப்பு முகாம் தொடர்பாக பல்வேறு சர்ச்சைக்குரிய அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அவுஸ்திரேலியாவிற்கு கடல் மூலம் சட்டத்திற்கு முரணான வகையில் மக்கள் நுழையும் போது அவர்கள் கடலில் இறக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. ஆகவே இவ்வாறான உயிரிழப்புக்களுடன், மனுஸ் தீவில் அமைக்கப்பட்ட தடுப்பு முகாமை ஒப்பீடு செய்து கொள்ளும் போது இதன் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள முடியும்.


வழிமூலம் -**daily mirror**
ஆங்கிலத்தில் -**Kelum Bandara**
மொழியாக்கம்- நித்தியபாரதி

## இது நம்ம கதைகள்...

### கிழவனும் கிணறும்

ஒரு தாய் தன் மூன்று வயதுக் குழந்தையை அருகில் வைத்துக் கொண்டு கிணற்றடியில் துணி துவைத்துக் கொண்டிருந்தாள். திடீரெனக் குழந்தை தவறிக் கிணற்றினுள் விழுந்து விட்டது. தாயின் அலறல் கேட்டு ஊரே கிணற்றடியில் திரண்டது. அது ஆழமான, ஆபத்தான கிணறென்பதால் யாரும் கிணற்றில் குதித்து குழந்தையைக் காப்பாற்ற முன்வரவில்லை. நேரம் உருண்டோடுகிறது. குழந்தையின் உயிர் ஊசலாடுகிறது. தாயின் அலறல் அதிகரிக்கின்றது. ஆயினும் உதவிட யாரும் முன் வரவில்லை.

திடீரென 80 வயதுக் கிழவர் ஒருவர் கிணற்றுக்குள் குதிக்கிறார். குழந்தையைப் பத்திரமாகக் காப்பாற்றி கிணற்றிலிருந்து வெளியே வருகிறார்.




ஊரே கிழவரைத் தூக்கிக் கொண்டாடுகிறது. மேடையமைத்து,ஒலிபெருக்கி பூட்டி மாலை சூடி கிழவரின் புகழ் பாடுகிறது. சனசமூக நிலையத் தலைவர், சமாதான நீதவான், கிராம சேவையாளர் என்று கிழவரை வாழ்த்திப் பேசுவோர் பட்டியல் நீளுகிறது. வீரன் என்கிறார்கள், சூரன் என்கிறார்கள், எத்தனையோ இளைஞர்கள் கூட துணியாதிருக்க தன்னுயிரை துச்சமென நினைத்துக் குழந்தைக்கு மறுவாழ்வளித்த தியாகி என்கிறார்கள். இளைய தளபதி என்றும், பாகுபலி என்றும் பட்டங்கள் சூட்டுகிறார்கள்.

இத்தனை புகழுரைகளுக்கும் மத்தியிலும் மேடையிலிருக்கும் கிழவர் எதிலும் லயிக்காது கூட்டத்தை வெறித்துப் பார்த்து எதையோ தேடுபவர் போல் பரபரப்போடு காணப்பட்டார். இதனை அவதானித்த ஊடகவியலாளர் ஒருவர் கிழவரை நெருங்கி "ஐயா எல்லோரும் உங்களையே புகழ்ந்து பேசுகிறார்கள் ஆனால் நீங்களோ இது எதையும் பொருட்படுத்தாது கூட்டத்தில் எதையோ தேடுவது போல் தெரிகிறது " என்று வினாவினார். கிழவர் சொன்னார் "ஓம் தம்பி என்னைக் கிணற்றுக்குள் தள்ளி விட்டவனைத் தேடுகிறேன். அவன் மட்டும் கையில் கிடைத்தால் எலும்பெலும்பாய்த் தான் முறிப்பேன்". கிழவர் முகத்தில் அடங்கமுடியாத ஆத்திரம் கொப்பளித்தது.

**மற்றவர்களால் தள்ளப்பட்டு தலைவரானவர்களும் நம் மத்தியில் இருக்கினம். மற்றவர்களைத் தள்ளி விட்டு தலைவர்களாய் இருக்கிறவையும் இங்க இருக்கினம் கண்டியளோ.**

**எம்.எக்ஸ்.அன்ரன்**

# உயிர் காத்த பறவை



நன்றியறிதல் என்பது மிக உயர்ந்த ஆன்மாக்களின் அடையாளம்' என்கிறார் கிரேக்கக் கதாசிரியர் ஈசாப் (Aesop). யார் யாரோ, எந்தெந்தச் சந்தர்ப்பங்களிலோ, என்னென்னவோ உதவிகளை நமக்குச் செய்திருப்பார்கள். அத்தனையையும் நாம் நினைவில் வைத்திருப்பதில்லை. சிறிய உதவிகள் இருக்கட்டும்... உயிரையே காப்பாற்றித் தந்தவர்களை, நம் வாழ்க்கையே மாறுவதற்குக் காரணமாக இருந்தவர்களைக்கூட மனிதர்கள் மறந்துவிடும் இது. ஆனாலும், தங்களுக்கு உதவி செய்தவர்களை மறக்காத நல்ல உள்ளம் படைத்த உயர்ந்த மனிதர்கள் உலகெங்கும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் தேவதைகளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஒரு மனிதர், தனக்கு உதவி செய்த பறவைக்கு தன் இறுதிக்காலம் வரை நன்றி சொன்னார். அந்தக் கதை இது!

எல்லா வெள்ளிக்கிழமை மாலை நேரத்திலும் அது தவறாமல் நடக்கும். சூரியன், அடர் மஞ்சள் நிறத்துக்கு மாறி, நீலக் கடலுக்குள் மூழ்கத் தொடங்கும் நேரத்துக்குப் பெரும்பாலும் அவர் வந்துவிடுவார். அமெரிக்காவில் கடற்கரையோரங்களில் அலைகள் ஊருக்குள் வந்துவிடாமலிருக்க அலை தாங்கும் மேடை (Pier) ஒன்றை நிறுவி வைப்பார்கள். ஒரு நீண்ட பாலம் மாதிரி அது இருக்கும். அந்த முதியவர் அந்தப் பாலத்தின் மீதேறி நடப்பார். எலும்பு துருத்தித் தெரியும் தன் கரத்தில் ஒரு பக்கெட்டை வைத்திருப்பார். அதில் இறால் மீன்கள் நிரம்பியிருக்கும். மேடையின் விளிம்பு வரை நடப்பார். அது, அவருக்கேயான பிரத்யேக உலகத்தில் அவர் நுழைவதுபோலிருக்கும்.

அங்கே போய் அவர் நின்றதும், அவர் தனியாக இல்லை என்பதுபோல சத்தம் கேட்கும். வானத்தின் மேல் சிறு வெண் புள்ளிகள் தெரியும். அவை கீழே வரும்போதுதான் அவை அத்தனையும் பறவைகள் என்பது தெரியும். அவற்றின் கிறீச் சொலியும் கேட்கும். சில நிமிடங்களில் டசின் கணக்கில் அந்த ஸீகல் (Seagull) பறவைகள் அவரைச் சூழ்ந்துகொள்ளும். தங்களுடைய இறக்கைகளை படபடவென அடித்துக்கொள்ள ஆரம்பிக்கும். அந்த முதியவர், தான் கொண்டு வந்திருக்கும் பக்கெட்டிலிருக்கும் இறால் மீன்களை எடுத்து கொஞ்சம் கொஞ்சமாக அவற்றை நோக்கி வீசுவார். பசியோடிருக்கும் பறவைகள் இறால்களைக் கொத்தித் தின்ன ஆரம்பிக் கும். அவர் இறால்களைப் போடும்போது உற்றுக் கேட்டால் அவர் என்ன சொல்கிறார் என்பதை கவனிக்க முடியும்... "தங்க் யூ.... தங்க் யூ' என்று விடாமல் சொல்லிக்கொண்டிருப்பார்.




சில நிமிடங்களில் பக்கெட் காலியாகியிருக்கும். ஆனால், 'எட்' (Ed) என்று அழைக்கப்படும் அந்த முதியவர் உடனே அங்கிருந்து கிளம்பிப் போய்விட மாட்டார். கடலையே வெறித்து பார்த்தபடி நிற்பார். பழைய நினைவுகளில் மூழ்கிப் போயிருப்பார்.

அவருடைய முழுப் பெயர் எட்டி ரிக்கன்பேக்கர் (Eddie Rickenbacker). முதலாம் உலகப் போரின்போது ஒரு ஹீரோபோலக் கொண்டாடப்பட்டவர். இரண்டாம் உலகப் போரிலும் அமெரிக்காவுக்குப் போர் தொடர்பான ஆலோசனைகளை வழங்கியவர். இரண்டாம் உலகப் போரின்போது, அவர் சென்ற விமானம் ஒன்று பசுபிக் கடலில் மூழ்கிப் போனது. அவரும் அவருடன் சென்ற ஏழு பேரும் அதிர்ஷ்டவசமாக உயிர் காக்கும் படகில் (Life Raft) ஏறித் தப்பித்தார்கள்.

பசுபிக் பெருங்கடல்...கடல் நீரின் மேல் கப்டன் எட்டி ரிக்கன்பேக்கரும் உடன் வந்தவர்களும் நாள் கணக்கில் மிதந்தார்கள். பகல் முழுக்க சூரியனின் வெப்பத்தோடு போராடினார்கள்.சுறா மீன்களோடு சண்டையிட்டுத் தப்பித்தார்கள் இவற்றைவிட தாகத்தோடும் பசியோடும் போராடினார்கள். கடலில் மிதக்க ஆரம்பித்த எட்டாவது நாளே அவர்களிடமிருந்த உணவு தீர்ந்துபோயிருந்தது. உணவில்லை.குடிக்கத் தண்ணீரில்லை. நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால். தூரத்தில் எங்கேயோ கரையிருந்தது. இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதோ, உயிரோடுதான் இருக்கிறார்களா என்பதோ யாருக்கும் தெரியாது. ஆனால், தினமும் அமெரிக்காவில் பல லட்சக்கணக்கானவர்கள் எட்டி ரிக்கன்பேக்கர் எங்கேயிருக்கிறார் என்று தேடிக் கொண்டிருந்தார்கள். கடலில் மிதந்துகொண்டிருந்த அந்த மனிதர்களுக்கு ஏதாவது அற்புதம் நிகழ்ந்தால் தான் உயிர்பிழைப்பது சாத்தியம் என்று உறுதியாகத் தெரிந்தது. பசியோடும் தாகத்தோடும் தவித்துக் கொண்டிருந்த ஒரு பிற்பகலில், ஏதாவது அதிசயம் நடக்க வேண்டும் என்று வேண்டி அவர்கள் கூட்டாகப் பிரார்த்தனை செய்தார்கள். பிறகு களைப்பில் அரைத் தூக்கம் போட்டார்கள். எட்டி ரிக்கன்பேக்கர் வெயில் முகத்தில் படாதபடி தன் தொப்பியால் முகத்தை மூக்கு நுனிவரை மூடிக்கொண்டு, சாய்ந்து படுத்திருந்தார். நேரம் போய்க்கொண்டிருந்தது.

திடீரென்று ஏதோ ஓர் அலை உயிர் காக்கும் படகின் மேல் மோதியதுபோல ஒரு சத்தம்... ஏதோ ஒன்று அவருடைய தொப்பியின் மேல் வந்து உட்கார்ந்ததை உணர்ந்தார் எட்டி. அது ஒரு கடல் பறவை என்பதை, அதன் சிறகடிப்பிலிருந்து உணர்ந்துகொண்டார். அவர் அசையாமல் சில விநாடிகள் அப்படியேயிருந்தார். அடுத்து என்ன செய்வது என்று யோசித்தார். சடக்கென்று காற்றில் கையை வீசி பறவையைப் பிடித்தார். கிறீச்சிட ஆரம்பித்திருந்தது. அவர் கையிலிருந்து விடுபட இறக்கைகளை அடித்துத் துடித்தது. ஆனால் எட்டி எப்படியோ சாதுர்யமாக அந்தப் பறவையின் கழுத்தைப் பிடித்து இறுக்கிவிட்டார்.

பிறகு எல்லோரும் சேர்ந்து ஸீகலின் சிறகுகளை உதிர்த்தார்கள். அன்றைக்கு அந்தக் குழுவிலிருந்த மொத்தப் பேருக்கும் அந்தப் பறவை சிறிய உணவானது. மீதமிருந்த பறவையின் குடல் பகுதியை தூண்டிலில் இரையாக்கினார்கள். அதைக் கொண்டு கடலில் மீன் பிடித்தார்கள். ஒரு சுழற்சியாக ஒன்றை உண்டு, மீதத்தை தூண்டிலில் இரையாக்கி அவர்கள் நாட்களை நகர்த்த ஆரம்பித்திருந்தார்கள். இயற்கையும் அவர்களுக்குத் துணைபுரிந்தது. அவ்வப்போது சிறியதாகப் பெய்த மழை அவர்களின் தாகம் தீர்க்க உதவியது. இப்படி 24 தினங்கள் அவர்கள் கடலில் மிதந்து, கடைசியாகக் காப்பாற்றப்பட்டார்கள்.

அந்தக் கடுமையான துன்ப நிகழ்வுக்குப் பிறகும் பல ஆண்டுகள் எட்டி ரிக்கன்பேக்கர் உயிர் வாழ்ந்தார். அவரையும் அவர் குழுவினரையும் காப்பாற்றிய அந்த முதல் ஸீகல் அவர் நினைவிலேயே இருந்தது. அதற்குப் பிறகு ஒருபோதும் ஸீகலைப் பார்க்கும் போதெல்லாம் அவர் 'தாங்க் யூ' சொல்லத் தவறியதில்லை. அந்த கடல் பறவைகளுக்கு நன்றி சொல்வதற்காகத்தான் அவர் வாழ்நாள் முழுக்க ஒரு பக்கெட் நிறைய இறால் மீன்களோடு, ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் கடற்கரையிலிருக்கும் அலை தாங்கும் மேடையில் நடந்துகொண்டிருந்தார்.

# கென்யாவை பந்தாடிய இந்தியா மூன்றாவது இடத்தை பிடித்தது

## சாதனை படைத்தார் கேத்ரி

ஆட்டத்தின் 92 வது நிமிடம். ஆட்டம் முடிய இன்னும் சில நிமிடங்களே இருக்கின்றன. மாற்றுவீரராகக் களமிறங்கிய பல்வந்த் சிங்கிடமிருந்து பந்தைப் பெற்றதும், கண்ணிமைக்கும் நேரத்தில் வேகமெடுக்கின்றன சுனில் சேத்ரியின் கால்கள். பின்னால் மூன்று கென்ய டிஃபண்டர்கள், முன்னே கென்யாவின் கோல்கீப்பர், நடுவில் சேத்ரி. அதேவேகத்தில் கென்யாவின் கோல் பாக்ஸை நெருங்கியதும், கூலான ஒரு "சிப்", பந்து கோல் கீப்பரின் தலைக்கு மேலே பறந்து போஸ்ட்டுக்குள் விழுகிறது.

கோல் விழுந்ததும், தனக்கு முன்னால் இருக்கும் பேரிகார்டைத் தாண்டி, கூடியிருக்கும் ரசிகர்கள் முன்னால் சென்று, இரு கைகளையும் நீட்டியவாறு நிற்கிறார் சேத்ரி. மும்பை மைதானமே, "சேத்ரி...சேத்ரி..." என ஆர்ப்பரிக்கிறது.

தன் 100 ஆவது போட்டியில் விளையாடும் ஒரு வீரருக்கு இதைவிட வேறென்ன மகிழ்ச்சி வேண்டும்! "இஞ்சுரி டைம்" என்று சொல்லப்படுகின்ற ஆட்டத்தின் இறுதி நிமிடங்களில் விழும் கோல்கள் தான் ரசிகர்களின் உற்சாகத்தை உச்சக்கட்டத்துக்கு கொண்டு செல்லும்.








சேத்ரி அடித்த இரண்டாவது கோல், அப்படிப்பட்ட ஒரு கோல் தான். சேத்ரிக்காக கூடியிருந்த 9,000 ரசிகர்களுக்கும் இதைவிட வேறென்ன மகிழ்ச்சி வேண்டும்!

"இன்டர்கான்டினென்டல் கப்" தொடரில் விளையாடிவரும் இந்திய அணி, தனது இரண்டாவது போட்டியில் கென்யாவை நேற்று சந்தித்தது.

இந்திய கப்டன் சுனில் சேத்ரி இரண்டு கோல்களும், ஜேஜே லால்பெகுலா ஒரு கோலும் அடித்து அசத்த, 3:0 என்ற கோல் கணக்கில் கென்யாவை வீழ்த்தியது இந்திய அணி. ஆட்டத்தின் இறுதி வரை காத்திருந்த ரசிகர்களின் உற்சாக ஆரவாரங்கள், கொட்டித் தீர்த்த பேய்மழையையே ஓவர்டேக் செய்ய, இந்த ஆட்டத்தில், சுப்பராக வெற்றி வாகை சூடினர் நம் இந்தியப் புலிகள்.

ஆட்டத்தின் முதல்பாதி முழுவதுமே கனமழை பெய்தது. அதனால், மைதானம் முழுவதுமே மழைநீர் குளம்போல் நிரம்பியிருக்க, பந்தை வசப்படுத்த முடியாமல் இரு அணி வீரர்களும், மிகுந்த சிரமத்துடனே விளையாடினர். இருபுறமும் பந்து மாறி மாறி சென்று வந்தாலும், இந்தியாவைக் காட்டிலும், கென்யாவின் கையே சற்று ஓங்கி இருந்தது. முதல்பாதியில் கோல்கள் ஏதும் அடிக்கப்படவில்லை.

ஆட்டத்தின் இரண்டாம் பாதியில் ஒருவழியாக மழை நின்றது. ஆட்டமும் சூடுபிடிக்கத் தொடங்கியது. கென்யாவின் அட்டாக்கை சமாளிக்க முடியாமல், தொடக்கத்தில் திணறியது இந்திய அணி. நல்ல வேளையாக, இந்திய டிஃபென்ஸின் "வன்மான் ஆர்மி"யான சந்தேஷ் ஜிங்கன், களத்தில் சூறாவளியாகச் சுழன்று, கென்ய வீரர்களின் கோல் வாய்ப்புகளை எல்லாம் கிளியர் செய்துவிட்டார். கோல் அடிக்க, இந்திய வீரர்கள் எடுத்த முயற்சிகள் எதுவும் கைகூடவில்லை.

ஆட்டத்தின் 68ஆவது நிமிடத்தில், யாருமே எதிர்பாராத திருப்பமாக, இந்தியாவுக்கு ஒரு "பனால்டி" கிடைத்தது. ரசிகர்கள் மத்தியிலும், வீரர்கள் மத்தியிலும் பிரஷர் எகிறிக்கொண்டிருக்க, பனால்டியை எடுத்தார், தன் 100ஆவது போட்டியில் விளையாடிய இந்தியக் கப்டன் சுனில் சேத்ரி. மிகுந்த பலத்துடன் "டாப் லெஃப்ட் கார்னருக்கு" சேத்ரி உதைத்த பந்து, கென்ய கோல் கீப்பரின் கையில் பட்டாலும், ஷாட்டின் வேகத்தால் கோலாக மாறியது.

மைதானமே உற்சாகத்தில் அலற, அமைதியாக தன் குடும்பத்தினர் இருந்த திசையை நோக்கி, கைகாட்டிப் புன்னகைத்தார் சேத்ரி. அதன்பிறகு, ஆட்டம் இந்திய அணியின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அடுத்து மூன்றாவது நிமிடத்திலேயே, இந்தியாவின் இரண்டாவது கோலை அடித்து அசத்தினார் ஸ்டைரக்கர் ஜேஜே. இந்தியவீரர் உதைத்த பந்து, கென்ய டிஃபெண்டரின் காலில் பட்டு, கோல்பாக்சிற்குள் இருந்த ஜேஜேவிடம் சிக்க, கிடைத்த அந்த "லூஸ் போலை" தவறவிடாமல், துரிதமாக உதைத்து கோலாக்கி அசத்தினார் இந்தியாவின் "ஸ்னைப்பர்".

தொடர்ந்து இரு அணிகளுமே அட்டாக்கில் ஈடுபட, பந்து இருபுறமும் சென்றபடியே இருந்தது.

கென்ய வீரர்கள், கடைசி நேரத்தில் கிடைத்த சில வாய்ப்புகளை வீணடித்தனர்.

ஆனால், இரண்டு கோல் முன்னிலையிலும் திருப்தியடையாத சேத்ரி, ஆட்டத்தின் கூடுதல் நேரத்தில் இந்தியாவின் மூன்றாவது கோலை அடித்தார். இது சர்வதேச அரங்கில் இந்தியாவுக்காக அவர் அடித்த 61ஆவது கோல். கடைசிவரை, கென்யாவால் பதில் கோல் திருப்ப முடியாமல் போக, 3:0 என்ற கோல் கணக்கில், இந்திய அணி வெற்றி பெற்றது.

இந்தியாவின் தடுப்பு அரணான சந்தேஷ் ஜிங்கன் ஆட்டநாயகன் விருதை தட்டிச் சென்றார். இந்த வெற்றியின் மூலம், இந்தியா புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

உலகளவில் தற்போது விளையாடிவரும் வீரர்களில், தனது தேசிய அணிக்காக விளையாடி அதிக கோல்கள் அடித்துள்ள டொப் ஸ்கோரர்கள் பட்டியலில், போர்ச்சுகலின் கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் ஆர்ஜெண்டினாவின் லியோனல் மெஸ்ஸி ஆகியோருக்கு அடுத்தபடியாக, மூன்றாவது இடத்தைப் பிடித்து, புதிய சாதனை படைத்திருக்கிறார் சேத்ரி. (ம)



## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : ரம்பையின் காதல்
இசை : டி.ஆர். பாப்பா
இயற்றியவர் : மருதகாசி
பாடகர் : சீர்காழி கோவிந்தராஜன்



சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே
ஜாதியில் மேலோர் என்றும் தாழ்ந்தவர்
தீயோரென்றும் பேதமில்லாது
எல்லோரும் முடிவில் சேர்ந்திடும் காடு
எல்லோரும் முடிவில் சேர்ந்திடும் காடு
தொல்லையின்றியே தூங்கிடும் வீடு
தொல்லையின்றியே தூங்கிடும் வீடு
உலகினிலே இது தான் நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே

ஆண்டி எங்கே அரசனும் எங்கே
ஆண்டி எங்கே அரசனும் எங்கே
அறிஞன் எங்கே அசடனும் எங்கே
அறிஞன் எங்கே அசடனும் எங்கே
ஆவி போன பின் கூடுவார் இங்கே
ஆவி போன பின் கூடுவார் இங்கே
ஆகையினால் இது தான் நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே

சேவை செய்யும் தியாகி ஸ்ருங்கார போகி ஆ..ஆ..ஆ..ஆ.
சேவை செய்யும் தியாகி ஸ்ருங்கார போகி
ஈசன் பொற்பாதம் தன்னை நாடிடும் யோகி
ஈசன் பொற்பாதம் தன்னை நாடிடும் யோகி
எல்லோரும் இங்கே ஒன்றாய் உறங்குவதாலே
எல்லோரும் இங்கே ஒன்றாய் உறங்குவதாலே
உண்மையிலே இது தான் நம் வாழ்வில் காணா

சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே
சமரசம் உலாவும் இடமே சமரசம் உலாவும் இடமே

## ஆஞ்சநேயரிடம் கோரிக்கை விடுத்த ரமணியம்மா



கானக்கருங்குயில் ராக்ஸ்டார் ரமணியம்மாள் என்றால் பலருக்கும் தெரிந்திருக்கும்.

பிரபல தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான "சரிகமப" நிகழ்ச்சியின் மூலம் பட்டிதொட்டியெங்கும் இவரின் குரல் ஒலித்ததில், நாடு கடந்தும் இவருக்கு ரசிகர்கள் கூட்டம் உண்டு. தற்போது அவருக்கு பாடல் வாய்ப்புகள் குவிந்த வண்ணமுள்ளன. இதனால் ரமணி அம்மாவின் வீட்டு வேலை பாதிக்கப்படுதாம்.

பாடுவதற்காக செல்வதால் 8 வீட்டில் வேலை போய் விட்டதாக கவலையுடன் கூறியுள்ளார். தற்பொழுது இரண்டு வீட்டில் மட்டுமே வீட்டு வேலை பார்த்து கொண்டிருக்கிறார்.

இந்த வேலையும் போய் விடக் கூடாது. நீ தான் பாத்துக்கணும்னு.. ஆஞ்சநேயர்கிட்ட கோரிக்கை விடுத்துள்ளார்.

இதைக் கேட்ட ரமணியம்மாளின் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்து விட்டார்கள். அது மட்டும் இல்லை, பாடல் வாய்ப்புகள் குவிந்து வருவதனால் ரசிகர்கள் அவருக்கு வாழ்த்தும் தெரிவித்துள்ளனர்.

# பிளாஸ்ரிக் பாவனையை கட்டுப்படுத்தும் புதுமுயற்சி

மனிதர்களின் தேவைக்காக உருவாக்கப்பட்ட பிளாஸ்ரிக்கைப் பார்த்து இன்றைக்கு உலகமே அஞ்சி நிற்கிறது. எப்போதோ நிலத்தை ஆக்கிரமித்து விட்ட பிளாஸ்ரிக் குப்பைகள் இப்பொழுது ஆழ் கடலையும் விட்டு வைக்கவில்லை. கடல் வாழ் உயிரினங்களின் வயிற்றில் இருந்த பிளாஸ்ரிக் குப்பைகளே அவற்றின் இறப்புக்குக் காரணம் என்ற செய்தி இப்பொழுதெல்லாம் அடிக்கடி வெளியாகிறது.



இன்றைய நிலையில் சுற்றுச் சூழலுக்குப் பாரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துவது நாம் ஒரு முறை பயன்படுத்தும் வகையிலான பிளாஸ்ரிக் பொருட்கள் தான். மனிதன் தனது அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பிளாஸ்ரிக் பைகள், ஸ்ட்ரா, கரண்டிகள், கோப்பி குடிக்கப் பயன்படுத்தும் குவளை என பொருட்களின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது.

பிளாஸ்ரிக் பயன்பாட்டை பற்றி ஐக்கிய நாடுகள் சபை கூறியிருக்கும் சில அதிர்ச்சியான தகவல்கள்:

ஒவ்வொரு வருடமும் ஐந்து ட்ரில்லியன் பிளாஸ்ரிக் பைகள் உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு நிமிடமும் உலகம் முழுவதிலும் வாங்கப்படும் பிளாஸ்ரிக் போத்தல்களின் எண்ணிக்கை ஒரு மில்லியன்.

நாம் பயன்படுத்தும் பிளாஸ்ரிக் பொருட்களில் 50 சதவிகிதத்துக்கும் மேலானவை ஒரு முறை பயன்படுத்தி விட்டுத் தூக்கி எறியும் வகையிலானவை.

ஒவ்வொரு வருடமும் 13 மில்லியன் தொன் பிளாஸ்ரிக் குப்பைகள் கடலில் சேர்கின்றன.

கடந்த பத்தாண்டுகளில் தயாரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் பொருட்களின் அளவு கடந்த நூற்றாண்டில் தயாரிக்கப்பட்ட மொத்த அளவையும்விட அதிகம்.

பல நாடுகள் ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்ரிக் பொருட்களைத்தடை செய்யத் தொடங்கி விட்டன. தடை செய்யப்பட்டதோடு மட்டுமில்லாமல் அதைத் தீவிரமாக பின்பற்றவும் செய்கின்றன. பிளாஸ்ரிக் பொருட்களுக்கு மாற்றாகப் பயன்படுத்த பல்வேறு மாற்றுப் பொருட்கள் இருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையும் தனது சுற்றுச் சூழல் திட்டத்தின் கீழ் மாற்றுப் பொருட்களைப் பரிந்துரைத்திருக்கிறது. இவற்றை பிளாஸ்ரிக் பொருட்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம்.

### Edible Spoons

பிளாஸ்ரிக்கரண்டிகளுக்குப் பதிலாக இவற்றைப் பயன்படுத்தலாம். ஒரு முறை மட்டுமே பயன்படுத்தும் வகையிலான இவற்றை அப்படியே சாப்பிட



முடியும். சோளமா, அரிசிமா மற்றும் கோதுமை மாவைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் இந்தக் கரண்டியில் வேறு செயற்கையான பொருட்கள் சேர்க்கப்படுவதில்லை. உணவை அருந்தி முடித்த பின்னர் கரண்டியையும் சாப்பிடலாம். இந்திய நிறுவனமான Bakeys இதை உருவாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. சுற்றுச் சூழலைப் பாதுகாக்க விரும்புபவர்கள் இப்பொழுதே இதை வாங்கிப் பயன்படுத்தலாம்.

### Mycofoam


உடையும் பொருட்கள் பொதி செய்யப்படும்போது ரெஜிபோம் பயன்படுத்தப்படுகிறது. ரெஜிபோமை ஒரு முறை பயன்படுத்திய பிறகு வேறு எதற்காகவும் அதைப் பயன்படுத்த முடிவதில்லை. ரெஜிபோமுக்கு இதை மாற்றாகப் பயன்படுத்த முடியும். முழுவதும் விவசா



யக் கழிவுகள் மூலமாக உருவாக்கப்படும் இது மக்கும் தன்மை உடையது. mycelium எனும் ஒரு வகை பூஞ்சை இதை உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது. ரெஜிபோம் போலவே எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் இதை வடிவமைக்க முடியும். ஏற்கனவே சில நிறுவனங்கள் இதைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டன. பிரபல கணனி தயாரிப்பு நிறுவனமான டெல் இதைப் பயன்படுத்துகிறது.

### pineapple fibre

விலங்குகளில் இருந்து பெறப்படும் தோல் பயன்பாட்டை குறைப்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் செயற்கை தோல். ஆனால், அதை உருவாக்குவதற்கு பிளாஸ்ரிக் தேவைப்பட்டது. இதற்கு மாற்றாக லண்டனைச் சேர்ந்த Pinatex என்ற நிறுவனம் உருவாக்கியிருக்கும் அன்னாசிப்பழத்தில் இருந்து




பெறப்படும் இழைகளைப் பயன்படுத்தலாம். அன்னாசிப்பழத்தின் இலைகளில் இருந்து பெறப்படும் நார்களில் இருந்து இது தயாரிக்கப்படுகிறது என்பதால் மக்கும் தன்மை கொண்டது. அன்னாசிப் பழங்கள் அறுவடை செய்யப்பட்ட பின்னர் அதன் இலைகள் பயன்படுவதில்லை என்பதால் இதைக் குறைந்த விலையிலேயே தயாரிக்க முடியும். இதைப் பயன்படுத்தி Pinatex நிறுவனம் ஷூ, ஹேண்ட் பேக் மற்றும் பேர்னிச்சர்களை உருவாக்கியிருக்கிறது.

### Milk fibres

செயற்கை நூலிழைகளுக்குப் பதிலாக பாலில் இருந்து பெறப்படும் இந்த வகை இழைகளைப் பயன்படுத்தலாம். பாலில் இருக்கும் casein புரோட்டின் மூலமாக இந்த இழைகள் உருவாக்கப்படுகின்றன. வீணாகும் பாலில் இருந்து இந்த இழைகளைத் தயாரிக்கிறார்கள்.

இது தவிர ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கும் இலையாலான தட்டுகளையும் பயன்படுத்துமாறு



ஐக்கிய நாடுகள் சபை பரிந்துரை செய்திருக்கிறது.




காலா தமிழ் சினிமா மட்டுமன்றி இந்திய சினிமாவே எதிர்பார்த்து காத்திருந்த படம்.

ஒரு யானைக்கு சாப்பாடு ஸ்வப்பது என்பது கொஞ்சம் கடினம் தான். அந்த வகையில் கபாலியில் ஒரு இயக்குநராக ரஞ்சித் ரஜினி என்ற யான்னைக்கு சாப்பாடு வைத்து திருப்திப்படுத்தினாலும், ரசிகர்களுக்கு கொஞ்சம் ஏமாற்றமே. அந்த ஏமாற்றத்தை





காலாவில் போக்கினாரா? பார்ப்போம்.

நெல்லையில் இருந்து மும்பை தாராவி சென்று அங்கு தன் கண்ட்ரோலில் தாராவியை வைத்து மக்களுக்கு நல்லது செய்து வருகின்றார் காலா சேட்டு.

அப்படியிருக்க தாராவியையே சுத்தமாக்குகிறேன் என்று நானே பட்னேக்கர் உள்ளே வந்து தாராவி மக்களை விரட்டியடிக்க பார்க்கின்றார்.

அதற்காக ரஜினிக்கு எதிராகவும் அவரை நம்பியிருக்கும் மக்களுக்கு எதிராகவும் பல சதித்திட்டங்களை நானா பட்னேக்கர் தீட்ட அதை காலா எப்படி முறியடிக்கின்றார் என்பதே மீதிக்கதை.

சுப்பர்ஸ்டார் இஸ் பாக் என்று தான் சொல்ல வேண்டும். 67 வயதிலும் அப்படி ஒரு சுறுசுறுப்பு. மனைவியிடம் குறும்பு, ரொமான்ஸ், முன்னாள் காதலியிடம் ஏக்கம், கியாரே செட்டிங்கா என்று அதிரவிட்டு மழையில் அடுத்த காட்சியில் இறங்கி அடிப்பது என என்றும் ஒரே சுப்பர் ஸ்டார் என நிரூபித்துவிட்டார்.

ரஜினி படம் என்றால் அவரை சுற்றி மட்டும் கதை இல்லாமல் தாராவி, அதை சுற்றி இருக்கும் மக்கள், காலாவின் குடும்பம் என அனைவருக்குமே படத்தில் முக்கிய பங்கு உள்ளது.

படத்தின் அடிப்படையே நிலம் தான். அதை சுற்றி கதை நகர்கின்றது. அந்த விதத்தில் ரஞ்சித் நிலத்தின் முக்கியத்துவத்தை வசனங்கள் மூலம் மக்கள் மனதில் பதிய வைத்துள்ளார்.

ஒரு சிறு குழந்தை காலில் விழவர, யார் காலிலும் விழக்கூடாது என ரஜினி அட்வைஸ் சொல்வது. காலில் விழுவது சமத்துவம் இல்லை, கை கொடுத்து வரவேற்க வேண்டும், அதுதான் ஈகுவாலிட்டி என பாடமே எடுத்துள்ளார்.





அதிலும் முதன் முறையாக இராவணன் ஜெயிக்கிறான், அதை கதை சொல்லி கிளைமக்ஸாக கொண்டு போன விதம் சுப்பர்.

அதே நேரத்தில் காலா தாராவியையே ஆள்கின்றார் என்பது கார்ட்டூனாக கதை சொல்கின்றனர், அதில் கொஞ்சம் அழுத்தம் இருந்திருக்கலாம்.

மேலும் ஆளும் கட்சியை ரஜினியை வைத்தே ரஞ்சித் ஆட்டிவைத்தது சாமர்த்தியம் என்றாலும், ரஜினி போராடுவோம் என்று சொல்லும் போது கொஞ்சம் சிரிப்பு வருவதை தடுக்க முடியவில்லை.

ரஜினி சொன்னது போல் ரகுவரனுக்கு பிறகு சரியான வில்லனாக டப் கொடுத்துள்ளார் நானா பட்னேக்கர்.

படத்தின் மிகப்பெரும் பலம் ஒளிப்பதிவு, இசைதான். அதிலும் பின்னணியில் கபாலியில் விட்டதை சந்தோஷ் பிடித்துவிட்டார்.

ரஞ்சித்தின் திரைக்கதை, நடிகர், நடிகைகளின் பங்களிப்பு, அதிலும் ஈஸ்வரி எல்லாம் சிக்ஸர் அடிக்கின்றனர்.

படத்தின் வசனம் மற்றும் டெக்னிக்கல் விடயங்கள், அதிலும் சவுண்ட் இன்ஜினியரிங் அத்தனை யதார்த்தம்.

இடைவேளை மற்றும் கிளைமக்ஸ் நானா பட்னேக்கர்-ரஜினி காட்சி காலா ஹுமா குரேஷி காதல் கொஞ்சம் கபாலியை ஞாபகப்படுத்துகின்றது.

இரண்டாம் பாதி முழுவதுமே வன்முறை தான் எங்கும் எதிலும். ஆனால் கதைக்கு தேவையே.

மொத்தத்தில் கபாலியில் விட்டதை ரஞ்சித் காலாவில் பிடித்து சுப்பர் ஸ்டாரை கால் மேல் கால் போட வைக்கின்றார் ஸ்டைலாக கெத்தாக.





# போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும்

இலங்கையில் இடம்பெற்ற இன வழிப்பு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஒன்பது ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் நீதிக்கான தேடலை தமிழர்கள் கைவிடவில்லை. அதேவேளை இனப்படுகொலைக்குள் ளான இனத்திற்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் நம்பிக்கையான பொறி முறையை அரச தரப்போ அல்லது சர்வதேச சமூகமோ ஏற்படுத்த வில்லை. இந்நிலையில் போர்க்குற் றங்கள் குறித்து விசாரணைகளை மேற் கொள்வதற்கு சர்வதேச போர்க்குற்ற வியல் நீதிமன்றத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்திடம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

இது தொடர்பில் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல்-ஹுசைன் - வெளி விவகார அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு அனுப்பியுள்ள விசேட கடிதத்தில், சர்வதேச சமூகத்திற்கு நல் லாட்சி அரசு வழங்கிய வாக்குறுதிகள் உள்ளிட்ட பல விடயங்களை நினைவு படுத்தியும் அவற்றை நடைமுறைப் படுத்த வலியுறுத்தியும் உள்ளார். இதே வேளை, மனித உரிமைகள் மற்றும் நாட்டின் பிரஜைக்கான அடிப் படை சுதந்திரம் என்பவற்றை பேணு வதற்கும் அவற்றை விரிவுபடுத்துவத ற்கும் இலங்கையினால் முன்னெடுக் கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் முன்னகர்வுகள் பாராட்டுக்குரியவை என்றும் இருப்பினும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் அல்லது சர்வதேச தர நியமங்களுக்குட்படுத்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், 2015 ஒக்டோபரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு வழங்கிய வாக் குறுதிகளை நடைமுறைப்படுத்தல், மக்களின் காணிகளை விரைவாக விடுவித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் துரிதமான நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள் ளது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கையின் இணை ஆணைக்குழு என்பவற்றின் கீழ் தொழிற்படும் சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அரச தொழிலாளர் குழுமத்தின் மூன்றாவது கூட் டத்தொடர் புருசெல்ஸில் நடைபெற்றது. இக்கூட்டத்தின் போதே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்திடம் சர்வதேச சமூகம் முன்வைத்துள்ள இந்த இரண்டு பிரதான கோரிக்கைகளும் தமிழர் நலன்சார்ந்தவை.

இந்தக் கோரிக்கைகளை தமிழ் மக்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றனர்.

உள்நாட்டு யுத்தத்தால் ஈழத் தமிழர்கள் அனுபவித்த துன்பங்கள் எண்ணிலடங்காதவை. மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசே, அரச படைகளை ஏவி ஈவிரக்கமின்றி மக் களைக் கொன்று குவித்தது.

முப்பது ஆண்டுகளாக நீடித்த யுத்தம் முள்ளிவாய்க்கால் கொலைக் களத்தில் முற்றுப்பெற்றது. சர்வதேச சட்டங்களையும் மனிதவுரிமைகளையும் கொஞ்சம் கூட மதிக்காது மனித வேட்டையாடியதை எத்தனையோ ஆதாரங்கள் மூலம் வெளிப் படுத்திய போதும் அவை அனைத்தும் செல்லுபடியற்றவையாகவே காணப் படுகின்றன.

பாடசாலைகள், வைத்தியசாலை கள், கோவில்கள், அரச அலுவலகங்கள், தொண்டு நிறுவனங்களின் கூடாரங்கள் என்று அனைத்தையும் குறிவைத்து தாக்கி அடைக்கலம் தேடிய அப்பாவி மக்களை கொன் றொழித்துவிட்டு, உயிரிழந்த அனைவரும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்திவிட்டு தப்பிக்க நினைப்பதை சர்வதேசம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

அதேவேளை, தமது உறவுளை கண் முன்னே காலனிடம் பறி கொடுத்த உறவினர்கள் நீதிகேட்டு கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கையில் இன ஒற்றுமை, நல்லிணக்கம் , நீடித்த சமாதானம் என்பன வெறும் எதிர் பார்ப்பாக மட்டுமே காணப்படும்.

தமிழினத்தின் விடுதலைக்காக அஹிம்சை வழியில் போராட்டங் களை முன்னெடுத்து நியாயமான கோரிக்கைகளை முன்வைத்த போது சிங்களப் பேரினவாதிகள் வன்முறை யைத் தூண்டி மக் களை அழிக்க முற்பட்டதால் தான் தமிழீழ விடுத லைப் புலிகள் உருவாக நேரிட்டது.

தமிழ் மக்கள் வன்முறைகளை தோற்றுவிக்கவும் இல்லை. வன்முறையைத் தூண்டிவிடவும் இல்லை. வன்முறையாளர்களிடமிருந்து தங்களைப் பாதுகாக்கவும் சுதந்திரமாக வாழவுமே விரும்பினர்.

சுதந்திர வேட்கையுடன் பயணித்த தமிழ் மக்களையும் அவர்களை வழி நடத்தியவர்களையும் வஞ்சக மாக அழித்து விட்டு விசாரணைகூட நடத்த தயங்குவது அல்லது மறுப் பது நாட்டின் எதிர்காலத்தைக் கேள் விக்குறியாக்கும்.

எனவே, இலங்கையில் இடம்பெ ற்ற உள்நாட்டு யுத்தத்தில் ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்பதை முதலில் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

இறுதி யுத்தத்தில் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் படையினரி டம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர், அவர்களின் தகவல்களை வெளியிடக்கோரி ஓராண்டைக் கடந்த நிலையில் உறவினர் கள் வீதியோரங்களில் கண்ணீருடன் காத்திருக்கின்றனர்.

அதுமட்டுமன்றி பொய்க் குற்றச் சாட்டுக்களின் பேரில் கைது செய்யப் பட்ட நூற்றுக்கணக்கான தமிழர்கள் அரசியல் கைதிகளாக எந்தவித வழ க்கு விசாரணைகளுமின்றி சிறைக் கூடங்களில் சித்திரவதைகளை அனுபவித் துக் கொண்டுள்ளனர்.

இவர்களின் இந்நிலைக்கு பயங் கரவாதத் தடைச்சட்டம் பிரதான கார்ரணமாகவுள்ளது.

தமிழினத்தின் மீது பல கொடுமைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ள இந் தச் சட்டத்தை ஒழிக்காவிட்டால் மீண்டு மொரு இனவழிப்பை எதிர்கொள்ள நேரிடும் என்றே தமிழ் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இதனால்தான், பயங்கரவாதச் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். அது மட்டுமன்றி இந்தச் சட்டத் தின் கீழ் தமிழ்




மக்களை இலக்கு வைத்து அரச ஆயுத படைகளால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தமிழினத்தை இனப்படுகொலை வரை இழுத்துச் சென்றது என்ப தையும் நன்குணர்ந்துள்ளனர்.

ஆகவே, போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக் கப்படுவதோடு, ஒரு இனத்தை அழிப்பதை நோக்காகக்கொண்டு உருவாக் கப்பட்ட சட்டத்தை இனியும் நடைமு றைப்படுத்த இடமளிக்கக்கூடாது என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

**எஸ். ஆர்.கரன்**

# facebook

# குற்ற உணர்ச்சி



(சென்றவார தொடர்ச்சி)

அதுக்குள்ள படகும் கொஞ்சம் நிலையா நின்னுடுச்சு, அதே நேரத்துல சாமிநாதனோட படகு திடீருன்னு இவன் குதிச்சதுனால குப்புற கவுந்திடுச்சு, உன்னைய போட்டுட்டு உடனே அவன் நீந்தி படகுக்குள்ள இருந்த அவன் மனைவிய காப்பாத்திட்டான். இருந்தாலும், அவர் மெல்ல நிறுத்தினார்.

அப்புறம் என்னப்பா ஆச்சு?

அந்த அதிர்ச்சியினால அவன் மனைவிக்கு புத்தி பேதலிச்சு போச்சு. இவனும் எல்லா மருத்துவமும் பார்த்துட்டான். அப்புறம்தான் அவளை இத்தனை வருசம் குழந்தைய பாக்கற மாதிரி பாத்துட்டு, குழந்தைகளையும் வளத்தி ஆளாக்கிட்டான்.

நான் கூட ஒரு நாள் சொன்னேன், நீ வீட்டுலயே இருந்து உன் மனைவியை பார்த்துக்க, நான் வேணா மாசா மாசம் பணம் கொடுத்துடறேன்னு.

அவன் சொன்னான், என் மனைவியை பாத்துக்கறதுக்கு, நான் உன் கிட்ட சம்பளம் வாங்குனா, அது எனக்கு நல்லாயிருக்காது. நான் எப்படியும் சமாளிச்சு வேலைக்கு வந்துடுவேன்.

நீ கம்பனி ஆரம்பிச்ச பின்னாடி அங்க எனக்கு ஒரு வேலை போட்டு கொடு. நான் உன் கிட்ட வேலைக்கு வந்திடுறேன். இருபத்தி அஞ்சு வருசமா அவளை பாத்து வந்திருக்கான்.

ஒரு நாள் அவனே சொன்னான். அவளுக்கு ஏதாவது ஒண்ணு ஆயிடுச்சுன்னா அதுக்கப்புறம் நான் வேலைக்கு வர்றதை நிறுத்திக்குவேன் அப்படீன்னான்.

நானும் என்னாலதான இவனுக்கு இப்படீ ஆயிடுச்சு.! அப்படீங்கற குற்ற உணர்ச்சியிலயே இருந்தேன்.

சொல்லிவிட்டு குரல் கம்ம சொன்னார், இப்ப நீ அவனுக்கு பதிலா வேற ஆளை எடுத்துக்கலாம். அவர் குரல் சோகத்தில் கரகரத்திருந்தது. (முற்றும்)

# செல்வந்தனாக நூறு வழிகள்



வெற்றி பெறுபவர்கள் வித்தியாசமான பல செயல்களில் ஈடுபட மாட்டார்கள். ஆனால் ஒரு செயலை வித்தியாசமான முறையில் செய்வார்கள்.

நகரத்திலே பெருஞ்செல்வர் அவர். நல்ல செயல்களுக்கு வாரி வழங்கும் ஈகை குணம் கொண்டவர். ஒருநாள் பூங்கா ஒன்றில் உலாவிக் கொண்டிருந்தார். அப்பொழுது கந்தல் ஆடை அணிந்த பிச்சைக்காரன் எதிரே வந்தான்.

பிச்சைக்காரன் : ஐயா ! நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும், என் தோற்றத்தை பார்த்து என்னைப் பிச்சைக்காரன் என்று எண்ண வேண்டாம், நான் ஒரு எழுத்தாளன். புத்தகம் ஒன்று எழுதி உள்ளேன்

பெருஞ்செல்வர்: என்ன புத்தகம் எழுதி இருக்கிறாய் ?

பிச்சைக்காரன்:" செல்வந்தனாக நூறு வழிகள் என்ற புத்தகம் எழுதி உள்ளேன்".

பெருஞ்செல்வர்: சிரித்துக் கொண்டே "எழுத்தாளன் என்கிறாய், செல்வந்தனாக நூறு வழிகள் என்ற புத்தகம் எழுதி உள்ளேன் என்கிறாய் , நீ எழுதிய புத்தகத்திற்கும் உன் வாழ்க்கைக்கும் எந்த தொடர்பும் இல்லையே".

பிச்சைக்காரன்: ஐயா! "செல்வந்தனாக நூறு வழிகளில் இதுவும் ஒரு வழி"

அவனுக்கு கை நிறைய செல்வம் கொடுத்து அனுப்பினார் அந்த பெருஞ்செல்வர்.

# மிரட்டல்

நாங்கள் பேசிக்கொண்டிருந்த போது தான் அன்வருக்கு அந்த அழைப்பு வந்தது. போனை எடுத்து காதில் வைத்தவனுக்கு முகத்தில் ஈ ஆடவில்லை

அப்படி யார்? அழைத்திருப்பார்கள். நானும் நண்பன் காதரும் பலமாக யோசிக்க தொடங்கினோம்.

அன்வர் போனை எடுத்து காதில் வைத்தவன்தான் பதில் என்று எதுவும் பேசவில்லை. இடைக்கிடையில் "சரிங்க, கண்டிப்பாங்க" என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தான்.

இறுதியில் போனை வைத்தவன் ஒரு கிளாஸ் நீரை மட மட வென குடித்துவிட்டு எங்கள் இருவர் முகத்தையும் பயத்தோடு பார்த்தான் !!

"என்னடா ஆச்சு யார்ரா? போன்ல ?" என்றான் காதர்.

"பணம் கேட்டு மிரட்டுறாங்கடா " கலவரம் ஆனான் அன்வர்

பணமா எவ்வளவு ?

பத்தாயிரம்டா மச்சான் என்க் கிட்ட இப்ப அவ்வளவு பணமும் இல்ல. 10ஆம் திகதிக்குள்ள தரலனா முடிச்சிறுவோன்னு வேறயா சொல்றாங்க.

இடையில் புகுந்த நான் யார்ரா? பணம் கேட்கிறது... வேற யாரு இந்த போன் கம்பனிகாறங்கத் தான்.... இப்போ காதர் முகத்தில ஈ ஆடல...

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1438

Search for people, places and things | Nagendram Home

## ஜனார்த்தன்

உயிர்கொடுத்த தாய்க்காக கண்ணீர் விட யோசிக்கும் சிலர்



கண்ணீர் கொடுத்த காதலிக்காக உயிரைக் கொடுக்கின்றனர்

## கவிமாறன்

பெண்ணின் வயிற்றில் பிறக்கும் போது பிறப்பு புனிதமாகின்றது



பெண்ணைத் திருமணம் செய்யும் போது வாழ்க்கை புனிதமாகின்றது...

## நந்ததீபன்


எதிர்ப்பு இருக்கும் என்பதற்காக உங்கள் கருத்துக்களை முடக்கி வைக்காதீர்கள்...



அதிகாரம் பெற்ற எல்லா கருத்துக்களும் ஓர் நாள் நிராகரிக்கப்பட்டவையே!

## அருணன்

தாத்தாக்களைவிடச் சிறந்த ஆசிரியர்கள் இல்லை



பாட்டிகளை விடச் சிறந்த மருத்துவர்களும் இல்லை

## தர்சன்


என் உடையில் தெரியும் வறுமை கண்டு இரக்கம் கொள்ளாதீர்கள்



என் நடையில் தெரியும் நேர்மை கண்டு பெருமை கொள்ளுங்கள்

## கஜமாறன்

வாழ்க்கையில் பிரச்சினைகளாக உள்ளதே என்று எண்ணும் போது...



உன்னை விடக் கஷ்டப்படுபவரை எண்ணிப்பார் பிரச்சினை நிம்மதியாக கடந்து போய்விடும்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்



வலம்புரியின் மருத்துவச்சுடர் 135

## சத்தத்தால் நித்தமும் அசுத்தமாகும் சுற்றாடல்





WHO எனப்படுகின்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்பீட்டின்படி 25% ஆன நோய்கள் சுற்றாடல் மாசடைவதால் ஏற்படுகின்றன என்பது அறியப்பட்டிருக்கிறது.

தேவையற்ற சத்தங்கள் சுற்றாடல் மாசடைவதற்கு முக்கிய காரணியாக அமைகின்றன. சுற்றாடலை அசுத்தமாக்கும் பிரதான சத்தங்களாக இயந்திரங்களின் இரைச்சல், வாகனங்களின் இரைச்சல், வாகனங்களால் எழுப்பப்படும் ஹோரன் ஒலி, ரி.வி மற்றும் வீட்டு உபகரணங்களிலிருந்து வரும் ஒலி, ஒலிபெருக்கிகளினால் ஏற்படும் சத்தம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒலியினால் சுற்றாடல் மாசுபடும் போது பல நோய்நிலைகள் மனிதனுக்கு ஏற்படலாம்.

**அவையாவன :**

மன அழுத்தம், மனச்சோர்வு, ஞாபகமறதி, நித்திரைக் குழப்பங்கள், உயர்குருதி அமுக்கம், இருதய நோய்கள் மாரடைப்பு, கேட்கும் திறன் குறைவடைதல், கல்வி கற்றல் திறன் குறைவடைதல் போன்றவையாகும்.

நல்லிசைகளாலும் நல்ல அறிவுரைகளாலும் மக்களுக்கு நல்ல பயன்கள் ஏற்படுகின்றன. இதற்கான பயன்களை மக்கள் வணக்கத்தலங்களுக்கோ அல்லது அதற்கான நிலையங்களுக்கோ சென்று பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் இதனை ஒலிபெருக்கிகள் மூலம் தினமும் ஒலிபரப்பினால் அந்தச் சுற்றாடல் மாசடையும். மக்களை நோயாளிகள் ஆக்கும். மக்களுக்குக் கெடுதல் விளைவிக்கும் எந்தச் செயலையும் இறைவன் விரும்பமாட்டான் என்பது எமக்குத் தெரியும்.

எனவே தொடர்ச்சியான ஒலி பெருக்கிப் பாவனையை மத நிறுவனங்களில் தவிர்த்துக் கொள்வது நல்லது.

வீதிகளில் அநாவசியமாக "ஹோரன்" அடிப்பதையும் தவிர்த்துக் கொள்வோம். நல்ல முறையில் வாகனத்தை ஓட்டும் திறனும் மன அமைதியும் சுய நலமற்ற மனப்பாங்கும் இருந்தால் "ஹோரன்" அடிப்பதை 95 வீதத்தால் குறைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு மனிதனும் தெருக்களிலே பலமணி நேரங்களைச் செலவிடுகின்றான்.

பலர் தெருவோரங்களில் குடியிருக்கின்றனர். எனவே தெருக்களில் ஏற்படும் சத்தங்களைக் குறைப்பதன் மூலம் மக்களுக்கு ஏற்படும் பெருமளவு தாக்கங்களை குறைத்துக் கொள்ள முடியும்.

ஒவ்வொருதடவையும் "ஹோரன்" இல் கைவைக்கமுன் எம்மனதில் கை வைத்துக் கேட்போம். இந்த "ஹோரன்" அவசியந்தானா என்று.

சத்தம் இல்லாத அமைதி ஆரோக்கியத்துக்கு உதவும். நாம் தொலைத்துவிட்ட அமைதியும் ஆரோக்கியம் நிறைந்த உலகமும் மீண்டும் உருவாகும் என நம்புவோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது மருத்துவ நிபுணர்

## இயற்கையை காக்கும் தேனீக்களின் தேன் மனிதனை காக்கும்...



தேன் மிகவும் சுவையானது அதனால் தான் நம் முன்னோர்கள் தமிழை தேனுடன் ஒப்பிட்டு தேனிலும் இனியது தமிழ் என்று சொல்லி வைத்திருக்கிறார்கள்.

பண்டைய தமிழ்மருத்துவ முறைகளிலே தேன் ஒரு முக்கிய பாங்கு வகித்திருக்கிறது.

இது மருத்துவத்துறையில் 5000 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இத்துணை அதீத இனிப்புச் சுவை கொண்ட தேன் உண்மையிலேயே உடல் நலத்துக்கு பாதுகாப்பானதா? இது சம்பந்தமான ஆய்வுகள் ஏதாவது நடத்தப்பட்டிருக்கின்றனவா? நீரிழிவு உள்ளவர்கள் இதனை பாவிக்கலாமா? என்பது போன்ற பல வினாக்கள் எம்முன்னே எழுகின்றன.

தேன் என்றால் என்ன? அதில் என்னென்ன பதார்த்தங்கள் அடங்கி இருக்கின்றன என்பதை நாம் முதலில் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

தேனிலே பிரக்ரோஸ், குளுக்கோஸ், மோல்ரோஸ், சுக்குரோஸ் எனப்படும் 4 வகையான வெல்லங்கள் காணப்படுகின்றன.

அத்துடன் இத்தேனிலே புரதத்தின் அடிப்படை அலகுகளான அமினோ அமிலங்கள் காணப்படுகின்றன.

இவற்றிற்கு மேலதிகமாக தேனிலே பெருமளவு விற்றமின்கள் செறிந்து காணப்படுகின்றன. விற்றமின் B2, B4, B5, B6, B11, விற்றமின் K, விற்றமின் C, போலிக் கபமிலம் போன்றன பல விற்றமின்கள் ஒன்றாகக் காணப்படுகின்றன.

இவற்றோடு பல முக்கியமான கனியுப்புக்களையும் இந்தத் தேன் உள்ளடக்கி இருக்கிறது. இரும்பு, நாகம், கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம், செலேனியம், மங்கனீசு போன்ற பல கனியுப்புக்களின் கலவையாகவும் இது காணப்படுகின்றது.

இவை அனைத்தையுமே தேன் உள்ளடக்கி இருப்பதால் இது உலகிலே கிடைக்கக்கூடிய இயற்கையான விற்றமின் ரொனிக்குகளில் முதல் தரமானதாக கணிக்கப்படுகிறது.

தேனிலே நோய்க்கிருமிகளை கொல்லும் தன்மையும் அவற்றின் பெருக்கத்தை தடுக்கும் தன்மையும் இருப்பது பல ஆய்வுகளின் மூலம் தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

காயங்களுக்கு இதனை பூசிவிடும்பொழுது இது தொற்று ஏற்படாமல் தடுக்கும் ஒரு கவசமாகவும் தொற்று ஏற்படுத்தும் கிருமிகளை கட்டுப்படுத்தும் ஒரு மருந்தாகவும் தொழிற்படுவதாக ஆய்வுகள் காட்டிநிற்கின்றன.

அத்துடன் தேனானது ஒரு அன்ரி ஒக்சிடென்ற் ஆகத் தொழிற்பட்டு உடற்கலங்களை பாதுகாக்க உதவுகிறது என்பதும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

தேன் சம்பந்தமான ஆரம்ப ஆராய்ச்சிகள் குருதியிலே HDL எனப்படும் நல்ல கொலஸ்ரோலை அதிகரிப்பதற்கும் trigliceride எனப்படும் தீய கொழுப்பை குறைப்பதற்கும் தேன் உதவிபுரிகின்றது என்பதை காட்டி நிற்கின்றது.

உடலில் ஏற்படும் அழற்சி பல நோய்களுக்கு வித்திடுகின்றன. தேன் Inflammation என்று சொல்லப்படுகின்ற உடலில் ஏற்படும் அழற்சிகளை கட்டுப்படுத்துகின்றது. இதன்காரணமாக இது நாட்பட்ட வரண்ட இருமலையும் தொண்டை அழற்சியையும் கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் குடலில் ஏற்படும் அழற்சிகளை குறைத்து வயிற்றோட்டத்தை கட்டுப்படுத்த உதவுகிறது.

ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தேன் கொடுப்பது நல்லதல்ல.

நீரிழிவு உள்ளவர்களுக்கு தேன் சிறந்ததா? என்பது சம்பந்தமாக பல்வேறுபட்ட ஆராய்ச்சி முடிவுகள் கிடைத்தவண்ணம் இருக்கின்றன. நீரிழிவு உள்ளவர்களில் இரத்தத்தின் கொழுப்பை குறைப்பதற்கும் இன்சுலினின் சுரப்பு வீதத்தை அதிகரிப்பதற்கும் தேன் உதவுகின்றது.

ஆனால் அதிகளவு தேனை உட்கொண்டால் நீரிழிவு உள்ளவர்களிலே குருதி குளுக்கோசின் அளவு அதிகரிப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அதிகரிப்பானது அதனை ஒத்த சீனி உட்கொள்ளும் பொழுது ஏற்படும் அதிகரிப்பினும் பார்க்க குறைவாக காணப்படுகிறது.

எனவே நீரிழிவு உள்ளவர்கள் அதிகளவு தேன் உட்கொள்ளுவது பாதுகாப்பானதா என்பது பற்றி விரிவான ஆய்வுகள் பல செய்யப்படவேண்டிய தேவை இருக்கிறது.

ஆனால் தேனானது சீனியிலும் பார்க்க பல மடங்கு பாதுகாப்பானது என்பது தெளிவானது. உறுதியானது.

உலகளாவிய அளவிலே வருடம்தோறும் 1.3 million தொன் தேன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. காரணம் இதனை உணவாகவும் மருந்தாகவும் விற்றமின் ரொனிக் ஆகவும் வெளிப்பூச்சு மருந்தாகவும் பலராலும் பாவிக்கப்பட்டு வருவதால் இதன் தேவை அதிகமாக இருக்கிறது.



எமது பிரதேசங்களிலே தேன் உற்பத்தியின் அளவு மிகவும் குறைவாக இருக்கிறது. இது ஊக்குவிக்கப்பட வேண்டும். பயிர்களுக்கு மருந்து விசிறுவது தேனீக்களை அழித்துவிடுகின்றது.

ஒரு விவசாயி தனது தோட்டத்திற்கருகே தேனீ வளர்க்கிறான் என்றால் அவன் ஒரு இயற்கை விவசாயி என்பதை உறுதிப்படுத்த வேறு சான்றுகள் தேவைப்படாது. மருந்தடிக்கும் சூழலில் தேனீ வளர்க்க முடியாது. எனவே தேனீ வளர்ப்பு மருந்து தெளிக்காத பயிர்ச் செய்கையையும் மறைமுகமாக ஊக்குவிக்கும்.

எனவே தேனீ வளர்ப்பில் நாம் கூடிய அக்கறை செலுத்தி இயற்கையை பாதுகாப்பதுடன் தேன் உற்பத்தியையும் பெருக்க முயற்சி எடுக்க வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது மருத்துவ நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்